Reg.No.QD/76/NEWS/2005

விலை 15/=


# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு

பக்கம் - 24

வார வெளியீடு

நாதம் - 02 யூலை 01 - 07/ 2005 வெள்ளி - 09








## தற்கொடையீந்த மறவர்கள்

## ? சவால்களை தாண்டுமா











## பொதுக்கட்டமைப்பு.....

F:\Weekly COVER PAGE 01\01-07-2005.cdr

### சிந்தனைக்கு

இந்திய இராணுவம் எமது தாயக மண்ணில் காலடியெடுத்து வைத்த தினத்தையே எமது போராட்டத்தின் இருண்ட நாளாக நான் கருதுவேன், எமது போராட்டத்தில் இந்திய இராணுவம் தலையீடு செய்தது, ஒரு இருண்ட அத்தியாயம் என்றே சொல்ல வேண்டும்.



தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110,
078-8723447, 078-8722960.
இணையத்தளம் : www.battieezhanatham.com
www.battieelanatham.com
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
editor@battieelanatham.com
01.07.2005

## உடன்படிக்கைகள் தமிழின விடுதலைக்கான பொறி

தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் உடன்படிக்கைகளால் பின்தள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது. ஏனெனில் போர் நிறுத்த உடன்படிக்கை, பொதுக்கட்டமைப்பு என்பன தமிழினத்தின் விடுதலை நோக்கிய இலக்கினை எய்துவதற்காக வைக்கப்பட்ட பொறியாகவே கருதவேண்டியுள்ளது.

தமிழினம் விடுதலை வரலாற்றில் தோல்வியை நோக்கிச் செல்லவில்லை பலவீனப்படவுமில்லை. தாயக சுதந்திரத்தை அடைவதற்காக தேசியத் தலைவரின் சாணக்கியத்துடன் தமிழினம் வலிமையுடன் போராற்றல் பெற்று நின்றது என்றால் வியப்பில்லை. கடந்த இரண்டாயிரமாம் ஆண்டு சித்திரை மாதம் தமிழின விடுதலை வரலாற்றில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றக் கொடுத்தது என்றால் வியப்பில்லை. எதிரிகளின் இதயமாக வெல்லமுடியாத இலக்கு என சிங்களப் படைகள் பெருமிதத்துடன் கணித்து இருந்த ஆனையிறவுப் பெரும்தளம் விடுதலை வேங்கைகளின் போராற்றலினால் வெற்றி வரலாறாகப் படைக்கப்பட்டது.

சிங்களப் படைகள் புறமுதுகு காட்டி ஓடினர். இத்தகைய நிலையில் விடுதலைப் போராளிகளின் வீரமிகு போராற்றலினால் 2000ம் ஆண்டு சித்திரை 30 ம் நாள் பளை நகரம் போராளிகளால் மீட்கப்பட்டது. பின்னர் யாழ் நகராட்சி எல்லைக்குள் நுளைந்த போராளிகள் தனங்கிளப்பு, கைதடி, நாவற்காடு என எதிரிகளின் பிடியில் இருந்த தாயக மண்ணை மீட்டு வெற்றிச் சங்கை ஊதினர்.

விடுதலைப் புலிகள் ஒரு சிறிய படையணிதான் என பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் சூளுரைத்த சிறிலங்காவின் பிரதி படைத்துறை அமைச்சர் ரத்வத்தை கண்டி யாழ் ஏ.9 வீதியைத் திறப்பதாகவும் சூளுரைத்திருந்தார். அவரது கருத்துக்களைத் தென்னிலங்கை சமூகம் நம்பிக்கை கொண்டிருந்த நிலையில் ஆனையிறவு பெரும்தள மீட்சியும் யாழ்குடா நாடு நோக்கிய போராளிகளின் படை நகர்வும் தென்னிலங்கை மக்களைக் கதிகலங்க வைத்தது.

யாழ் குடா நாடு நோக்கி நகர்ந்த போராளிகளின் படையணிகள் குடாநாட்டை அரை பிறை வடிவாக முற்றுகையிட சிறிலங்கா விமானப் படையினரின் பெரும் தளமாகவிருந்த பலாலியில் விமானப் படைச் சிப்பாய்கள் கிலி கொண்டனர். ஆனையிறவை நிர்மூலம் செய்த விடுதலைப் புலிகள் பலாலியை விட்டு வைக்கமாட்டார்கள் என்பதை உணர்ந்த சிங்கள அரசு சர்வதேச நாடுகளுக்கு அபாயச் சங்கு ஊதின. கடல்வழி, தரைவழிகள் துண்டிக்கப்பட்ட நிலையில் பலாலி விமானத் தளத்தில் குவிக்கப்பட்டிருந்த முப்பதாயிரம் படையினரையும் மீட்பதற்கான உதவிகளை வழங்குவதற்கு உலக நாடுகள் முன்வந்தன. இவ்வாறு பலமிழந்து முதுகெலும்புடைந்த சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்க முடியாது என்பதை உணர்ந்த நிலையில் தமது படை ஆற்றலை மீளக்கட்டி எழுப்புவதற்கான கால அவகாசத்தைத் தேடும் நோக்கில் சமாதான வழிமுறைகளைப் பின்பற்றுவது போன்ற ஒரு மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தி சர்வதேச சமூகத்தினூடாக சமாதானத்துக்கான குரலை ஒலிக்க விட்டது.

உண்மையில் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று ஏற்படாது விட்டிருந்தால் பலாலி விமானத் தளம் இன்று எவ்வாறு இருக்கும் என்பதை ஆனையிறவு சமருடன் ஒப்பிட்டுப் பார்த்தால் புரிந்திருக்கும். எனவே போர் நிறுத்தம், போர் நிறுத்த உடன்படிக்கை என்பன எல்லாம் சிங்கள அரசுகள் தமிழினம் தமது உரிமையை மீட்பதற்கான போரியல் வரலாற்றில் வெற்றியினை அடைவதற்கு வைக்கப்பட்ட தடைக்கற்கள் என்பதை உணர வேண்டும்.

சமாதான வழிமுறைகளில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் மனோ நிலையில் சிங்கள ஆளும் தரப்புகளோ அல்லது வேறு சிங்கள சமூகமோ தயாராகவில்லை. உலக வல்லரசுகளிடமிருந்து நவீன போர்க் கப்பல்கள், விமானங்கள், பயிற்சிகள் என்பவற்றைப் பெறுவதுடன் படை வலுவை அதிகரிக்கச் செய்து தமிழினத்தின் மீது போரைத் தொடுப்பதற்கான யுக்தியுடன் தான் தற்போதும் செயற்படுகின்றனர்.

தற்போது நிறுவப்பட்டுள்ள சுனாமிப் பொதுக்கட்டமைப்பும் அதே பொறி என்றுதான் கருத வேண்டியுள்ளது. சுனாமிப் புனரமைப்பு என்ற போர்வையில் சமாதான வழிமுறைகளை இழுத்தடித்துக் கொண்டு தமிழினத்திற்கு பணம், உதவி, சேவை என்ற வழிமுறைகள் மூலம் தமிழ்த் தேசிய விடுதலை உணர்வை மழுங்கடிக்கச் செய்யும் மாயச் சூழ்ச்சிதான் இந்தப் பொதுக்கட்டமைப்பு என எண்ணத் தோன்றுகின்றது.

எனவே உடன்படிக்கைகள் எவற்றாலும் தமிழினம் விடுதலையை எய்திவிட முடியாது என்பது கடந்த கால வரலாறும் தற்கால வரலாறும் உணர்த்தி நிற்கின்றது என்பதே உண்மை.

# யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கடிதம்

## யாழ்ப்பாணத்திலிருந்து அன்புக்குரிய -- தென்தமிழீழ மக்களுக்கு --

எனது கடந்த கடிதத்தில் விரைவில் சிறிலங்காவில் தேர்தல் நடைபெறும் என்றும், இத் தேர்தல் எம் மீது திணிக்கப்படும் அடுத்த தேர்தல் என்றும் குறிப்பிட்டிருந்தேன். உண்மையில் நாம் எமது பாட்டைப் பார்த்து எமது நாட்டின் வளர்ச்சியைக் கவனித்துக் கொண்டிருப்போம், அவர்கள் தமது நாட்டில் தேர்தலை நடத்தினால் என்ன, விட்டால் என்ன, என்றிருக்கலாம். ஆனால் அந்நிலை இன்னமும் வரவில்லையே என்ற ஏக்கம் தான் இன்று உள்ளது. எமது ஆட்சி எம்மிடம் இருந்திருக்குமானால் இத் தேர்தல் எம்மீது திணிக்கப்பட்டிருக்க முடியாது.

தற்பொழுது சிறிலங்காவில் நடக்கும் சில அரசியல் கோமாளித்தனங்களைச் சிறிது கவனிப்போம். ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணி ஆட்சி அமைத்த பொழுது இருந்த நிலைமையையும், தற்பொழுது இருக்கும் நிலைமையையும் பார்த்தால் சிரிப்புத்தான் வரும். இதனாற் தான்" அரசியல், போக்கிரிகளின் புகலிடம்" என்று அன்று சொன்னார்கள் போலும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைத்தபொழுது அனுராவை அல்லது கதிர்காமரைப் பிரதமராகக் கொண்டு வரவே ஜே.வி.பி பெரிதும் விரும்பியது. மஹிந்த ராஜபக்ஷவை அது விரும்பவில்லை.

ஆனால் தற்பொழுது எல்லாம் தலைகீழாக உள்ளது. ஜே.வி.பியைக் கண்டிக்க எவருக்கும் உரிமை இல்லை, பிரதமராகவோ, அமைச்சர்களாகவோ, பிரதி அமைச்சர்களாகவோ, இன்று பதவியில் இருப்பவர்கள் ஜே.வி.பி இல்லாதிருந்தால் பதவி பெற்றிருக்க முடியுமா? என்று ஜே.வி.பிக்காக வக்காலத்து வாங்கினார் அனுரா பண்டாரநாயக்கா.

ஆனால் இன்று ஜே.வி.பி சிறிலங்காவின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளதென்றும், ஜே.வி.பியைச் சாடுகின்றார் அனுரா. மறுபுறம் பார்த்தால் இதுவரை ஜே.வி.பியை உள்ளூர எதிர்த்து வந்த மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் உறவைக் கட்டி வளர்க்க விரும்புகிறார். அதற்காகப் பாடுபடுகிறார். இந்தத் தலை கீழ் மாற்றங்கள் அரசியல் வாதிகளின் குத்துக்கரணங்கள் மக்களைச் சிரிக்க வைக்கும் சுவையான நிகழ்வுகளாகச் சிறிலங்காவில் நடந்து கொண்டிருக்கின்றன.

தேர்தல் என்று வரும் பொழுது நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதா அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதா என்ற தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தினால் ஜே.வி.பியின் பலம் வெகுவாகக் குறையும். அதேநேரம் பொதுசன முன்னணியின் பலமும் குறையும். இந்நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்பாக இருக்கும். இவ்வாறான நிலை ஜனாதிபதித் தேர்தலிலும் ரணிலுக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்திக் கொடுக்கும். ஜனாதிபதித் தேர்தல் வரை நாடாளுமன்றத்தை இழுத்துக் கொண்டு வந்தால் என்ன என்றும் சிந்திக்கிறார்கள்.

அப்படியெனில் சிறிலங்காவின் சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார்? மஹிந்தவா? அனுராவா? என்ற சர்ச்சை எழுகின்றது. பண்டார நாயக்கா வம்சத்தின் கடைசி வாரிசு நானே என்று கூறிக் கொள்ளும் அனுரா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவே முயற்சிப்பார். தற்போதய நிலையில் சந்திரிகாவும் இதனை ஆதரிக்கக் கூடும்.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷ விடப்போவதில்லை. மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்டால் ஜே.வி.பி சிலவேளை ஆதரிக்கக் கூடும் என்ற நிலை உள்ளதால் தான் ஜே.வி.பியுடன் உறவை வளர்த்துக் கொண்டுள்ளார் மஹிந்த ராஜபகஷ. இவ்வாறான சிக்கல்கள் ரணிலுக்கு வாய்ப்பான ஒரு நிலையை ஏற்படுத்திக் கொடுத்து விடும்.

இப்படியான சூழ்நிலையில் தமிழ் மக்களது, மலையகத் தமிழர்களது, முஸ்லிம்களின் வாக்குகள் தான் தீர்மானிக்கும் காரணிகளாக அமையப் போகின்றன எனலாம்.

ஜனாதிபதியாக யார் வந்தாலும் அவர்கள் சிங்கள பௌத்த மேலாதிக்க எண்ணங்களைக் கொண்டவர்களாகவே இருப்பார்கள். எனவே இதனை எதிர்கொள்ளத் தமிழ்மக்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதே இக்கடிதத்தின் மூலம் நான் தரும் வேண்டுகோளாகும். தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு, மாணவர்களாக இருந்த மௌனகுரு போன்றவர்களின் அன்றைய பங்களிப்பைப் பற்றி முன்னர் எழுதியிருந்தேன்.

அந்த வரிசையில் மேலும் ஒரு நினைவு எழுகின்றது. அதனையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வது நல்லது என்று நினைக்கின்றேன். அன்று யாழ்ப்பாணத்திலிருந்தவர்கள் வில்லுப்பாட்டு என்றால் என்னவென்று நேராகக் கண்டதில்லை. திருச்சி, சென்னை வானொலிகளூடாகவே அதைக் கேட்டிருப்பார்கள்.

ஆனால் வில்லுப்பாட்டை 1960 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து ஊர்கள் பலவற்றில் நிகழ்த்திக் காட்டிப் பெரும் பாராட்டைப் பெற்றவர் மீன்பாடும் தேனாட்டைச் சேர்ந்தவர் என்றால் பொய்யில்லை. தந்தை செல்வாவுடன் இணைந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்தவர்களில் முதன்மையானவர் கு.வன்னியசிங்கம். கோப்பாய்க் கோமான் என்று புகழப்பட்ட வன்னியனார் தமிழினத்திற்குஆற்றிய பணிகளைப் பற்றிய வரலாற்றை வில்லிசையாக மக்களுக்கு வழங்கியவர் மட்டக்களப்புத் தந்த இரா. சிவலிங்கம் ஆவார்கள்.

தமிழினத்தின் ஒற்றுமை, வேறுபாடுகளைக் களைவதில் வன்னியனார் ஆற்றிய பணிகள், 1956 இல் அம்பாறையில் பேரினவாதிகளால் தமிழ்மக்கள் விரட்டி அடிக்கப்பட்ட பொழுது தன்னந்தனியாக வன்னியனார் அம்பாறை மண்ணிற்குச் சென்றது, சிங்களக் குடியேற்றத்தின் ஆபத்தை எதிர்த்துத் தமிழ் மக்களைக் குடியேற்ற அழைத்துச் சென்றது போன்ற பலவகைப் பணிகளையும் யாழ்ப்பாணத்து ஊர்களில் வில்லுப்பாட்டு மூலம் இரா.சிவலிங்கம் எடுத்துக் கூறித் தமிழின ஒற்றுமையை வலியுறுத்தினார்.

இவருடன் அவ்வில்லிசைக் குழுவில் பலர் இருந்தாலும் ஒருவரது பெயர் இன்றும் நினைவில் உள்ளது. தன் இனிய குரல்வளத்தால் அனைவரையும் கவர்ந்த முழக்கம் முருகப்பாவாகும். அவரது பாடல் மக்களைக் கட்டிப் போடவைக்கும். சிவலிங்கத்தின் கதை மக்களை உணர்வு கொள்ள வைக்கும். இவர்களுடன் இணைந்து வழிப்படுத்தியவர் சங்கீத பூசணம் இராசு ஆவார். இவ்வளவு தூரம் தமிழ் மக்களை அன்று ஒற்றுமைப்படுத்திய இளைஞர்களால் தான் இன்றும் எமது ஒற்றுமை இறுக்கமாக உள்ளது.

இது சந்தர்ப்பவாதிகளாலும் சுயநலமிகளாலும், துரோகிகளாலும் சிதறடிக்கப்பட விட முடியாது. எமது விடுதலையை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் ஒற்றுமையை மேலும் வளர்த்து உலக நாடுகளுக்கு உண்மையை உணரவைப்போமாக.

அன்புடன்
மாசிலான்



# ‘சுனாமிப் பொதுக்கட்டமைப்பு முஸ்லிம் மக்களை ஒரு போதும் புறம் தள்ளாது; பொறுத்திருந்தால் இது புரிய வரும்.’

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சி.அகமட்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சி.அகமட் சிறந்ததோர் முஸ்லிம்~தமிழ் அரசியல் அறிஞர். தமிழீழத் தேசியத் தலைவர் மீதும் தமிழ் மக்கள் மிகுந்த விசுவாசம் உடையவர். ‘தேசியத் தலைவரது வழியே தனிவழி’ என்பதனைத் தம்முயர் கொள்கையாகக் கொண்டவர். புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையவர்கள் ‘இருதயத்தின் ஈரிதழ் போல் ஆனோரே இந்து முஸ்லிம் இனங்கள் யாம்’ என்று அன்று சொன்னது போல இவரும் தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான இறுக்கத்தையும், நெருக்கத்தையும் பற்றி நன்கறிந்தவர்.

தற்போது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட சுனாமிப் பொதுக் கட்டமைப்பு தொடர்பாக சரியான புரிதல்களும், விளங்கங்களும் அறியாமல் அதற்கெதிராக பல்வேறு மட்டங்களிலும் எதிர்ப்பலைகளும் வெளிக்கிழம்பியுள்ளன. முஸ்லிம் மக்கள் மத்தியிலும் சரியான தெளிவற்ற தன்மையையே இது தொடர்பில் காணமுடிகிறது. இவ்வாறான சூழ்நிலையில் உள்ளதை உள்ளபடியே கூறி மக்களுக்குத் தென்பூட்ட வேண்டிய தேவை முஸ்லிம் தலைமைகளுக்கு கட்டாயம் இருக்க வேண்டும். அத்தகைய அறிவூட்டல்களையும், புரிதல்களையும் அழகாக விளக்கவல்ல அரசியல் தலைவராகவே இவரைக் காணமுடிகிறது.

எனவே இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் இவரது கருத்துக்களை வெளிவிடுவதன் மூலம் தமிழ்~முஸ்லிம் மக்களிடையே நல்லுறவைக் கட்டி எழுப்பலாம் என நினைக்கிறோம். அந்த வகையிலேயே அவருடனான செவ்வியினை வாசகர்களாகிய உங்களுக்குத் தருகின்றோம்.

***கேள்வி:-* முதலில் உங்களையும், உங்களது அரசியல் அனுபவங்கள் பற்றியும் சொல்லுங்கள்....?**

***பதில்:-*** நான் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்பு சில பொது வேலைகளைச் செய்து வந்தேன். அரசசார்பாக! முக்கியமாக கிளாக்காக வேலை செய்து வந்தேன். பின்பு கல்முனையிலே போஸ்ட் மாஸ்ரராக இருந்தேன்.

இதன் பின்பு கமத்தொழிலிலே ஈடுபட்டேன். கமத்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அரசியலில் ஈடுபடவேண்டும் என்ற ஆசை எனக்கும் வந்தது. இந்த ஆசையின் தூண்டுகோல்களாக எனது தமிழ் முஸ்லிம் நண்பர்கள் இருந்தார்கள். சூழ்நிலையும் இதற்கு இடம் தந்தது. எனவே நான் முதன் முதலாக அரசியலில் இறங்கி எலக்சன் கேட்டு நான் தோற்றேன்.

இரண்டாம் முறையாக தமிழரசுக் கட்சியிலே கேட்டு வெற்றி பெற்றேன். வெற்றி பெற்றதும் என்னாலே இயன்ற அளவுக்கு தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான கசப்புணர்வுகளை மாற்றி அவர்களிடையே ஐக்கியத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்தும் முகமாகப் பாடுபட்டேன்.

இவ்வாறு அரசியலில் இருக்கும் காலத்தில் எவரையும் புண்படுத்தாமல் திறம்பட அரசியலை நடத்திக் கொண்டு வந்தேன். இதனைப் பொறுக்க முடியாத சில தீய சக்திகள் ஒன்றிணைந்து என்னையும் என் ஆதரவாளர்களையும் எதிர்த்தார்கள். பல தீய நடவடிக்கைகளில் இறங்கினார்கள். இதற்கெல்லாம் முகம் கொடுத்து துணிந்து நின்றேன்.

பின்னர் சுயேற்சையாக சொந்தக் காலிலே நிற்கத் தொடங்கினேன். தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக பாடுபட்டேன். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் மறுமொழி சொல்லி அவர்களைத் திருத்திப்படுத்தி அவர்களை வளர்த்து வந்தேன்.

1966ஆம் ஆண்டு நான் தனியாக எலக்சன் கேட்டபோது எனக்கென்று ஆறாயிரம் ஏழாயிரம் வாக்குகள் கிடைத்தது. நான் தோற்ற நிலையில் கூடதமிழ் முஸ்லிம் மக்களது உறவை வலுப்படுத்துவதற்காகப் பாடுபட்டு வந்தேன். அதிலிருந்து இப்போது வரைக்கும் அவ்வாறே செயற்பட்டுக் கொண்டு வருகிறேன்.

இந்தச் சுனாமி நிவாரணம் வந்த பிறகு தமிழ் முஸ்லிம் ஆகிய இரு சமூக மக்களுக்கும் என்னால் இயன்றளவு பக்கச் சார்பின்றி உதவி இருக்கிறேன். உதவி வருகின்றேன். இன்னும் உதவுவேன். ஆண்டவன் பக்கபலமாக நின்றால் எனது இந்தச் சேவை மேலும் வளர்ச்சி அடையும்.

***கேள்வி:-* தேசியத் தலைவர் பற்றியும், அவரது கொள்கைகள் பற்றியும் உங்களது அபிப்பிராயம் எவ்வாறு இருக்கிறது?**

***பதில்:-*** இதில் எனக்கு எல்லையற்ற நம்பிக்கை இருக்கிறது. ஏனெனில் ஏனைய கட்சிகளில் பல தலைவர்கள் இருப்பார்கள். ஆனால் பிரபாகரனோ ஒரே கட்சி, ஒரேசொல். அச்சொல்லைச் சொன்னபடியே நிலைநாட்டும் வல்லமையும் அவருக்கே உண்டு. இதனை நான் பல தடவை பார்த்தும், கேட்டும், அனுபவித்தும் வந்திருக்கிறேன்.

தமிழ் முஸ்லிம் மக்களின் உறவினை வளர்ப்பதிலும் உன்னிப்பாகச் செயற்பட்டு வருபவர் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள். இது என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது. இதனால்தான் நானும் என்னால் முடிந்த அளவுக்கு இந்த தமிழ் முஸ்லிம் உறவை ஏற்படுத்துவதற்காகவும், வளர்ப்பதற்காகவும் அவரது வழி நின்று செயற்பட்டு வருகிறேன்.

இந்த இரு சமூகத்துக்குமான உரிமைகளை மீட்டுத் தரக்கூடிய அதிக பலம் கொண்ட தலைவர் ஒரேயொருவர் உள்ளார் என்றால் அது பிரபாகனைத் தவிர வேறு யாருமே அல்ல என்றால் மிகையாகாது. இதனை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அவர் தமிழ் முஸ்லிம் மக்களை வெவ்வேறாகப் பிரித்துப் பார்ப்பவர் அல்லர். இரு சமூகத்தவரையும் தம் இருகண்களாகவே பார்ப்பவர் மதிப்பவர். இவற்றைக் கருத்திற் கொண்டே செயற்படுபவர்.

தமிழருக்குக் கிடைக்கின்ற உரிமைகள், சலுகைகள் அனைத்தும் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்னும் உயரிய சிந்தனையினை உடையவர் பிரபாகரன் அவர்கள். அவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலுமே முஸ்லிம் மக்களைப் புறம் தள்ளியவர் அல்ல. அவர்களையும் ஒன்றிணைத்தே தமது செயற்பாடுகளை நெறிப்படுத்தி வருகின்றார்.

கொண்ட கொள்கையில் பற்றுறுதியும் அதனை அடைவதற்கான தீவிர முயற்சியும் தூர நோக்கும், சமூக நலனும் என அனைத்திலுமே அவர் தனித்துவம்தான். உலகத்திலே இப்படியானதொரு ஒப்பற்ற தலைவரை நான் இது வரையில் கண்டதில்லை.

***கேள்வி:-* முஸ்லிம் தலைமைகளும் இப்போது தமக்கும் ஒரு தனி அலகு வேண்டும் என்று கேட்கிறார்களே இது பற்றிய உங்களது கருத்து?**

***பதில்:-*** முஸ்லிம் தலைவர்கள் இருக்கிறாங்கதான். இவர்களுக்கு பதவிதான் முக்கியம். பத்துப் பேருக்கு மூன்று தலைவர்மாராக இருக்கிறார்கள். கம்பளைத் தலைவர் ஒன்று. கண்டித் தலைவர் ஒன்று. அக்கரைப்பற்று தலைவர் ஒன்று. இப்படித்தான் பத்துப் பேருக்கு மூன்று தலைவர்.

இவங்களெல்லாம் மக்கள் பிரச்சினைகளை, அபிலாசைகளைப் பற்றி அறியதாவர்கள். அறியும் ஆசையும் அவைகளைத் தீர்த்து வைக்கும் சிந்தனைகளும் அறவே இல்லாதவர்கள். எனவே இவர்கள் எப்படித் தலைவர்களாக இருக்க முடியும்? மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு மறு மொழி அளிக்கும் சக்தி அற்றவர்கள். மக்களுக்காக அன்றி தமக்காகத்தான் தலைவர்களாக உள்ளவர்கள். இவர்களுக்கு எதைப் பற்றியுமே தெரியாது. எதைப் பற்றியுமே விளங்காது. இப்படித்தான் இவர்களது போக்கு.

இப்போது ‘முஸ்லிம் மக்களுக்காக தனி அலகும்’ கேட்கிறார்கள். எல்லாம் நாசுக்காகவே. தமிழர்கள் எதைத் தொடங்குகிறார்களோ, எதைக் கேட்கிறார்களோ அதுதான் தங்களுக்கும் தேவை. தாமாக சிந்தித்து இப்படியான முடிவுகளை எடுக்க மாட்டார்கள். ஆரம்பத்திலே இதனைக் கேட்டிருக்கலாமே. கதைத்திருக்கலாமே. கையையும், வாயையும் இறுக்கிக் கட்டிக் கொண்டு நின்று விட்டு இப்போது தனி அலகாம். எப்படி இவர்களுக்கு இந்தத் துணிவு வந்தது. தமிழ் மக்களோடு ஆரம்பத்தில் இருந்தே இதற்காக ஒன்று சேர்ந்து நின்றிருக்கலாமே நிற்கல்ல. ஆரம்பத்தில் வாயைத் திறந்து கேட்டார்களா கேட்கல்ல. எனவே இவர்களது கோரிக்கை நியாயம் அல்ல.

தலைவர் என்றால் ஒரு இனத்துக்கு அல்லது சமூகத்துக்கு ஒருவராகத்தான் இருக்க வேண்டும். பத்துப் பேருக்கு ஒருவர் என்னும் அளவில் தலைவர்கள் இருந்தால் தலைமைக்குத் தனித்துவம் வருமா? சிறப்பு வருமா? இல்ல ‘தமிழீழத் தேசியத் தலைவர்’ என்றால் அது மேன்மை தங்கிய திரு. வே.பிரபாகரன் அவர்களை மட்டும்தான் குறிக்கும். இப்படித்தான் தலைவர் என்றால் இருக்க வேண்டும்.

***கேள்வி:-* சுனாமிப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்களை உள்ளடக்கவில்லை என்று முஸ்லிம் தலைமைகள் பல சீறிச் சினந்து நிற்கின்றனவே. இது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

***பதில்:-*** இவர்கள் சீறிச் சினப்பதிலோ, மனம் நொந்து கொள்வதிலோ எந்தவொரு நியாயமும் இல்லை. ஏனெனில் ஆரம்பத்திலே இதனைப் பற்றி எதுவுமே இவர்கள் பேசவில்லை. இந்தப் பொதுக்கட்டமைப்பின் உருவாக்கத்துக்காக தமிழ் மக்களுடன் தோளோடு தோள் நிற்கவில்லை. பேசாத மௌனிகளாய் இருந்து விட்டு கடைசியில் அது உள்ளடக்கப்படவில்லை. இது உள்ளடக்கப்படவில்லை எனக் கூறுவது நீதியற்றது, நியாயமற்றது. இது எதைப் போலென்றால் கையெழுத்து எழுதத் தெரியாத பெண்கள் தெரிந்தவர்களிடம் ‘என்ர சைனையும் வைச்சி விடு. அதையும் கொஞ்சம் சேர்த்து விடு. இதனையும் கொஞ்சம் எழுதிவிடு.’ என்று சொல்வதைப் போன்றதாகும்.

ஆனால் இவர்களெல்லாம் நினைப்பதைப் போல் தலைமைப்பீடமோ, தமிழ் மக்களோ நடந்து கொள்ளப் போவதில்லை. தமிழனுக்குப் பத்துரூபா கொடுத்தால், முஸ்லிமுக்கும் பத்து ரூபாய் கொடுக்க வேண்டும் என்பதுதான் தமிழீழத் தேசியத் தலைவரின் கொள்கை. இதற்கமையத்தான் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு செயற்பாடுகளும் முன் கொண்டு செல்லப்படும்.

கொஞ்சம் பொறுமையோடு இருந்தால் இவர்களுக்கு எல்லாமே புரியும். அனைத்துமே தெரியும். சகலதுமே நல்லபடியாய்த்தான் நடக்கும். எனவே இவர்கள் ஆரம்பத்திலே கைகட்டிக் கொண்டு மௌனிகளாய் நின்று விட்டுத் தற்போது குறைபட்டுக் கொள்வது தேவையற்ற ஒரு விடயமாகும்.

***கேள்வி:-* தற்போது தமிழ் முஸ்லிம் உறவு இங்கே எவ்வாறு இருக்கிறது?**

***பதில்:-*** பொதுவாகச் சொல்லப் போனால் தமிழ் முஸ்லிம் உறவானது மிகவும் பழமையானது. இறுக்கமும் நெருக்கமும் கொண்டது. சிலபல அரசியல்த் தலைவர்களது கொள்கைகளாலும் செயற்பாடுகளாலும் தான் இந்த இரு சமூக மக்களிடையேயும் அவ்வப்போது சிறு சிறு மனக் கசப்புகள் ஏற்பட்டு வருகின்றன. எது எவ்வாறெனினும் இந்த உறவுமுறை முறியாது. ஒருபோதும் முறிக்கவும் முடியாது. இந்த உறவு முறை வழிவழியே வந்து கொண்டிருக்கிறது. மிகவும் பக்கத்துப் பக்கத்திலே நெருக்கமாக எல்லாம் வாழ்கிறார்கள்.

முஸ்லிம் ஒருவனுடைய வீட்டிலே சமைக்கின்ற கறி பக்கத்து வீட்டு தமிழனின் மூக்கிலே வீசும். தமிழனது வீட்டிலே சமைக்கின்ற சமையல் மணம் பக்கத்து முஸ்லிம் வீட்டிலே கமகமக்கும். எனவே இம் மக்கள் உணவு முதல், உப்பு, மிளகாய், வெங்காயம் என்று அனைத்துத் தேவைகளையும் இனமத பேதமற்ற முறையிலே கேட்டும் கொடுத்தும் வாழவேண்டிய சகோதரத்துவ நிலையினைக் காணலாம்.

எனவே இதுதான் தமிழ் முஸ்லிம் மக்களது உறவு. ஆதலினால் இது மிகவும் நெருக்கமாகவே உள்ளது. இந்த நெருக்கத்தை எவராலுமே பிரிக்க முடியாது. இதற்காகவே தமிழீழத் தேசியத் தலைவரும், அவரைச் சார்ந்தோரும் பாடுபட்டு வருகிறார்கள். நானும் அப்படியே.

***கேள்வி:-* சுனாமிக்குப் பின்பு தமிழ் முஸ்லிம் உறவு எவ்வாறு இருக்கிறது என கூறமுடியுமா?**

***பதில்:-*** ஆம், இந்த உறவானது மேலும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. அந்தவகையிலே சுனாமி தமிழ் முஸ்லிம் மக்களது உறவுக்காகவும் பங்களிப்பு செய்திருக்கிறது. ஒருவர் மீது ஒருவர் பரிதாபம், இரக்க சிந்தனை, உதவ வேண்டும் என்னும் மனோசிந்தனை போன்றன உருவாகி இருக்கின்றன.

கொடுத்தும், உண்டும், உடுத்தும், வாழ்கின்ற சமரசமும்,சமத்துவ உணர்வும் பிறந்து இருக்கின்றன. இந்த உறவு நீடிக்க வேண்டும். மென்மேலும் வளர வேண்டும் என்பதே எனது பேரவா ஆகும்.

***கேள்வி:-* இனி வரும் காலங்களில் உங்களது செயற்பாடுகள் எவ்வாறு இருக்கும் என்று கூறுவீர்களா?**

***பதில்:-*** அன்று தொட்ட கொள்கையில் இருந்து மாறுபடாத வகையில் செயற்பட்டு வருகிறேன். இன ஐக்கியமே எனது மூச்சு. தமிழ் முஸ்லிம் உறவை வலுப்படுத்துவதற்காக தமிழ் முஸ்லிம் மக்களிடையே நல் எண்ணங்களை ஏற்படுத்துவதற்காகப் பாடுபட்டு வருகிறேன். பலரிடம் இது பற்றி கதைத்துப் பேசி கலந்தாலோசித்து விளக்கமளித்தும் வருகிறேன். என்னுடைய செயற்பாடுகள் தொடரும். ஆண்டவனும் இதற்கு நல்ல ஒத்தாசையாக இருந்தால் என்னுடைய இந்தச் செயற்பாடுகள் இனிவரும் காலங்களிலும் மென்மேலும் வளர்ச்சிப் படிகளை அடையும்.

***கேள்வி:-* தேசியத் தலைவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தால்...?**

***பதில்:-*** அந்த வாய்ப்பு உங்களது வாய்ச் சொல்லைப் போல கிடைக்க வேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். அப்படியொரு வாய்ப்பு கிடைத்தால் அதனைப் பெரும் பேறாகக் கருதுவேன்.

இங்கே சொல்லப்பட்டது போலவும், இன்னும் பலவற்றைக் பற்றியும் விளக்கமாக எடுத்துரைப்பேன். குறிப்பாக தமிழ் முஸ்லிம் உறவினை வலுப்படுத்துவதற்கான, வளர்ச்சியடையவைப்பதற்கான விடயங்கள் பற்றிக் கலந்தாலோசிப்பேன்.

அவர் மூலம் பெற்ற விளக்கங்களைக் கொண்டு பின்பு மக்கள் மத்திலே அதனை விளங்கப்படுத்துவேன். இந்த அரிய சந்திப்பதற்கான சந்தர்ப்பம் விரைவிலே கிடைக்க வேண்டும் என்பதையே விரும்புகிறேன்.

**செவ்வி கண்டவர்:-**
**வெல்லபதியான்**

# தற்கொடையிலீந்த மறவர்கள்



தமிழ் மக்களின் தாயக விடுதலைப் போராட்டமானது அதன் வரலாற்றிலே பல்வேறு பாரிய நெருக்கடிகளைச் சந்தித்திருக்கின்றது. சிங்களப் பேரினவாத கூலிப்படைகளினதும், அந்நிய வல்லரசுப் படைகளினதும் இராணுவ நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

இவ்வாறான நெருக்கடிகளிலிருந்து விடுபட இந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் போராளிகள் பல உன்னத தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். அதன் மூலம் இந்த எதிரிகளின் ஆக்கிரமிப்பைத் தகர்த்தெறிந்துள்ளனர்.

தமிழினத்தின் மீது திணிக்கப்பட்ட ஆக்கிரமிப்புக்கெதிராக எமது விடுதலை வீரர்கள் செய்த தியாகத்தை நினைவு கூரும் நாளே கரும்புலிகள்நாள் இன்றைய நாள். தமிழினத்தை அழித்தொழிக்கத் தயங்காத எதிரிகளுக்கு சிம்ம சொற்பனமாய் விளங்கியவர்கள் இக்கரும்புலிகள். தன் தேசத்துக்காக தன் உயிரையே தியாகம் செய்தவர்கள்.

இந்தக் கரும்புலி என்ற பதத்திற்கு வித்திட்டவர் கரும்புலி கப்டன் மில்லர். இவரின் பின்னால் இற்றை வரை பல கரும்புலி வீரர்கள் தரையிலும், கடலிலும் களமாடிக் காவியம் படைத்திருக்கின்றனர்.

1986-07-05ம் திகதி யாழ் நெல்லியடியில் நிலை கொண்டிருந்த சிங்கள இராணுவப் படையை நிர்மூலமடையச் செய்து தேசத்தின் விடுதலைக்காய் உயிர்கொடுத்துப் பெருமை சேர்த்த கரும்புலி கப்டன் மில்லரின் நினைவு நாள். தேசியத் தலைவரினால் கரும்புலிகள் தினமாக ஜூலை 5 பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டு தோறும் தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

யாழ் குடாநாட்டில் சிங்களப் படைகள் தனது ஆக்கிரமிப்பை விஸ்தரித்து குடாநாட்டை முழுவதுமாய் தனது கைக்குள் கொண்டு வந்தால் தமிழர் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்ற பகல் கனவுடன் இருந்த படைகளை தனியொருவனாக அதன் குகையுடனே அழித்தவர் கரும்புலி கப்டன் மில்லர். இதன்மூலம் இனவாத சக்திகளின் கனவைச் சிதைத்து தமிழினத்தை சிங்கள ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து காத்தவர் கரும்புலி கப்டன் மில்லர்.

மில்லர் வழியிலே எதிரி முகாம்களுக்குள் தனி ஒருவராக வெடிமருந்தேற்றிய வாகனத்துடன் சென்று எதிரி படைகளை நிர்மூலமாக்கி நிலை குலையச் செய்தவர்களின் சரித்திரம் தமிழீழ வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கின்றது. தமிழர் தாயகப் பிரதேசத்திலே எல்லையற்ற ஆதிக்கத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் வாழ்க்கையை அச்சுறுத்தி வந்த சிங்களப் பேரினவாதப் படையின் ஆதிக்க வலுவைக் குன்றச் செய்தவர்கள் இந்தக் கரும்புலிகள். பீரங்கிக் கப்பல்கள், மிதக்கும் டாங்கிகள் என வர்ணிக்கப்பட்ட இஸ்ரேலிய டோராக்கள் என்பன கரும்புலிகளின் காற்றுப்பட்டு சமுத்திரத்தில் சமாதியடைந்தன.

தமிழீழ கடற்பரப்பிலே நடமாடி வந்த சிங்கள இராணுவத்தின் கடற்கலங்கள் தமிழீழ கடற்பரப்பில் நடமாட முடியாது. சர்வதேச கடற்பரப்பிலே அச்சத்துடன் நடமாடும் நிலையை ஏற்படுத்தியவர்களும் இவர்கள்தான். தனித்து வந்து நிராயுதபாணிகளான அப்பாவி மக்களை அழித்து வந்த அவை அணியணியாகக்கூட அஞ்சி நடமாடும் நிலை ஏற்பட்டது. நவீன தரையிறக்கும் கலன்கள் தாக்குதல் கலன்களை கோடிக் கணக்கான பணத்தில் கொள்வனவு செய்தும் முல்லைத்தீவு இராணுவத்தளமும், ஆனையிறவுக் கூட்டுத் தளமும் வீழ்ச்சியடைந்த பொழுது சிங்களப் பேரினவாத அரசையும் அதன் கூலிப் படைகளையும் கை பிசைந்து பார்த்துக் கொண்டு நிற்க வைத்தவர்கள் கடற்கரும்புலிகள்.

தமிழினத்தை அழித்தொழிக்க தயங்காத எதிரிகளுக்கு சிம்ம சொற்பனமாய் விளங்கியவர்கள் இக்கரும்புலிகள். தன் தேசத்துக்காக தன் உயிரையே தியாகம் செய்தவர்கள். சாவுக்கு நாள் குறித்துக் காத்திருப்பவர்கள் கரும்புலிகள். எதிரியின் குகைக்குள் புகுந்து ஆட்லறி போன்ற கனரக ஆயுதங்களை குழல், வேறு உடல் வேறாக சிதைத்தெறிந்து. சிங்கள ஆதிக்க வெறியர்களைக் கதிகலங்க வைத்தனர்.

**செந்தூரன்.**

தமிழீழ தேசத்தில் சுடர்விட்டெரிந்த சிங்களப் படைகளின் கொடூரங்கள் கரும்புலிகளின் தாக்குதலினால் நிலை குலைந்தன. அவை ஒவ்வொன்றும் சிங்களப் பேரினவாதிகளுக்கு பெரும் பேரிடியாகவும் காணப்பட்டன. இதனால் தமிழர் தாயகங்களில் அவர்களினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்த பல ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. தமது நிலைகளை ஓரிடத்தில் தக்க வைத்துக் கொள்ள முடியாமல் சிங்கள இராணுவம் திகைத்து நின்றன.

இறப்பே தனது பிறப்பின் இலட்சியமாகக் கொண்டு தமிழ் மக்களின் தாயக விடுதலைக்காக எதிரியின் குகைக்குள் இடியென விழுந்து இலட்சியம் படைத்தவர்கள் இந்தக் கரும்புலிகள். இவர்களின் தியாகங்கள் இலட்சியங்கள் என்றும் எமது தமிழ் மக்களால் காலம் காலமாகப் போற்றப்பட வேண்டியவை. விடுதலைப் போராட்டத்திற்கு இடைகளாய், தடைகளாய் நிற்கும் எதையும் கரும்புலிகள் விட்டு வைப்பதில்லை என்பதை வரலாறு பலமுறை எடுத்துக் காட்டியிருக்கின்றன. எதிரிக்கு பாதுகாப்பான இடமென்று எதுவுமேயில்லை என்று கரும்புலிகள் நிரூபித்துள்ளனர்.

இவ்வாறு தாயக விடுதலைப் போராட்ட வரலாற்றில் அதிஉன்னத தியாகங்களைப் புரிந்துவரும் கரும்புலிகளின் எதிர்பார்ப்பு தேசவிடுதலை மட்டுமே. அதற்காகவே அவர்கள் தமது சாவுக்கு நாள் குறித்துக் காத்திருந்து காவியமாகினர். இவ்வாறு அவர்களது அதி உன்னத தியாகம் அவர்களது இலட்சியத்தை அடைய என்றும் வழிகாட்டியாக இருக்கும் என்பதை விடுதலைப் போராட்டம் அடுக்கடுக்காகச் சாதித்து வரும் சாதனைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தமிழீழ விடுதலை வரலாற்றில் விடுதலைக்காகத் தற்கொடையீந்த மறவர்களின் புனித நாளே கரும்புலிகள் தினம். தமிழீழ விடுதலைப் பயணம் ஒப்பற்ற வெற்றியை நோக்கி நகர்வதற்கு இந்தக் கரும்புலிகளின் வீரமிகு தியாகம். தற்கொடை என்பன காலத்தால் அழியாத வரலாற்றுச் சிறப்பங்கள்.

எனவே இந்த வெற்றிக் கணையைப் பலமாகக் கொண்டு அனைவரும் அணி திரண்டு தமிழரின் தாயக விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்தி கரும்புலி மாவீரர்களின் கனவுகளை வென்றெடுப்பதைத்தவிர வேறெதுவும் அவர்களின் தியாகத்திற்கு ஈடாகாது.

# முஸ்லிம்களின் உரிமைகள் ஒருபோதும் புறக்கணிக்கப்பட மாட்டாது

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள சுனாமிக்குப் பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பில் முஸ்லிம் மக்களின் சார்பில் முஸ்லிம் பிரதிநிதிகள் கையொப்பமிட வாய்ப்பளிக்கப்பட்டிருக்க வேண்டும் என சில முஸ்லிம் அரசியல்வாதிகள் கேட்பது நியாயமானதா? நியாயமற்றதா? என்பதை தமிழ் முஸ்லிம் மக்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் போதியளவு உள்வாங்கப்பட்டுள்ளதா? என்பதையும் அறிய வேண்டிய நிலை இருக்கத்தான் செய்கின்றது.

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இப்படியான ஒப்பந்தம் கடந்த 2002பெப்ரவரி 23ம் திகதியும் செய்து கொள்ளப்பட்டது. அப்போதைய பிரதமராக இருந்த ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குமிடையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் தான் இன்றுவரை யுத்த நிறுத்தம் ஏற்பட்டு ஒரு நல்லலெண்ணத் தோற்றப்பாடு தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கை இருந்த வேளையில்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நோர்வேயின் அனுசரணையுடன் இடம்பெற்ற ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையோசனை முன்மொழியப்பட்ட வேளையில்தான் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் திடீரென பாராளுமன்றத்தை கலைத்ததன் விளைவாக கடந்த 13 வது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் இடம்பெற்றது. அதாவது தமிழ் மக்களுக்கான ஒருமாற்று யோசனையொன்றை முதன் முதலாக எழுத்து வடிவில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை நகலை விடுதலைப் புலிகள் சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன் சமர்ப்பித்த போது அதனை ஜீரணிக்க முடியாத ஜனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைத்து திடீர் தேர்தல் நடாத்தியமையினால் விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி யோசனை நகல் செயல்வடிவம் பெறாமல் போனது.

அதன்பின் 13வது பாராளுமன்றம் 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பியின் கூட்டில் உருவான பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சி பீடம் அமைத்தது.

இவர்களின் அரசு ஆட்சியில் இருக்கும் வேளையில்தான் கடந்த 2005 டிசம்பர் 26ம் திகதி சுனாமிப் பேரழிவு இடம்பெற்றது. இவ்வழிவானது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய ஆறு மாவட்டங்களிலுமுள்ள கரையோரப் பகுதிகளில் உள்ள தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் இனமத மொழி வேறுபாடுகள் இன்றிப் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மீள்கட்டமைப்பு புனருத்தாரணப் பணிகளைச் சரிவர, பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் இன்றி மேற்கொள்ள வேண்டிய தார்மீகப் பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கும் உண்டு.

**பாத்திரன்**

ஏனெனில் கடந்த இரண்டு சகாப்தங்களுக்கு மேலாக வடக்குக் கிழக்குத் தாயக விடுதலைப் போராட்டத்தில் சிறிலங்கா அரசின் படைகளுடன் நேருக்கு நேர்மோதி பல சிறிலங்காப் படை முகாம்களைக் கைப்பற்றியதுடன் ஒரே பலம் பொருந்திய படையணியாகவும் அதேசமயம் வடக்குக் கிழக்கில் தனியான ஒரு நிர்வாகக் கட்டமைப்பை இருபது வருடங்களாக நடாத்தி வருபவர்களாகவும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற முழு அந்தஸ்த்தையும் பெற்றவர்களாகவும், விடுதலைப் புலிகளின் சம்மதமின்றி வடக்குக் கிழக்கில் எந்தவொரு அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள முடியாது என்ற யதார்த்தம் சர்வதேச நாடுகளுக்கு நன்கு விளங்கியமையினாலும், விடுதலைப் புலிகளிடம் தனியான வான்படை, கடல்படை, தரைப்படை, கரும்புலிப்படை, தற்கொலைப்படையணி, வேவுப்படையணி, மகளிர்படையணி, எல்லைப் படையணி எனப் பல படையணிகள் மிகப் பலத்துடன் இன்னும் உள்ளமையினாலும், இவை எல்லாவற்றையும்விட வடக்குக் கிழக்கு தாயக எல்லையில் விடுதலைப் புலிகளினால் சகல துறை சார்ந்த நிர்வாகக் கட்டமைப்பு சரிவர இயங்கிவருவதாலும் விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் இணைந்து ஒரு கூட்டுச் செயற்பாட்டின் கீழ் இயங்கினால் மட்டுமே சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளை மீள்கட்டுமானப் பணிகளைச் செய்ய முடியும். அப்படியான செயற்பாட்டை உருவாக்கினால் மட்டுமே சர்வதேச நாடுகளின் பெருந்தொகை நிதி தரமுடியும் என்ற உண்மையினை சர்வதேச நாடுகளும் வலியுறுத்தியதுடன் கண்டியில் இடம்பெற்ற உதவி வழங்கும் மகா நாட்டிலும் இது உத்தரவாதப்படுத்தப்பட்டது.



இவற்றையெல்லாம் தெளிவாகப் புரிந்து கொண்ட சிறிலங்கா அரசின் தலைவி சந்திரிகா அம்மையார் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட வேண்டிய பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

வடக்குக் கிழக்கில் சுனாமிப் பேரழிவுத் தாக்கத்தின் மீள் செயற்பாடுகளுக்கு இவ்வாறான கட்டமைப்பு அவசியம் என்பதை முதல் முதலில் சுட்டிக் காட்டியவர்கள் விடுதலைப் புலிகள் மட்டுமே. அதாவது விடுதலைப் புலிகளினால் முன்மொழியப்பட்ட இந்த யோசனை இந்தியா உட்பட சர்வதேச நாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு சில திருத்தங்களுடன் சிறிலங்கா அரசும் பரிசீலனை செய்து ஆறு மாதங்களாக இழுத்தடிக்கப்பட்டு தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் ஜே.வி.பி இனவாத கட்சி அரசில் இருந்து வெளியேறியுள்ளமை அறிந்த விடயமே.

இந்த ஒப்பந்தத்தில் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கையொப்பம் இடவேண்டும் எனக் கேட்பது எந்த விதத்திலும் நியாயமானதாகப் படவில்லை. சுருக்கமாகக் கூறுவதாயின் இலங்கைத் தீவில்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# உ சவால்களை தாண்டுமா

# சுனாமி பொதுக்கட்டமைப்பு

சுனாமிப் பொதுக் கட்டமைப்பு கைச்சாத்தாகி விட்டது. அதை நடைமுறைப்படுத்துவதில் நிறைந்த சிக்கல்களையும், சிரமங்களையும் தாண்டி எவ்வாறு அதன் பணிகளை ஒருவருட காலத்துக்குள் நிறைவேற்றப் போகின்றது என்ற கேள்வி ஒருபுறமிருக்க, சுனாமிப் பொதுக்கட்டமைப்பு தமிழினத்திற்கான உரிமைகளை வழங்கும் ஒரு கட்டமைப்பல்ல என்பதையும் காட்டமாக அறிவது மிக அவசியம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்குமிடையிலான இந்தச் சுனாமிப் பொதுக் கட்டமைப்பு திறம்பட செயற்படுவதாயின் அதன் அடிப்படை மூலகாரணமாக இருப்பது போர் நிறுத்த உடன்படிக்கை தான். போர் நிறுத்த உடன்படிக்கை எவ்வளவுக்கெவ்வளவு துடிப்புடனும், நம்பிக்கையுடனும் முன்னெடுக்கப்படுகின்றதோ அவ்வளவிற்கு சுனாமிப் பொதுக் கட்டமைப்பு உயிர்வாழ முடியும்.

இன்றுள்ள நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கையை ஆழமாக நோக்குமிடத்து அது மிக ஆபத்தான கட்டத்திலுள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதில் அரசும், சிறிலங்காப் படைத்தரப்பும் பின்னடித்து வருகின்றன.

குறிப்பாக போர் நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களை களையும் விவகாரம் இன்னும் ஒரு தீர்க்கமான முறையில் தமிழர் தரப்பை நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் அமையவில்லை.

வடக்குக் கிழக்கில் தொடர்ச்சியாக ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள், அட்டகாசங்கள் அதிகரித்துச் செல்கின்றன. படைத் தரப்பினரின் பூரண ஆசீர்வாதத்துடன் இந்தத் தேசவிரோதக் குழுக்களின் செயற்பாடுகள் விடுதலைப் புலிகளுக்கும், தமிழ்மக்களுக்கும் எதிராகவுள்ள நிலையில் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள்களையப்பட வேண்டும் என விடுதலைப் புலிகளால் வலியுறுத்தப்பட்ட போதும் இது வரை அதற்காக எந்தவொரு சாதகமான செயலையும் படைத்தரப்பினர் மேற்கொள்ளவில்லை.

அடுத்து மீள் குடியமர்வு விவகாரம் போர்நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு கடைப்பிடிக்கப்படவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கணிசமான நிலப்பரப்பு தமிழர் தாயகத்தில் படைத்தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமாகவே உள்ளது.

அந்தப் பிரதேசத்திற்குள் குடியிருந்த மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்றாண்டுகளைக் கடந்துள்ள போதும் இன்னும் மீள்குடியமர்வு விடயத்தில் படைத்தரப்பு விட்டுக் கொடுக்காத தன்மையுடன் செயற்பட்டு வருகின்றனர். வடகிழக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி மக்கள் தமது குடிமனைகளை, காணிகளை விட்டு படையினர் வெளியேறவேண்டும் என்ற போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். மற்றுமொரு சம்பவமாக கடந்த சில வாரங்களாக கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பொருட்களை எடுத்துச் செல்வதற்கு படைத்தரப்பு இறுக்கமான கட்டுப்பாடுகளை மீளவும் அமுல் படுத்தியுள்ளனர்.





குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சீமெந்து, எரிபொருட்கள், கம்பிகள் போன்ற பொருட்களை எடுத்துச் செல்வதற்கு படைத்தரப்பு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதேபோன்று வாகரைப் பிரதேசத்துக்கு மாங்கேணிப்படை முகாமூடாக பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் கட்டுப் பாடுகளை விதித்துள்ளது.

வாகரைப் பிரதேசம் கடற்கோள் அனர்த்தத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம். படைத்தரப்பினரின் தடை விதிப்பின் பின்னர் அரசசார்பற்ற நிறுவனங்கள் வாகரை பிரதேச மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளுக்கான பொருட்களை எடுத்துச் செல்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இதே போன்று திருமலை மாவட்டத்தில் கட்டைபறிச்சான் சோதனைச் சாவடியூடாக பொருட்களை எடுத்துச் செல்வதற்கு படைத்தரப்பினர் அனுமதியளிக்கவில்லை. வாகரை மற்றும் மூதூர்ப் பிரதேச மக்கள் படையினரின் பொருளாதாரத் தடைவிதிப்புக்கு எதிராகப் போராட்டங்கள் நடாத்திய போதும் மீளவும் கட்டுப்பாடுகளை தளர்த்திவிடுவதற்கு படைத்தரப்பு தயாராகவில்லை. இந்த நிலையில் மக்கள் மீது போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பான சந்தேகமும் நம்பிக்கையீனமுமே அதிகரித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து நடைபெற்ற ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது வடக்குக் கிழக்கில் போரினால் பாதிப்புற்ற மக்களுக்கான அவசர புனர்வாழ்வு பணிகளை முன்னெடுப்பதற்காக விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை யோசனை சிங்கள அரசியல் கட்சிகளின் எதிர்ப்பினால் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைக் கவிழ்த்து பேரினவாதக் கட்சிகளின் கூட்டுடன் ஆட்சிக்கு வந்த அம்மையார் இடைக்கால சபை யோசனையை அமுல்ப்படுத்துவதற்கோ, போர் நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்தி வடக்குக் கிழக்கில் இயல்புச் சூழலை ஏற்படுத்துவதற்கோ கரிசனை காட்டவில்லை.

விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட எவ்வித கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை. மறுமுனையில் கிழக்கில் நடைபெற்று வரும் சம்பவங்கள் ஒவ்வொன்றும் போர் நிறுத்த விதி முறைகளை மீறி படைத்தரப்பு செயற்படுவதையே காட்டுகின்றது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக அரசியல் பணிகளை மேற்கொள்ளும் விடுதலைப் போராளிகள் படையினரின் கெடுபிடிகளுக்குள்ளாகின்றனர். அரசியல் பணிமனைகள் படைத்தரப்பினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்படுகிறது. அலுவலகங்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

படைப்புலனாய்வுப் பிரிவு, தேசவிரோத ஆயுதக் கும்பல்கள் என்பன இணைந்து போராளிகள் மீது தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. மொத்தத்தில் சமாதானப் பேச்சுக்களுமில்லை. இயல்புச் சூழலுமில்லை. மக்களிடையே போரைத் திணிப்பதற்கான நகர்வுகளை சிங்கள ஆட்சியாளர்களும், படைத்தரப்பும் மேற்கொண்டு வரும் நிலையில் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**பிரவீனா**

போர் நிறுத்த உடன்படிக்கையை முறையாக அமுல்படுத்துமாறு கோரி விடுதலைப் புலிகள் முன்வைத்த தீர்மானங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டிருப்பது அரசு மீதான நம்பிக்கையீனத்தையே வெளிப்படுத்துகிறது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் ஒவ்வொன்றும் போர் நிறுத்த உடன்படிக்கைக்குட்பட்ட வகையில் அரசினால் நிவர்த்தியாக்கப்பட்டிருக்குமானால் சமாதானத்தின் மீதான நம்பிக்கை ஆழமாக வெளிப்பட்டிருக்கும். அதனடிப்படையில் சுனாமிப் பொதுக்கட்டமைப்பினை நம்பிக்கையுடன் முன்னெடுக்க முடியும்.

தற்போது சுனாமிப் பொதுக் கட்டமைப்பில் விடுதலைப் புலிகளும், சிறிலங்கா அரசும் கைச்சாத்திட்டிருப்பது. தமிழர் தாயகத்தின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதை மேலும் அடையாளப்படுத்தியுள்ளதை வலியுறுத்தும் அதேவேளை இந்தக் கட்டமைப்பை மெருகூட்டி மிகைப்படுத்தி வர்ணிப்பதில் சில சக்திகள் முனைவது குறித்து அவதானத்துடன் நோக்க வேண்டும். சிங்களப் பேரினவாத சக்திகளின் கூச்சல் குழப்படிக்கு மத்தியில் அரசு இதில் கையொப்பமிட்டதை ஜனாதிபதி வாயாரப் புகழ்ந்து பெருமித மடையலாம். அதேபோன்று சர்வதேச சமூகங்கள் இவ்வாறு ஒரு உடன்படிக்கை கைச்சாத்திட்டிருப்பது குறித்து மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம், நோர்வே வெளியுறவு அமைச்சர் பீற்றர்ஸன், மற்றும் அமெரிக்கா, இந்தியா, கனடா போன்ற நாடுகளும் சுனாமிப் பொதுக்கட்டமைப்பில் விடுதலைப் புலிகளும், சிறிலங்கா அரசும் கையொப்பமிட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.





ஆனால் இதன் ஒருவருட ஆயுட்கால செயற்பாடுகள் எந்தளவிற்கு அமையப் போகின்றது என்பது கேள்விக்குறி. ஏனெனில் ஒரு பக்கம் அரசும் மற்றும் படைத்தரப்பினர் போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்தாது இழுத்தடிப்பதும் இயல்புச் சூழல் பாதிப்புற்று நிழல் யுத்தமொன்றிற்கும் தமிழ் சமூகம் முகம் கொடுத்திருக்கும் அதேவேளை உறுதியற்ற ஆட்சியும் இந்தக் கட்டமைப்பு எவ்வளவு காலத்திற்கு உயிர்வாழப் போகிறது என்பதைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. தற்போது தொங்கு நாடாளுமன்றில் ஆளும் தரப்பின் ஆட்சியுள்ளது.

இதுவரை நாட்களும் ஆளும்தரப்பில் 120 பிரதிநிதிகளும், எதிர்க்கட்சித் தரப்பில் 105 பிரதிநிதிகளும் இருந்தனர். பொதுக்கட்டமைப்பு விவகாரத்தினால் ஆளும் கூட்டு முன்னணியில் அங்கம் வகித்த ஜே.வி.பியின் 39 பிரதிநிதிகளும் எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்றுவிட்டனர். இதில் ஆளும் தரப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 57 ஆசனங்களும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 08 ஆசனங்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (அதிருப்தி அணி) 04 பேரும், ஜாதிக ஹெல உறுமய அதிருப்தியாளர்கள் 02, லங்கா சமசமாஜக் கட்சி 2, மக்கள் ஐக்கிய முன்னணி 02, தேசிய ஐக்கிய முன்னணி 02, ஈ.பி.டி.பி 01, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஒருவர் உட்பட மொத்தம் 81 ஆசனங்கள் உள்ளது.

அதேவேளை எதிரணி வரிசையில் ஐக்கிய தேசியக் கட்சி 68, ஜே.வி.பி 39, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22, ஹெல உறுமய 07, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 06, மலையக மக்கள் முன்னணி 02 ஆசனங்களைக் கொண்டு மொத்தமாக 144 ஆசனங்களுடன் பெரும்பான்மைப் பலம் பெற்று நிற்கிறது. எதிரணியில் நிற்கின்ற அரசியல் கட்சிகள் ஒருமித்த கருத்துடையவையல்ல என்பதுதான் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி நீடிப்பதற்கான ஒரு காரணமாகும். அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி பொதுக் கட்டமைபபுக்கு ஆதரவு வழங்கி வருவதும் ஆட்சியை நீடிப்பதற்குரிய ஒரு காரணமாக அமைவதுடன் பொதுக்கட்டமைப்பு நிறுவப்படுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சியை வீழ்த்தாது என்ற உறுதிமொழியும் சந்திரிகா அரசு தொடர்ந்து ஆட்சியை நீடிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன. தற்போது முஸ்லிம்களும் ஒரு தரப்பாக நின்று உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை என்ற அதிருப்தி யீனம் அதிகரித்து வரும் நிலையில் மு.ஆ.கட்சியும் ஆதரவை விலக்கும் சூழல் உருவாகியுள்ளது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி எவ்வளவு காலத்திற்கு ஆட்சி நீடித்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் என்பது கேள்விக்குறி.

தற்போது பலமிழந்திருக்கும் அரசினால் உறுதியான திட்டம் எதனையும் முன்னெடுத்துச் சென்று சாதித்து விட முடியாது என்பது ஒருபுறமிருக்க அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியினரில் ஒரு பகுதியினர் தெரிவிக்கின்றனரர்.

ஏனெனில் போர்நிறுத்த உடன்படிக்கை ஐ.தே காலத்தில் கையொப்பமிடப்பட்டது. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்த பின்னரும்கூட அமுல்படுத்தப்படுகிறது. அது போன்று ஐக்கிய தேசியக் கட்சியும் சுனாமிப் பொதுக் கட்டமைப்பினை தொடர்ந்து முன்னெடுக்கும் என ஆலோசித்துள்ளனராம்.

இதேவேளை ஜனாதிபதியின் ஆட்சி இன்னும் ஒரு வருடத்திற்கே உள்ளது. அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றிவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் சுலபமாக வெற்றி பெற்று விடலாம் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு. இவை ஒருபுறமிருக்க தென்னிலங்கையில் இனவாதத்தை ஊட்டுவதில் பேரினவாத சக்திகள் தொடர்ந்தும் முனைப்புக் காட்டி வருகின்றன.

ஜே.வி.பி. பொதுக்கட்டமைப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அறிவித்துள்ளது. அதேபோன்று ஹெல உறுமய பிக்கு

*தொடர்ச்சி 20ம் பக்கம்...*

# சுனாமிக்கு பின் வீழ்ச்சி அடைந்துள்ள பிரம்பு கைத்தொழில்



கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரம்புக்கைத் தொழிலில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடற்கோள் அனர்த்தத்தினால் வீழ்ச்சி கண்டுள்ள பிரம்புக் கைத்தொழிலினை மீண்டும் கட்டியெழுப்ப முடியாதபடிக்கு இக் கைத்தொழிலினை நம்பி வந்த மக்கள் நிர்க்கதி நிலைக்குள்ளாகி நிற்கின்றனர்.

வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்ற இப்பிரம்புக் கைத்தொழிலினை மீண்டும் கட்டியெழுப்புவதன் மூலம் நிர்க்கதியான மக்களின் வாழ்வை மேம்படுத்த முடியும். இலங்கைத் தீவகத்தைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் தாயகப் பகுதியான கரையோரப் பிரதேசங்களையே சுனாமி அனர்த்தம் தாக்கியழித்தது.

இவ்வாறான நிலையில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஒன்றான மட்டக்க ளப்பு மாவட்டத்தில் சுனாமித் தாக்கம் மக்களின் உயிர்களையும், உடமைகளையும் காவு கொண்டு போனது மட்டுமல்லாது அவர்களுடைய ஜீவனோபாயத் தொழில்கள் பலவற்றையும் வேரோடு சாய்த்துச் சென்றுள்ளது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில், சிறுகைத்தொழில், குடிசைக் கைத்தொழில் என்பன காணப்படுகின்றன. இது இவ்வாறிருக்க இக்கைத்தொழில்களில் ஏற்றத்தாழ்வு மற்றும் பாகுபாடு பார்க்காமல் ஒட்டுமொத்தமாக எல்லாத் தொழில்களும் சுனாமித் தாக்கத்திற்கு முகங்கொடுத்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமிப் பேரலையால் வீழ்ச்சி கண்ட பல கைத்தொழில்கள் பற்றிய கட்டுரைகள் எமது ஈழநாதம் வாரமலரூடாக கடந்த வாரங்களில் தந்திருந்தோம். அந்தவகையில் இவ்வாரம் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறு கைத்தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில்களுக்குள் அடங்கக்கூடிய பிரம்புக் கைத்தொழில் பற்றிய பூரண வெளிப்பாட்டுக் கட்டுரையை முன்வைக்கின்றோம்.

பிரம்புக் கைத்தொழிலானது முன்னோர்களுடைய பண்டைக் காலம் தொடக்கம் நவீன காலமான தற்காலம் வரைக்கும் ஒரு பிரபல்யமான கைத்தொழிலாக பிரம்புக் கைத்தொழில் இருந்து வருகிறது. வளர்ந்து வரும் விஞ்ஞான நாகரீக வளர்ச்சிக்கேற்றாற்போல இப்பிரம்புக் கைத் தொழில்களும் வளர்ச்சி கண்டு வருகின்றது வியக்கத்தக்கதொன்றாகும்.

இத்தொழிலாளர்கள் பிரம்புகளைக் கொண்டு புதிய புதிய பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் காலகட்டம் இதுவாகும். அதாவது ராக்கைகள், மண் கூடைகள், இடியப்பத்தட்டுக்கள், மார்க்கட் கூடைகள், கதிரை போன்றனவும் மற்றும் வீட்டுக்குத் தேவையான அலங்காரப்பொருட்கள் போன்றவற்றையும் உற்பத்தி செய்து வருகின்றனர்.

அடிமட்டத்திலுள்ள குடிமனை தொடக்கம் அலுவலகம் வரையிலான எல்லா இடங்களிலும் பிரம்பினால் செய்யப்பட்ட கைத்தொழில் பொருட்களைக் காண முடிகின்றது. இது இவ்வாறிருக்க தற்போது இத்தொழில்களை மேற்கொண்டு வரும் மக்கள் சுனாமித் தாக்கம் ஏற்பட்டு 6 மாதங்களைக் கடந்த போதிலும் பாதிக்கப்பட்ட தங்களுடைய பிரம்புத் தொழிலினைக் கட்டியெழுப்ப முடியாதபடிக்கு உள்ளாகியிருப்பதாக அவர்கள் பக்கம் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரம்புக் கைத்தொழிலினைச் செய்துவரும் மக்களிடம் இது பற்றி விசாரித்தபோது அவர்கள் வாய்மூலம் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு சி.தேவராஜ் (21) மாவடிவேம்பைச் சேர்ந்த இவரின் கருத்துப்படி:-

நான் இத்தொழிலினை கடந்த 10 வருட காலமாக மேற்கொண்டு வருகின்றேன். எனது தகப்பனார் எனக்கு புத்தி தெரிய வந்த காலம் தொடக்கம் இப்பிரம்புக் கைத்தொழிலினை மேற்கொண்டு வருகின்றார். தற்போது என்

**அச்சுதன்**

னுடைய தகப்பனாருடன் சேர்ந்து நானும் இத்தொழிலினை மேற்கொண்டு வருகின்றேன். நாங்கள் இப்பிரம்பைக் கொடுவாமடு, தளவாய் போன்ற பகுதிகளில் இருந்து தற்போது வெட்டியெடுத்து வருகின்றோம். நாங்கள் பிரம்புகளை வெட்டி வந்து எங்கள் முதலாளிக்கு 1பிரம்பு 1ரூபாய் வீதம் விற்போம். இதன் மூலம் நாளொன்றுக்கு



250 ~ 300 ரூபாய் வருமானம் கிடைத்து வருகின்றது. இதனால் எனது குடும்பத்தினை நடாத்திச் செல்வது கடினமான நிலையில் உள்ளது.

அடுத்து வந்தாறுமூலையைச் சேர்ந்த எஸ்.சந்திரகுமார் (48) என்பவரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது:-

பிரம்புத் தொழில் செய்பவர்களிடம் மாவடிவேம்புக்குச் சென்று மண்கூடை மார்க்கட்கூடை, இடியப்பத்தட்டு போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்து செங்கலடி, ஏறாவூர் போன்ற பகுதிகளுக்குக் கொண்டு சென்று விற்பேன்.

நான் ஒரு மண்கூடை 80.00 ரூபாய்க்கு வாங்கி 90.00 ரூபாய்க்கு விற்பேன். இதன் மூலம் போதிய வருமானம் பெறமுடியாதுள்ளது. அதனால் எனது குடும்பச் செலவுகளுக்குக் கூட உழைக்கின்ற பணம் போதாமல் உள்ளதனால் எனது 6 பிள்ளைகளைப் பராமரிப்பதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றேன்.

இத்தொழில் சுனாமிக்கு முற்பட்ட நாட்களில் மிகுந்த இலாபத்தினை ஈட்டித் தந்தன. ஆனால் தற்போது அது வீழ்ச்சி கண்டுள்ளது. என்னதான் செய்யமுடியும். வேறு தொழில்கூட தற்போது செய்யமுடியாத நிலையில் உள்ளபடியினால்தான் இந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளது. என்னதான் செய்யலாம். இதுதான் நமது தலைவிதி என்றார்.

அடுத்து மாவடிவேம்பைச் சேர்ந்த சிறுமைமலர் (48) இவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

எனது கணவர் 10 வருடத்திற்கு முன் காலமாகி விட்டார். நான் தற்போது விதவை நிலையில் இருந்து வருகின்றேன். எனக்கு இரண்டு பிள்ளைகள். இளமையில் நான் கணவனை இழந்தபடியினால் எனது பிள்ளைகளை வளர்க்கும் முயற்சிக்காக 8 வருட காலமாக இப்பிரம்புக் கைத்தொழிலை மேற் கொண்டு வருகின்றேன்.

இதன்மூலம் போதிய வருமானம் பெறமுடியாவிட்டாலும் விதவையாக இருக்கின்ற நான் என்னதான் செய்ய முடியும். செய்துதான் ஆக வேண்டும். இப்பிரம்புக் கைத்தொழிலுடன் தையல் தொழிலையும் செய்து கொண்டு வருவதனால் குடும்பச் செலவு ஓரளவுபோய்க் கொண்டிருக்கின்றது. இந்தப் பிரம்புகளை நான் வாங்கி ஏற்றுமதி செய்வேன். அத்துடன் நான் கூடைகளைப் பின்னியும் விற்று வருகின்றேன்.

இவ்வாறான நிலையில் இத்தொழிலில் அண்மைக் காலமாக ஒரு முன்னேற்றமும் காண்பதாக இல்லை. ஏனெனில் சுனாமி அனர்த்தம் காரணமாக கடற் பகுதிகளை அண்டி இயற்கையின் கொடையாக வளர்ந்து வந்த பிரம்புகள் முற்றாக அழிந்து விட்டது. இதனால் பிரம்புகளை எடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றோம். சுனாமி வந்து எங்கள் வாயில் மண்ணைத் தூவி விட்டுப் போய்விட்டது தம்பி என்று அந்தத் தாய் கண்ணீருடன் கூறினார்.

அடுத்து மாவடிவேம்பைச் சேர்ந்த தருமரெத்தினத்திடம் கேட்ட போது:-

நான் இத்தொழிலை நீண்ட காலமாகச் செய்து வருகின்றேன். பிரம்புகளை வெட்டி வருபவர்களிடம் கொள்வனவு செய்து குருநாகல் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு மொத்தமாக ஏற்றுமதி செய்து வருகின்றேன்.

(தொடரும்...)

## ஈழநாதம் பரிசுத்திட்டம்

ஈழநாதம் (மட்டு) வாரமலரில் பங்குனி ~ வைகாசி மாதங்களுக்கான 'பரிசுக்குரிய கவிதையாளர்களின் விபரங்கள்

**தலா 2500 ரூபா பரிசு பெறும் கவிதை**

**ச.சந்திரமதி மகிழவட்டவான்**

'எமதீழம் ஒளிபெறவே விழி திறப்பீர்'

**தலா 500 ரூபா பரிசு பெறும் கவிதைகள்**

1) கூளாவடியான், பாலையடிவட்டை.
'எனக்கு வெட்கம் வரும்'
2) ச.கோகுலதாஸ், வெல்லாவெளி.
'தமிழா நீ தாழாதே'
3) செயின் தம்பி ஸியாம், கல்முனை- 06.
'நடப்பு வேதனை'
4) காத்தான்குடி கவிப்புயல், எஸ்.எம்.ரம்ஸி.
'தமிழ் இனி வளரும்'
5) சிவலிங்கம் சுமதி, ஏறாவூர் -04.
'யுத்தம் வேண்டாம்'

**எதிர்வரும் 17.07.2005 அன்று கொக்கட்டிச்சோலை ஈழநாதம் பணிமனைக்கு நேரடியாக வந்து உங்கள் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.**

## நெஞ்சை விட்டு அகலா
## மூன்றாவது ஆண்டு அஞ்சலி

| தாயின் மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 15 |  | 04 |
| 01 | | 07 |
| 1934 | | 2002 |

திதி 01.07.2005

சைவ சித்தாந்த சிரோன்மணி சைவ நன்மணி சிவ பணிச் செம்மல்

அமரர். மயில்வாகனம் சிவநேசராசா

(முன்னாள் மட்.இந்து இளைஞர் மன்றத் தலைவரும், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரியும்)

புவிதனிலே நாங்களெல்லாம் புகழ் பெற்று வாழ்வதற்கும்
தனித்துவமாய் எல்லோரும் தலை நிமிர்ந்து நிற்பதற்கும்
வழி சமைத்து வாழ்வாங்கு வையகத்தில் வாழ வைத்தீர்
வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க
கிழக்கினுக்கோர் விடிவெள்ளியானீர்கள்!
ஆண்டுகள் மூன்று கடந்து சென்றாலும்
ஆறாதப்பா என்றும் எங்கள் துயரம்
எங்கள் கண்களுக்குள் கண்மணியாய்
காலமெல்லாம் நீங்கள் தான்!

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
90.லேக் வீதி இல:02
மட்டக்களப்பு.




# போர் உலா

**"உலக மகா கவிஞருள் ஒருவரான ஷெல்லி இறக்கும்போது வயது 29. மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இறக்கும்போது வயது 29. யுகக் கவிஞன் என அழைக்கப்பட்ட பாரதி இறக்கும் போது அவனுக்கு வயது 39. இந்நூலாசிரியன் இறந்த போது இவன் வயது 20 தான்"**

## கப்டன் மலரவன் 24

ஒவ்வொருதராக பைக்குள்ளிருந்த பொங்கலை எடுத்து வாய்க்குள் தீத்திவிட்டாள். அந்த அன்பான தாய். எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்த வெண்பொங்கல் சர்க்கரைப் பாகு வாய் இனித்தது. உடலில் இழந்து போன பலம் அனைத்தும் புத்துணர்வு பெற்றதாய் இருந்தது. சோர்ந்து கிடந்த நாடிகள் வேகமாகத் துடித்தன.

எந்த உணவாலும் வெற்றியாலும் பெறமுடியாத சந்தோசத்தை இந்த தேசப்பற்று மிகுந்த தாய் என்னவாய் ஊட்டிவிட்டாள்.! நாம் மறையும் வரைபார்த்தபடியே நின்றாள். அன்னையின் வடிவிலே இருட்டினுள் வெள்ளைச் சேலையுடன் அம்மா தூரத்தே தெரிந்தாள். என்னையறியாது இருதுளி கண்ணீர் உகுத்தேன். இப்படியான தாய் இருக்கும் வரை நாம் என்றும் ஓயப் போவதில்லை. அருகிலிருந்த கராட்டி மாஸ்ரர் அம்மாவின் திக்கையே வெறித்துப் பார்த்த வண்ணம் இருந்தார். முகத்தில் ஒருவித சந்தோசத்தை அனுமானிக்கக் கூடியதாக இருந்தது."எதிரிகளின் பாசறையைத் தேடிப்போகிறோம்" மிருதுவாகப் பாடுவது கேட்டது.

எம்மைக் கடந்து சிவப்பு புள்ளிகள் வரிசையாகப் போவது தெரிந்தது. "மச்சான் நிற்பாட்டடா.. கெலி அடிக்கிறான்"என்று உரத்த குரலில் சத்தமிட, வெளிச்சத்தை அணைத்து ஒரு முதிரை மரத்தடியில் நிறுத்தினான். அந்த வானூர்தியோ இலகுவில் விட்டுவிடவில்லை. சுற்றிச்சுற்றி வந்து தாக்கினான். சிவப்பு நிற ரேசர் ரவைகள் தார் வீதியில் பட்டுத் தெறித்து, பின் மேலெழுந்து மீண்டும் கீழ்விழுவது சிவப்பாகத் தெரிந்தது. சில ரவைகள் வீதியில் பட்டு வெடித்தன. நாம் வீதியருகில் உள்ள நீர் பாயும் கால்வாய்க்குள் இறங்கி நின்றோம். "ரோட்டைத்தான் உழுகிறான்!" ஆரோ சொல்வது கேட்டது. மீண்டும் ஒரு தடவை வீதி நீட்டிற்கு ரவைகளைப் பாய்ச்சி வர, இரு ரவைகள் ரைக்ரரிலும் பீரங்கியிலும் படுவதை சத்தத்தை வைத்து அனுமானிக்கக் கூடியதாக இருந்தது.

ஸ்......ஸ்..எதோ இரைந்துவர "5இஞ்சி போட்டுட்டான் எல்லோரும் கவர்எடுங்கடா" என்ற சத்தத்தில் இருசெல்கள் வீழ்ந்து வெடித்தன. அவை அருகிலிருந்த வயலுக்குள்தான் விழுந்து சிதறின. நேரம் 7.35 காட்டியது. "இனிப் பார்கேலாது! அடிச்சா அடிக்கட்டும்! இதயன் ரைக்ரரை எடடா!"என்றவுடன் இதயன் துணிவாக வேகமாக ஓடிச்செல்ல, வீதியின் இருபுறமாகவும் ஓடத்தொடங்கினோம். உலங்கு வானூர்தி கலைத்துக் கலைத்துச் சுட்டபடி வந்தான்.

"தலைக்கு மேல போறான், கழட்டிப் போட்டுடுவான் கவனம்" என்று சொல்ல, கும்கும் என செல்கள் 100யார் பின் புறமாக வீதியில் வீழ்ந்து வெடிக்க, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஓடினோம். அது நேர் கோட்டிற் சென்றது. திரும்ப உசாரானோம். நன்றாகக் கரைகளிற் பதுங்கிக் கொள்ள 50 கலிபர் ரவைகள் வீதியை துளைத்துச் சென்றன. இதயன் ரைக்ருடன் காவலரண்புறமாகத் திரும்புவது தெரிந்தது. வயல் வெளிகளூடாக, பற்றைகளூடாக தண்டவளத்தைக் கடந்து ஓடினோம். உலங்கு வானூர்தி துரத்தியபடி வந்தது. திடீரென விரைவு பெற்று உறுமியது அடுத்த ஸ் ஸ் என இரு ரொக்கட் மோட்டர்கள் தலைக்கு மேலாகச் சென்று மரமொன்றில் மோதிச் சிதறின. "ஆ" என மாஸ்ரர் முனகியபடி ஓட, என்ன நடந்தது? வினவுவதற்குள் ரவைகள் உஸ்...ஸ் என துரத்தின. மிகுந்த கவனத்துடன் வந்தடைந்தோம் மாஸ்ரரின் கையில் சின்ன உருக்குத் துண்டு ஏறிக் கிடந்தது. இழுத்தெடுப்பின் பீல்ட் பொம்பிரசால் இறுக்கிக் கட்டினேன்.

சரியாக 8.02ற்கு முதலாவது பீரங்கி வேட்டைத் தீர்க்க ஆரம்பித்தோம். எதிரி உடனடியாக ரவைகளைப் பாய்ச்சி எதிர்ப்பைக் காட்டினான். நேற்றைய உக்கிரம் இன்று இருக்கவில்லை. ரவைகளை எண்ணியே பாய்ச்சினான். செல்களையும் ஆர்.பி.ஜி.களையும் ஓரளவாக இலக்கு நோக்கி ஏவினான். நாம் இன்றைய இலக்காக பிரதானமுகாமையும்,நெல் சந்தைப்படுத்தும் சபையையும் தேர்ந்து தாக்கினோம். நேற்றைய சண்டையை விட இன்று உலங்கு வானூர்திகளும், குண்டு வீச்சு விமானங்களும் பெரும் பிரச்சினையை தந்தன. உண்மையில் நாம் மயிரிழையில்தான் தப்பினோம். ஏனெனில் வீசப்பட்ட குண்டு ஒன்று நாம் பதுங்கிய நிலையில் எமக்கு 10மீற்றர் அப்பால் வீழ்ந்து சும்மா கிடந்தது! அது எதிரிக்கொரு துர்ரதிர்ஷ்டமே எனலாம். அடுத்து நாம் பீரங்கியை இயக்கவேண்டியிருந்தால் அதிர்வில் அக்குண்டு வெடித்திடலாமென்பதால் அதை அகற்றி, ஒரு காப்பரண் இட்டோம். இத்தனைக்கும் உலங்கு வானூர்திகள் இரண்டு,50 கலிபரையும், செல்களையும் பயன்படுத்தி எம்மைத் தீர்க்க முயன்றது.

இன்றையத் தினம் எமது தரப்பில் இரு போராளிகள் எதிரியின் ஆர்.பி.ஜி. எறிகணையினால் காயமடைந்தனர். இருவரையும் மருத்துவக் குழுவிடம் ஒப்படைத்த பின் தாக்குதலை விரைவுபடுத்தினோம்.

12.54மணி இறுதிச் செல்லை பிரதான முகாம் நோக்கி ஏவினோம். மேலே பச்சையும் சிவப்புமாக குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு சுற்றியபடி இருந்தன.

12.59மணி பீரங்கிகளை ஓய்வடையச் செய்தபின் உடனடியாகக் காப்பு எடுக்கும் படி தளபதி கட்டளையிட 'ட்ருங்' என்ற சத்தத்துடன் வீதியில் எதிரி இட்டு வைத்திருந்த அரண்களை இடித்துத் தள்ளியபடி பெரிய வெளிச்சத்துடன் வாகனம் உறுமியது.

"சக்கை லொறியடா கவனமாய்ப் பாருங்கோ" எனக் கத்தியபடி நான் குதிக்க, ஒரு முறை பெரும் ஒளி வெள்ளம் எழுந்தது. பின் காற்று ஒரு முறை முட்டி மோதித் தள்ளியது. இன்னதெனக் கூற முடியாத - வர்ணிக்க முடியாத - சத்தம் காதைப் பிளந்து வானைக் கடந்து சென்றது. காட்டு மரங்கள் ஒரு கணம் ஆடி அடங்கின. விலங்குகள் திகைத்து நிற்க கந்தகப் புகை மூக்கை அடைத்தது, ஒரு காவிய நாயகன் கரும்புலியாகி சரித்திரம் படைத்து விட்டான்!



போர்க் அண்ணை!

நான்கு நாட்களிற்கு முன், ஈசிசெயரில் சாய்ந்து கிடந்த போர்க் அண்ணாவை நினைத்துக் கொண்டேன். அன்று தான் வீடு சென்று விட்டு வந்து எங்களிற்கு பலகாரம் தந்த பின் சிரித்தபடி இருந்தவர்.

"என்னடா, உங்கட செல் பொல்லாத சத்தமே? நான் கிட்ட நிற்க மாட்டன்?' எனப் பயமாய் நடித்தவர் தாயிடம் எப்படி விடைபெற்று வந்தார்? கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் "தாயே உனக்காக" என்ற இதய துளிகள் நெஞ்சத்தை அடைத்தன மெதுவாக இரைமீட்டு மென்று கொண்டேன். தாயே உனக்காக..... நான் போக வேண்டிய வேளை வந்துவிட்டது. நான் போய் வருகிறேன் அம்மா... உதயத்து மங்கிய இருளில் நேற்று வரை உன்னுடன் கட்டிலில் படுத்திருந்த உனது குழந்தையை - அவன் இன்னமும் உன்னுடன் படுத்திருக்கிறான் என்ற நினைப்பில் - நோக்கி நீ கைகளை நீட்டும் போது உன்னுடைய குழந்தை அங்கே இல்லை. என்று நான் கூறுவேன். அம்மா நான் போய்வருகிறேன்.

மெல்லிய காற்றின் அலையாய் வந்து நான் உன்னைத் தழுவுவேன். நீ குளிக்கும் போது நீர்த்துளியாக நான் மாறி உன்னை மீண்டும் மீண்டும் முத்தமிடுவேன்.

கார்கால இருளில் மழைத் துளிகள் இலைகளின் மேல் விழும் போது கட்டிலில் உறக்கமின்றிப் படுத்திருக்கும் உன்னுடைய காதுகளில் என்னுடைய குரல் மெதுவாக ஒலிக்கும்.

தொடரும்..........

# விழுதுகள்..... 09

லெப் லக்ஸ்மன்,
தியாகராஜா வரதராஜன்
ஆரையம்பதி
மட்டக்களப்பு
வீரச்சாவு 03.09.1991

படுவான்கரை மண்ணில் மரணம் உன்னை அணைத்துக் கொண்டது என்ற செய்தி எமக்குக் கிடைத்தது. உயிரற்ற உடலிலிருந்து உனது தலையை வெட்டிக் கொண்டு சென்றார்களாம் என்பதைக் கேள்வியுற்றதும் விக்ரரின் நினைவுதான் வந்தது. விக்ரரைப் போலவே நீயும் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்திருக்கிறாய் என்பதை உணர முடிந்தது.

மரணத்தால் உனது உடலை மட்டுமே எம்மிடமிருந்து பிரிக்க முடிந்தது. உன் உணர்வுகள். உன்னோடு பழகிய அந்த நாட்கள் இவையெல்லாம் படுவான் கரை வயல்களைப் போலவே என்றும் பசுமையானவை அவற்றை எம்மிடமிருந்து எப்படிப் பிரிக்க முடியும்.? அரைக் காற்சட்டை அணிந்த சிறுவனாக ''என்னை எப்ப றெயினிங்குக்கு அனுப்புவீங்க?'' என்று காசி அண்ணாவின் சகோதரர் சந்திரன் அண்ணையை நீ நச்சரித்துக் கொண்டிருந்த நாட்களிலிருந்து எதிரிகளைக் கிலி கொள்ள வைக்கும் வீரனாக - மட்டக்களப்பு வாழ் மக்களின் நேசனாக நீ விளங்கிய ஏழுவருட காலத்தையும் நினைத்துக் கொள்கிறேன். சொட்டுச் சொட்டாக விழுந்த கண்ணீருடன் இம்மடலை உனக்கு வரைகிறேன். நான் நம்புகிறேன். ஒவ்வொரு போராளியின் உள்ளுணர்வுகளுடன் ஒன்றிணைந்து இதனை நீ வாசிப்பாயென்று.

லக்ஸ்பிறே அப்படித்தான் உனக்கு நாங்கள் பெயர் வைத்தோம். அவ்வளவு சின்னப் பையன் நீ! காலப் போக்கில் லக்ஸ்பிறே என்ற பெயர் மறைய லக்ஸ்மனாக நீ பிரபல்யமானாய். 1984 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி - அப்போதுதான் நீ எங்களுக்கு அறிமுகமானாய். எஸ்.ரி.எப் .பொலிஸ் வருகிறார்களா என்று பார்த்துச் சொல்லும் பணிதான் ஆரம்பத்தில் உனக்கு வழங்கப்பட்டது. உனது தோற்றம் எவரையும் சந்தேகப்பட வைக்காது என்பதால் இப்பணியில் உன்னை நாம் ஈடுபடுத்தினோம். இது தவிர்ந்த ஏனைய நேரங்களில் சந்திரண்ணையுடன் அட்டைபோல் ஒட்டிக் கொள்வாய். 'என்னை றெயினிங் காம்புக்கு அனுப்புங்கோ' என்று நீ அவரிடம் விடாப்பிடியாக நிற்கும் போது 'உனக்கு வயசு வரட்டும் பொறு' என்று நாங்கள் கூறுவோம். அப்போது உனது முகம் போகும் போக்கு! அது ஒரு தனி அழகுதான் அக்காட்சியை நினைக்கும் போது 'தாயை நேசிக்க மீசை முளைக்கத் தேவையில்லை' என்ற கவிதை வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன.

எப்படியோ பாடசாலைச் சீருடையுடனேயே உன்னைப் பயிற்சிக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. பயிற்சி முகாமில் நீயும் சபேசனும் தான் சிறியவர்கள் இருவருமே ஒரே மாதிரியான குணாம்சங்களைக் கொண்டவர்கள். அமைதி. விசுவாசம். ஒழுக்கம் இவற்றுக்கு நீங்கள் உதாரணமாக திகழ்ந்தீர்கள். பின்னாளில் உங்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டபோது ஓடிக்கொண்டிருந்த நீ களைத்து விழுவாய். அந்தக் கடுமையான பயிற்சியின் போதும் 'கஷ்டமெண்டால் வீட்டுக்குப் போகலாம்' என்று கூறும் போது நீ மறுப்பாய். அடுத்த நாள் இன்னும் சிறப்பாகச் செய்ய முயற்சிப்பாய். உன் உடல் நிலை இதற்கு இடந்தராது. ஆனால் உன் உறுதி குலைந்ததை மட்டும் நான் காணவில்லை.

பயிற்சி முடிந்ததும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட போது அதை முறியடிக்க வரும் படையினரைத் தடுத்து நிறுத்தும் குழுவில் நீ இடம் பெற்றாய். அதுவே உனது முதல் களம். தொடர்ந்து குமரப்பாவுடன் படுவான்கரை மண்ணில் நீ செய்த சாதனைகள் பட்டியலிட முடியாதவை. அத்தாக்குதல்கள் உன்னை ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக இனம் காட்டின.

பாலையடிவெட்டையிலிருந்து மண்முனைத்துறை வரை கண்ணி வெடிகள் வெடிக்கும் போதும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் அந்நியப் படைகளின் சடலங்கள் ஏற்றப்படும் போது உனது பெயரையும் மக்கள் குசுகுசுத்துக் கொண்டனர். பின்னர் மட்டக்களப்பு நகருக்குள் உனது வேட்டொலிகள் கேட்டன. எங்கிருந்தோ வந்தவர்கள் ஊர்காவல் படை என்ற பெயரில் நகரில் காலடி எடுத்து வைத்த போது ஒரு நாள் தன்னந்தனியாக அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டாய். இவர்களில் இருவர் பலியாக ஏனையோர் தலைதெறிக்க ஓடினர். அதன் பிறகு சிங்கள ஊர்காவல்படை பொலிஸ் நிலையத்திலிருந்து வெளிவர ஆசைப்படவில்லை. அதை இந்தியப் படைகளுடனான போர் தொடங்கியது. உனது திறமை மேலும் வெளிப்பட்டது. அன்றொரு நாள் நீ மண் அளைந்து. போழையடித்து விளையாடிய. உன்னால் நேசிக்கப்பட்ட அந்தப் பரமநயினார் கோயில் முன்றலில் இந்தியப்படைகளின் காலடி படுகிறது. உனது துப்பாக்கிகள் வேட்டுக்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தின. பலியான சிப்பாயின் உடலை விட்டு அவர்கள் சிதறியோடினர். நீ அவர்களின் துப்பாக்கியுடன் தப்பிச் சென்றாய். இன்னொரு நாள் காத்தான்குடியில் வரிசையாக வந்து கொண்டிருந்த இந்தியப் படையினர் செல்லும் வரை காத்திருந்து கடைசியாக வந்த இந்திய ஜவான் மீது நீயும். சபேசனும் தாக்குதல் தொடுத்தீர்கள். உங்கள் துப்பாக்கி இயங்க மறுத்தது. அவனுடன் மல்லுக் கட்டினீர்கள். அவன் உன்கையைக் கடித்தான். நீங்கள் அவனது துப்பாக்கியாலேயே அவனது வாழ்வை முடித்தீர்கள். கைப்பற்றப்பட்ட துப்பாக்கியுடன் திரும்பி வந்தீர்கள். இப்படியே பல தாக்குதல்கள்.

சில காலம் செல்ல இந்தியப்படையினரின் முற்றுகையின் போது நீ சயனைட் உட்கொண்டதாகவும் உன்னைச் சித்திரவதைகள் செய்து உண்மைகளைத் தெரிந்து கொள்ளும்

(தொடரும்.....)

*மு.மனோகர்*
*(கரும்பறவை பசீர் காக்கா)*

# சுனாமி நிவாரணம்?

ஆழிப் பேரலையின் நிவாரணப் பணி இன்று பல பரிணாமங்களைக் கடந்து ஏதோவொரு பூதாகரமான விடயமாக உலாவத் தொடங்கி விட்டது. பேரலையால் மணித்துளியுள் மண்ணாகி விட்ட மைந்தர்களின் உயிர்களைக் காவு கொடுத்ததைத் தவிர கடந்த 06 மாதமாக எதுவுமே முன்னேற்றமாக நடந்துவிடவில்லை என்றே சொல்லலாம்.

இயற்கையின் கோரத் தாண்டவத்தால் இயற்கை எய்திவிட்ட பல்லாயிரம் உயிர்களைத்தவிர கோரத்தின் எச்சமாய் மிஞ்சிய மிச்சசொச்ச உறவுகளின் எதிர்கால வாழ்வோ இன்று சூனியமாகி விட்டது. இவர்களின் எதிர்காலம்தான் என்ன? என்று சிந்திக்கும் போது அது வெறும் மாயமாய் மாறிவிட்டது மட்டுமல்ல இப்போது கேலிக்கும் கேள்விக்குமான ஒரு விடயமாக மாறிவிட்டது.

இறந்தவர்களின் உடல்களை எப்படி அடக்கம் செய்ய முடியுமோ அப்படியெல்லாம் செய்துவிட்டு எஞ்சியவர்களின் வாழ்வை ஏதோ ஒரு முறையில் ஆதாரப்படுத்தி அநாதரவான அந்த உறவுகளை அவர்களின் வாழ்வை மேம்படுத்த எடுத்த எந்த முயற்சியும் இதுவரை கைகூடவில்லை என்பதே யதார்த்தமாகி விட்டது. எல்லாம் இழந்து ஏதிலிகளாக வாழ்கின்ற அவர்களின் நிலைதான் என்ன? என்ற வினாவிற்கான விடை விசித்திரமாகவே உள்ளது.

பேரலையால் தாக்கப்பட்டவர்கள் வெறுமனே எங்கோ வாழ்ந்த மனிதர்களும் அல்லர். எங்கள் எல்லோருக்கும் தெரியாத பிறநாட்டு அல்லது பிறகிரக வாசிகளும் அல்லர். எங்களோடு பிறந்து எங்களோடு வாழ்ந்த எங்கள் உறவுகள் அவர்கள். மதம், இனம், மொழி என வரும் வாழும் மண்ணிலே சகவாழ்வோடு ஒன்றித்தவர்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

எனவே இவர்களின் வாழ்வாதார நடவடிக்கைக்கு ஏற்ற எதையுமே செய்ய முடியாத அளவிற்கு இந்த நாட்டில் என்னதான் நடக்கிறது? பேரலையில் முற்றும் இழந்துவிட்ட அந்த மனிதர்களின் வாழ்வுக்கு எது ஆதாரமாகிறது? உடுத்த உடை



கூட இல்லாது மோதி வந்த அலையில் எஞ்சிய மனிதர்களை மனிதாபிமானமாக ஒருசில மணிகளில், காப்பாற்றி ஒரு சில நாட்களில் அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டிய சிறிலங்கா அரசாங்கம் இன்று பின்னடிப்பதன் அவலம்தான் என்ன? என்று வினா எழுப்பினால் அதற்கான காரணம் பல கோணங்களாக மாறி இன்று பொதுக்கட்டமைப்பு என்ற மாயையைத் தோற்றுவித்துள்ளது.

பேரலையில் மாட்டிக் கொண்டவர்களின் உயிர்களை உடனடியாக காப்பாற்றுவதில் தொடங்கிய சுனாமி அனர்த்தப் பணி, இழப்பீடுகளை வழங்க அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்தல், மனிதாபிமான தேவைகளைப் பூர்த்தி செய்தல், தற்காலிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என பலவடிவங்களில் பலதரப்பட்ட பிரச்சினைக்குள் உருவெடுத்து இன்று சிங்கள தேசத்தாரின் தலையீடு, எதிர்ப்பு, பிக்குகளின் எதிர்ப்பும் உண்ணாவிரதமும் என்றெல்லாம் ஏதேதோ நடக்கத் தொடங்கி இறுதியில் சுனாமி அனர்த்தக் கட்டமைப்பு என்ற ஒரு பூச்சாண்டி எல்லோரையும் ஏமாற்றத் தொடங்கி பேயாட்டம், பித்தலாட்டம் என ஏதோவெல்லாம் ஆட்டங்களாய் ஆடத்தொடங்கி விட்டநி

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் மிகுந்த துயரத்தில் இருக்கும் போது தங்களின் வாழ்வாதாரங்களை இழந்து வாழ்வே சூனியமாகி இருக்கும் போது!

**"சுனாமி அனர்த்த கண்ணாம்பூச்சி விளையாட்டுக்களில் மேலும் ஓர் கேலிக்கிடமான விடயம் பேசப்படுகிறது. அதுதான் சமகால அரசியல் நாடகமான சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பு என்பதாகும். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் மிகுந்த துயரத்தில் இருக்கும் போது தங்களின் வாழ்வாதாரங்களை இழந்து வாழ்வே சூனியமாகி இருக்கும் போது! அவர்களின் எதிர்கால வாழ்வு கேள்விக் குறியாகி விட்டபோது சிங்கள அரசால் முன்வைக்கப்பட்டுள்ள சுனாமி நிவாரணப் பணி அல்லது பொதுக் கட்டமைப்பு இன்று இலங்கைத் தீவில் பூதாகரமான ஒரு விடயமாகக் காட்டப்படுகிறது"**

லையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மக்களுக்கு எதுவுமே செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

சுனாமிப் பேரலையின் கோரத்தால் பாதிக்கப்பட்ட வடகிழக்கை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களான மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களின் நிலையோ இன்று மிக மிக உயர்வான நிலையில் அனர்த்த நிவாரண நடவடிக்கைகள் செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரமோ அனைத்து வசதிகளுடனும் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் பெரும்பான்மை இனத்தவர்களின் பிரதேசம் என்பதனால் அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அனர்த்தம் வந்த போது நீ சிங்களவன், நீ தமிழன், நீ முஸ்லிம் என்ற பாகுபாடு இல்லாமலேயே தாக்கியது. ஆனால் இப்போது நடக்கும் நிவாரணப் பணிகள் மாத்திரம் பெரும்பான்மையினத்தவரைத் தேடி அவர்களின் வாசல் கதவைத் தட்டி செய்யப்படுகிறது. ஆனால் வடகிழக்கிலோ நிலமை வேறு விதமாக மாறிவிட்டது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனர்த்தத்தை விட மோசமாக தங்கள் வாழ்வில் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். எல்லாம் இழந்து உடுத்த உடையோடு வந்தவர்கள் இன்றும் அதே நிலை மாறாமல் வாழ்வின் எல்லா சுமைகளையும் சுமக்கிறார்கள்.

வெட்டவெளியில் போடப்பட்ட கொட்டகைகளிலும், கூடாரங்களிலும் கொடிய வெயிலில் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கி விட்டார்கள். அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளிருந்து அனைத்துமே கிடைக்காமல் உள்ளது. அவர்களுக்கென்று வரும் எல்லா உதவிகளும் ஏதோ ஒரு விதத்தில் முடக்கப்படுகின்றது. மிக மோசமாகச் சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், உளநலன் பாதிக்கப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

இப்படியான சுனாமி அனர்த்த கண்ணாம்பூச்சி விளையாட்டுக்களில் மேலும் ஓர் கேலிக்கிடமான விடயம் பேசப்படுகிறது. அதுதான் சமகால அரசியல் நாடகமான சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பு என்பதாகும்.

அவர்களின் எதிர்கால வாழ்வு கேள்விக் குறியாகி விட்டது. சிங்கள அரசால் முன்வைக்கப்பட்டுள்ள சுனாமி நிவாரணப்பணி அல்லது பொதுக்கட்டமைப்பு இன்று இலங்கைத் தீவில் பூதாகரமான ஒரு விடயமாக காட்டப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதில்கூட வடகிழக்கு என நோக்கப்பட்டு அதற்குப் பயங்கரவாத முத்திரை குத்தி எதிர்ப்புப் போராட்டம் என்ற போர்வையில் தமிழர்கள் மீதும், தமிழர் தாயகத்தின் மீதும் உள்ள துவேசத்தின் மனவெளிப்பாட்டைக் காட்டுகிறார்கள். எந்த ரூபத்தில் தமிழர்களை அழிக்கலாம் என சகுனம் பார்த்திருந்தவர்களுக்கு சுனாமியால் ஏற்பட்ட படுமோசமான நிலமையானது தமிழர்களுக்கெதிரான துவேசத்தை, பழிவாங்கல்களைச் செய்ய ஏதுவான களமாக அமைந்து விட்டது.

'கீழே விழுந்தவனை அரவணைப்போடு தூக்கி அன்பு தழுவ அவனின் உடல் நலத்தைக் கவனித்து கனிவோடு அவனுக்கு தானமிடு' என்ற புனிதத்தை கற்றுக் கொடுத்த புத்தர் எனும் புனிதனின் வழிதொடர்ந்து வந்த ஞானிகள் இன்று என்ன செய்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

கீழே விழுந்தவனைத் தூக்கி விடாமல் போராட்டம் செய்து, ஆர்ப்பாட்டம், கலவரம் என்று எல்லாம் செய்து இறுதியில் உண்ணாவிரதம் என்று ஏதேதோவெல்லாம் செய்து தமிழர்களுக்கெதிரான எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள். தற்போது புத்தரின் பெயர் சொல்லி காவி உடை தரித்த அந்தக் காடையர்கள் செய்வதெல்லாம் ஒன்று. உயிருக்காகப் போராடும் மனிதத்தின் மீது ஏறி எதிர்ப்பு ஊர்வலம் நடத்துவதேயாகும்.

**க.மிரேசு.**

கடந்த காலங்களில் கொலை வெறியாட்டம் ஆடிய ஜே.வி.பி இனவாதிகளும், துறவு வாழ்க்கையின் புனிதத்தை அழுக்காக்கிய பித்தர்களும் இன்று ஜனநாயகம் பேசுவதோடு நின்று விடாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் செய்யப்படும் நிவாரணப் பணிகளையும் தடுத்து நிறுத்துகிறார்கள் என்றால் இவர்களே மனித நேயத்திற்கெதிரான பயங்கரவாதிகள் என்று சந்திரிகா அம்மையார் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக மோசமான போரைத் திணித்த சந்திரிகா அம்மையார் தருணம் பார்த்து உதவிக்கரம் நீட்டுவது ஒன்றும் புதிதல்ல. வரப்போகும் நிவாரணப் பணிகளில் தனது நாட்டை வலுப்படுத்தவே முயற்சிக்கிறார். இதற்கு முட்டுக்கட்டையாக உள்ள தேரர்களையும், ஜே.வி.பி இனவாதிகளையும் எச்சில் எலும்புத் துண்டைப் போட்டு எப்படிச் சம்மதிக்க வைப்பது என்று அவருக்குத் தெரியும். எதைச் செய்தாலும் பாதிக்கப்பட்ட மக்கள் பயன்பெற விரைவில் உதவுவது நல்லது.




## பொதுக் கட்டமைப்பு பொன்முட்டையிடும் வாத்தல்ல



அம்மணிக்கு:-

பொதுக் கட்டமைப்பு ஓருபடியாகக் கையெழுத்தாகி விட்டது. பேரினவாதிகளின் கூச்சல், பிக்குகளின் விதண்டாவாதப் பேச்சுக்கள், ஆர்ப்பாட்டம், கண்டனப் பேரணி இத்தனைக்கும் மத்தியில் தான் சர்வதேச சமூகம் சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு நிறுவப்பட்ட பொதுக்கட்டமைப்பிற்கு சிங்கள தேசத்தில் எக்கசக்கமான எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

ஆனால் ஒரு படியாக இது கைச்சாத்திடப்பட்டு விட்டது. எதிர்வரும் காலத்தில் இதனை அமுல்படுத்தி கரையோரப் பகுதி மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதில் சிறிலங்கா அரசு வழங்கும் ஒத்துழைப்பில்தான் இதன் உயிர் மூச்சு இருக்கிறது.

கடந்த காலங்களில் 'சிரான்' நிறுவப்பட்டு செயலிழந்து போனது. அதுபோன்று இந்தப் பொதுக் கட்டமைப்பு செயலிழக்கப்படாது தமது பணிகளை முன்னெடுப்பதற்கு உங்கள் ஒத்துழைப்பு தேவை. இன்று உலகம் பலிதமாகப் பேசுகிறது.

பொதுக்கட்டமைப்பு வரலாற்று ஒப்பந்தம் என்று கூட சில அவதானிகள் தெரிவித்துள்ளனர். உங்களுக்கும் பாராட்டுக்களும் கிடைத்துள்ளதாக அறிகின்றோம். ஆனால் தமிழ் மக்கள் இதுபற்றி அலட்டிக் கொள்ளவோ, மகிழ்வு கொண்டு கொண்டாடவோ இல்லை.

ஏனெனில் தென்னிலங்கை ஊடகங்கள் சுனாமிப் பொதுக் கட்டமைப்பு என்பது தமிழினத்திற்கு உரிமைகளை அள்ளிக் கொடுத்ததற்குச் சமம் என்பது போன்ற வார்த்தைகளைக் கொட்டி வருகின்றன.

உலக நாடுகளும் இப்படி ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்த முனைகின்றன. உண்மையில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் கட்டமைப்பு அப்படி தமிழினத்துக்கு உரிமைகளை தாரை வார்த்துக் கொடுக்கவில்லை. வெறுமனே கரையோரத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தை மீள் புனரமைப்புச் செய்வதற்கான ஒரு கட்டமைப்புத்தான். ஆனால் தமிழர் தாயகம் கடந்த இருபது வருடகால போரில் உங்கள் சிங்களப் படைகளின் எறிகணைகளால், விமானக் குண்டு வீச்சினால், பீரங்கிப் படகுகளால் சுடுகலன்களால் அழிந்து சிதைந்து கிடக்கின்றது. இதனை மீள்புனரமைப்புச் செய்ய வேண்டியது அவசியம்.

எனவே அதற்காக முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தற்போது கிடைப்பில் போடப்பட்டுள்ளது. இது அமுல் படுத்தப்படுமானால் தான் தமிழர் தாயகத்தின் புனர்வாழ்வுப் பணிகளை முன்கொண்டு செல்லலாம்.

இடம்பெயர்ந்து அகதிகளாக அவல வாழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் போரின் போது படையினரால் கொலை செய்யப்பட்ட தமிழினத்தின் உறவுகள் விதைவைகளாக, அனாதைகளாக, ஊனமுற்றவர்களாக இவ்வாறு பரிதவித்து வாழும் நிலையில் அவர்களது வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும். அப்போதுதான் சமாதானத்துக்கான உறுதிப்பாடு தெரியும்.

இப்போது நடைபெற்றுள்ள இந்தப் பொதுக்கட்டமைப்பு தமிழ் மக்களுக்கு பொன் முட்டை இடும் வாத்து என்று தமிழினம் கருதவில்லை, கருதவும் மாட்டாது. நீங்கள் கருதி விடாதீர்கள். அவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்து மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தாதீர்கள்.

இங்ஙனம்
ஈழமகன்.

# 'பெண்களின் நலன்கள் பேணப்பட வேண்டும்'

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1325 ஆம் ஆண்டு தீர்மானத்துக்கு அமைய; சகவாழ்வு மன்றமும், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கமும் இணைந்து; பெண்கள் சமூக நலத் தலைவர்களை ஒன்றிணைத்து; பெண்களின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மட்டக்களப்பு பொது நூலகக் கட்டட கேட்போர் கூடத்தில் பயிற்சிப் பட்டறை ஒன்றை சென்ற மே மாதம் 12 ம் திகதி நடாத்தின.

குறித்த தினத்தன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமான பயிற்சிப் பட்டறை 4.00 மணிவரை இடம் பெற்றது. இது சகவாழ்வு மன்றத்தின் பெண்கள் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திருமதி தேவிக்கா தயாபரன் அவர்களின் ஒழுங்கமைப்பில் நவாஸ் மொகமட், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவி விஷாக்கா தர்மதாஸ தலைமையில் நடைபெற்றது.

இதில் பல பிரதேசங்களில் இருந்தும் பல பெண்கள் கலந்து கொண்டார்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்கள், பெண் சமூகத் தலைவிகள், வைத்தியத் துறை சார்ந்த உத்தியோகஸ்தர்கள் மற்றும் விவசாயத் துறை சார்ந்த உத்தியோகஸ்தர்கள், காவல்துறை உத்தியோகஸ்தர்கள், பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் எனப் பல்வேறு துறைகளையும் சார்ந்தோர் இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டமை சிறப்பம்சம் எனலாம்.

அங்கே பெண்களின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், யுத்தத்தினாலும், சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையில் தன்னம்பிக்கையுடனும், தற்துணிவுடனும், சுயகௌரவத்துடனும் வாழக்கூடிய சூழ்நிலையை எவ்வாறு உருவாக்கலாம் என்றும் ஆராயப்பட்டன.

கடந்தகால ஆயுத மோதல்களால் அல்லலப்பட்டு கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பாக பெண்களே ஆவார்கள். இந்த வகையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோராக இருக்கிறார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் 3 இலட்சத்துக்கும் அதிகமானோராக இருக்கிறார்கள். இவை பற்றிய கருத்துப் பரிமாறல்கள் அங்கே இடம் பெற்றன.

எமது நாட்டிலே குடும்பத்தைத் தலைமை தாங்கும் பொறுப்பை ஏறத்தாழ 4 இலட்சம் பெண்களும், சிறுவர்களும் சுமக்கிறார்கள். அதாவது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இடம் பெயர்ந்தோராகவும், அகதிகளானோராகவும் அதிகமாகப் பெண்களே இருக்கிறார்கள். எனவே இவர்களுக்கிடையில் நல்லலெண்ணங்களையும், நம்பிக்கைகளையும், சமாதானத்தினையும் ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகிறது.

போரினால் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டு பிளவுபட்டுக் கிடந்த எமது இன உறவுகளை விழிப்படையச் செய்தது கடற்கோள் அனர்த்தம்! இதன் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டுப் புதுப்புது முகங்களைக் காண முடிந்தது. இது சமூக ஒருங்கிணைப்பினையும், பல புரிதல்களையும் எமக்கு விட்டுச் சென்றது. இதனை நாம் தக்க முறையிலே பயன்படுத்திக் கொள்வது அவசியமானதாகும்.

மேற்படி பயிற்சிப் பட்டறையில் பெண்கள் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் தேவிக்கா தயாபரன் அவர்கள் உரையாற்றுகையில்; மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக பெண்கள் அமைப்புகளுக்கு ஊடாக இங்கு முன்வைக்கப்பட்ட மகளிர் தொடர்பான சமாதானம், பாதுகாப்புப் போன்ற கருத்துக்கள் ஒவ்வொரு பயிற்சிப் பட்டறைகளிலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பெண்கள் தொடர்பான பாதுகாப்பற்ற சூழ்நிலையும் உடல், உள ரீதியான வன்முறைகளும் கூடிக் கொண்டே செல்கின்றன.

ஆகவே ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1325 ஆம் ஆண்டு தீர்மானத்துக்கு அமைய கொள்கை மாற்றங்களை குடும்ப, சமூக அரசியல் தளங்களில் ஏற்படுத்துவதற்கு இன, மத, மொழி பேதமின்றி அனைத்துப் பெண்களும் ஒன்றிணைந்து செயற்படுவதோடு பெண்ணியல் அமைப்புகளும் வலுவூட்டப்படுதல் வேண்டும்.

இதனுடன் அனைத்து விடயங்களிலும் திட்டமிடல், தீர்மானம் எடுத்தல் போன்ற செயற்பாடுகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தைக் கூட்டுவதாலும் பங்கேற்றுக் கொள்வதற்கான தளத்தை விசாலமாக உருவாக்க முடியும் எனவும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

மேலும் அந்தப் பயிற்சிப் பட்டறையில் 'பெண்களின் பாதுகாப்பும் சமாதானமும்' என்னும் தலைப்பில் ஆராயப்பட்டதுடன் இவை தொடர்பான கருத்துக்கள் அங்கு வந்த பெண்களிடமிருந்தும் கேட்டறியப்பட்டன.

பெண்களுக்குப் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பிரச்சினைகளுக்குத் தொடர் நடவடிக்கைகள் மூலம் தீர்வை ஏற்படுத்திக் கொடுத்தல் முதலான கருத்துகள் அன்று முன்வைக்கப்பட்டன. இவை சம்பந்தப்பட்ட முடிவுகளும் எடுக்கப்பட்டன.

பெண்கள் 50 வீதம் அரசியல் மட்டத்தில் இல்லாவிட்டாலும், 30 வீதமாவது இருக்க வேண்டும். அதாவது அடிமட்டத்தில் இருக்கும் பெண்கள் நிச்சயம் அரசியலில் இருக்க வேண்டும். கடந்த ஆண்டுகளுக்கு முன்பு 5 வீதமான பெண்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார்கள். இன்றும் இது இதே நிலையிலேயே இருக்கிறது. இது கவலைக்குரிய விடயமாகும். இனிமேலாவது பாராளுமன்றத்திலே பெண்களின் பிரவேசம் அதிகரிக்கப்படல் வேண்டும்.

அரசியல் உட்பட அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பங்குபற்றுதல்கள் அதிகரிக்கப்படல் வேண்டும். அவர்களுக்கு எதிரான வன்முறைகளும், அடக்கு முறைகளும், பாலியல் பலாத்கார காட்டு மிராண்டித்தனங்களும் கை விடப்படல் வேண்டும். அதேநேரம் பெண்கள் தமது நடையுடை பாவனைகளில் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும்.

விழிப்புணர்வும் புதுமை வேகமும், புரட்சிப் போக்கும் வளர்ச்சி அடைய வேண்டும். இவ்வாறான பல்வேறு துறைகளிலும் தொனிப்பில் நல்லெண்ணங்கள் அந்தப் பயிற்சிப் பாசறையிலே வெளிப் படுத்தப்பட்டன.

**த.தயாளினி.**

# இதயத்தின் யன்னலே கண்கள்

ஒருவருடைய மனத்தின் ஆழத்தை அவருடைய கண்களில் தரிசித்து விடலாம். மனதைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாகக் கண்கள் உள்ளது. உள்ளத்தில் பளிச்சிடும் எண்ணங்களையும் கண்களில் பார்க்க முடியும்.

சகோதரிகளே உங்களது சினேகிதிகளின் விழிகளீல் கண்மணி பெரிதாகி இருந்தால் அவருடன் புன்சிரிப்புடனும், நட்புடனும் பழகுங்கள். நீங்கள் காட்டும் ஒத்துழைப்பை அவர் மிகவும் மதித்து ஏற்றுக் கொள்வார். இவர் மூளையை வைத்து சிந்திப்பவர் அல்ல. இதயத்தை வைத்துச் சிந்திப்பவர்.

அத்துடன் உங்கள் சினேகிதிகளின் கண்கள் பெரிதாக இருந்தால் அவர் அவருடைய குடும்பத்தில் அக்கரை கொண்டவராக இருப்பார் என நம்பி அவருடைய குடும்பத்தினரைப் பற்றி விசாரியுங்கள். அதன்மூலம் அவர் பெருமகிழ்ச்சியடைவார். அதேநேரம் சிறிய கண்களைக் கொண்டவரிடம் அவரின் குடும்பத்தைப் பற்றிக் கேட்காதீர்கள். ஏனெனில் அவர் குடும்பத்தாரிடம் அக்கரை கொண்டவராகக் காணப்பட மாட்டார். வேலை விடயத்திலே அவர் கூடுதல் அக்கரை கொண்டவராக இருப்பார். அத்தோடு இவர்கள் தமது மன உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் விரும்பமாட்டார். உணர்ச்சிகளை வெளிக் கொண்டு வரமுடியாதவர்களாகவும் இவர்கள் காணப்படுவார்கள்.


சிலருடைய கண்கள் நல்ல பிர காசமானதாகக் காணப்படும். இந்தக் கண்களை உடையவர்கள் பிறரைக் கவர்பவர்களாகவும், பெரும் கூட்டத்தை தமது கட்டுப் பாட்டில் வைத்து நடாத்திக் செல்பவர்களாகவும் இருப்பார்கள்.

நமது பெண்களின் கண்கள் வைரத்தைப் போல மின்னுவதாக இருந்தால், இவர்கள் குறும்புத்தனம் கொண்டவர்களாக இருப்பார்கள். குறும்பு செய்து பிடிபடும்போது மற்றவர்களை மாட்டிவிட்டு இவர்கள் தப்பித் துக் கொள்வார்கள். சில பெண்களுடைய கண்களைப் பார்த்தால் எப்பவும் சோகம் குடி கொண்டிருக்கும். இவர்கள் தங்களுக் கான பிரச்சினைகளைப் பற்றியே எப்போதும் கவலைப் படுபவர்களாக இருப்பார்கள்.

எனவே சகோதரிகளே உங்களது நண்பர் உலகிலே அல்லது வேலைத் தளங்களிலே சிலரைப் பற்றி அறிய வேண்டுமாயின் அவர்களின் உடல் உறுப்புக்கள் மூலமும் அறிந்து கொள்ளலாம். இவ்விடயத்தை யும் நீங்கள் கற்றுக் கொண்டு பயன்படுவது உங்களுடைய வெற்றிக்கும் உத்தர வாதமாகவும் அமையும்.

**எம்.துளசி, புதுக்குடியிருப்பு.**

# மகளிர் மகுடம்



# சமைப்போம் சுவைப்போம்

## அரிசிப் பொரி லட்டு



**தேவையான பொருட்கள**

| | |
|---|---|
| அரிசிப் பொரி:- | 1/2கிலோ. |
| சீனி:- | 1/4கிலோ. |
| நெய்:- | 1 கரண்டி. |
| முந்திரி:- | தேவையானளவு. |
| திராட்சை:- | அளவுக்கு. |
| ஏலப்பொடி:- | சிறிதளவு. |

**செய்முறை:-**

அரிசிப் பொடி, சீனி இரண்டையும் தனியாக மாவாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் இரண்டையும் சேர்த்து அதில் வறுத்த முந்திரி, திராட்சை, ஏலப்பொடி என்பனவற்றைச் சேர்த்துக் கலக்கவும். பின்னர் நெய்யைக் காய்ச்சி அதில் ஊற்றி நன்றாகக் கலந்து உருண்டைகளாகப் பிடிக்கவும். இது மிகவும் ருசியானது. உடம்புக்கு நல்லது. அத்தோடு சிக்கனமானதும் கூட.

# வீட்டுக் குறிப்புக்கள்

- பச்சைக் காய்கறிகள் விரைவில் வேகுவதற்கு அதனை சிறிது உப்புடன் சேர்த்து வேகவைத்தால் விரைவில் வெந்துவிடும்.
- தோசைக் கல்லில் தோசை ஒட்டாமல் எடுக்க தோசை மாவில் சிறிது ரவையைச் சேர்க்கவும்.
- மஞ்சள் பொடியையும் கற்பூரப் பொடியையும் கலந்து வீட்டில் கழிவு நீர் செல்லும் இடங்களில் தெளித்தால் பூச்சிகள் வராது.
- வாங்கிய பாகற்காய் பழுக்காமல் இருக்க அதை இரண்டாக வெட்டி வைத்தல் வேண்டும்.
- ரோஜாப் பூவைப் பறித்து அதன் மையத்தில் ஒரு துளி தேங்காய் எண்ணெய் விட்டு வைத்தால் இதழ்கள் உதிராமல் இருக்கும்.
- எலுமிச்சம் பழங்களை உப்பு நீரில் அமிழ்த்தி வைத்தால் ஒருவாரம் வரைக்கும் வாடாமல் இருக்கும்.
- மழைக் காலங்களில் தீப்பெட்டியில் உள்ள குச்சிகள் இளகிவிடும். அதற்கு தீப்பெட்டியினுள் இரண்டு மூன்று அரிசிகளைப் போட்டு வைத்தால் இளகிப் போகாமல் இருக்கும்.

**கே.எல்.ஹில்மி, சாய்ந்தமருது - 13.**

# அழகுபடுத்தலின் ஒப்பனை முறைகள்



சகோதரிகளே இறைவனுடைய படைப்பில் அழகற்றது என்று ஏதுவுமேஇல்லை. சிறப்பாக இறைவனது சிருஷ்டியான உயிர்கள் ஒவ்வொன்றுமே ஒவ்வொரு வகையில் அழகு மிளிர்கிறது. குறிப்பாக நமது பெண்கள் ஒன்று திரண்ட அழகின் உருவங்கள். ஒவ்வொரு பெண்ணிடமும் ஒவ்வொரு விதமான எழில்த் தோற்றத்தைக் காணக்கூடியதாகவிருக்கும். இறைவனுக்கு நன்றி செலுத்தி 'நானும் அழகானவள்' என்ற பெருமை உள்ளத்தில் பொங்க தலை நிமிர்ந்து நில்லுங்கள்.

தன்னம்பிக்கைதான் மனிதர்களின் முதல் அழகு. நான் நிச்சயமாக அழகாக இருக்கிறேன் என்ற தன்னம்பிக்கை உங்களை விட்டு அகலாதவாறு இருந்தால் உங்கள் அழகுக்கு குறைவேதும் ஏற்படாது.

பெண்களே உங்களது அழகைப் பற்றி மறந்தும் கூட பிறருடைய அபிப்பிராயத்தைக் குறிப்பாக பிற பெண்களிடம் கருத்தை வாய் விட்டுக் கேட்காதீர்கள். அந்த விளைவுக்குக் கிடைக்கக்கூடிய பதில் சில சமயம் உங்கள் மனதை பலவீனப்படுத்தி விடும்.

பலவீனமான மனம் அழகு இயல்பை நிலை குலையச் செய்து விடும். உங்களது அழகைப் பிற பெண்களின் அழகுடன் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள் அது தவறு. ஏனெனில் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு விதத்தில் அழகானவள். உங்களைப் போன்ற தோற்றம் எழில் வேறு பெண்களிடம் இருக்க முடியாது.

சகோதரிகளே உங்களின் உடல் குள்ளமாகவும் கறுப்பாகவும் இருக்கும் என நீங்கள் நினைத்து இவை அழகு இல்லை என்று நினைத்துவிட வேண்டாம். கட்டையிலும் கட்டழகுதான் உண்டு. கறுப்பான உடல் நிறத்திற்கும் ஒரு கவர்ச்சி உண்டு.

எனவே இவைகளைக் கொண்ட எந்தப் பெண்ணும் கவலையடையத் தேவையில்லை.

எனவே சகோதரிகளே எழில் மேனியால் மட்டுமல்ல ஏற்றமிக மனத்தாலும், சுத்தமான இதயத்தாலும் நீங்கள் மாசற்ற பேரழகிகளாகத் திகழ முடியும். எனவே முயற்சி செய்யுங்கள்.

**எம்.சுபாஜினி**
**வீச்சுக் கல்முனை.**

இவ்வாரச் சிறுகதைகள்

# ஏமாற்றங்கள்

மதி.



அன்று மாலை 5.00 மணியிருக்கும். சனங்கள் எல்லோரும் பரபரப்போடு ஓடத் தொடங்கினார்கள்.

சனங்கள் ஓடுவதைக் கண்ட ராணி அவர்களைப் பார்த்து 'எதுக்காக ஓடுறீர்கள்? என்ன நடந்தது?' என்று பதட்டத்தோடு கேட்டாள்.

'ஆமிக்காரர்கள் சுட்டுக் கொண்டு வாரார்கள். கெதியா ஓடித் தப்புங்கள்' என்று கதறியவாறே சனங்கள் ஓடினார்கள். உடனே ராணியும் தனது பிள்ளைகளான சுமதி, வாணி, அருண் ஆகியோரைக் கூட்டிக் கொண்டு ஓடினாள்.

ஓடியவர்கள் அனைவரும் ஒரு பள்ளிக் கூடத்தில் அமர்ந்து இருந்தார்கள். ராணி தனது பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு போய் உயிர் தப்பினாலும், வேலைக்குப் போன கணவனின் நிலை என்ன ஆனதோ? என்ற பதட்டத்தோடு அங்கும், இங்கும் திரிந்தாள்.

தனது கணவருக்கு ஏதும் நடந்திருக்காது. எங்களைத் தேடி வந்து விடுவார். தான் கும்பிடும் தெய்வம் கைவிடாது என்று எண்ணியவளுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்தது.

ஆம், ஆமிக்காரர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினார் ராணியின் கணவர். இதனையறிந்த ராணி வேதனையால் துடிதுடித்தாள். திருமணம் ஆகாத இரண்டு பெண் பிள்ளைகளை எவ்வாறு கரை சேர்ப்பது என்று பதறினாள்.

அப்பொழுதுதான் பக்கத்து வீட்டு அக்கா சொன்னாள் 'நடந்ததை நினைத்து வேதனைப் படுவதை விட்டுத்து உனது பிள்ளைகளைக் கரை சேர்ப்பதற்கு ஒரே ஒரு வழி, உன் மகனை வெளிநாடு அனுப்ப வேண்டும். அவன் போய் உழைத்து உன் பிள்ளைகளைக் கரை சேர்க்கட்டும்.' இதனைக் கேட்ட ராணி தனது மகன் அருணை வெளிநாடு அனுப்புவதற்காக ஓடாத இடம் இல்லை.

ஒரு மாதிரியாக குடியிருந்த வீட்டை அடகு வைத்துப் பெரும் சிரமத்துக்கு மத்தியில் தன் மகனை வெளிநாடு அனுப்ப காசை ஏஜன்சியிடம் கொடுத்தாள்.

காசை வாங்கிய ஏஜன்சிக்காரன் உங்கள் மகன் அருண் வேலை செய்வதற்குரிய ஒழுங்குகள் அனைத்தும் செய்துள்ளதாகக் கூறி' அருணை வெளிநாடு அனுப்பினான்.

மகன் வெளிநாடு போய்விட்டான். இனி எங்களுக்கு எந்தக் கஷ்டமுமில்லை. அடகு வைத்த வீட்டை எடுத்து விடலாம். ஊர் ஆக்கள் அனைவருக்கும் சொல்லித் தனது பிள்ளைகளின் திருமணங்களைச் சிறப்பாகச் செய்யலாம் என்று மணமகிழ்வோடு ராணி இருந்தாள்.

ஆனால் வெளிநாடு சென்ற மகனுக்கு இருக்கக்கூட ஒரு இடமில்லாத அளவுக்கு அருணை ஏஜன்சிக்காரன் தெருவில் விட்டிருந்தான்.

'தான் தெருவில் இருப்பது அம்மாவுக்குத் தெரிந்தால் துடி துடித்து விடுவாள்' என்று எண்ணிய அருண், தான் படும் துன்பங்களைத் தனக்குள்ளேயே பூட்டி வைத்தான்.

அம்மாவின் ஆசைகள் நிறைவேற வேண்டும் என்று எண்ணிய மகன். தெரியாத ஊரில் ஓர் வேலை எடுப்பதற்காகக் கடும் சிரமப்பட்டான்.

எப்படியாவது ஓர் வேலை எடுத்து அம்மாவின் கனவுகளை நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கையில் வேலை தேடிச் சென்றவனுக்கு ஏமாற்றங்களே கிடைத்தன. ஏமாற்றங்கள் நிரந்தரமல்ல. எப்படியாவது வேலை எடுத்து விடலாம் என்று எண்ணியவனுக்கு முயற்சி பலன் அளிக்கவில்லை.

'இருந்தாலும் இன்று எப்படியாவது யாருடைய காலில் விழுந்தாவது எனது நிலையைச் சொல்லி வேலை எடுப்போம்' என்று மன வேதனையோடு சென்றவன் ஒரே அடியாக அம்மண்ணை விட்டுச் சென்றுவிட்டான்.

ஆம், பல யோசனைகளுடன் வேலை தேடச் சென்றவன் பஸ் விபத்துக்கு பலியாகி....... அந்த இடத்திலேயே அருணின் உயிர் பிரிந்தது. இறந்தவன் யார் என்று இனம் தெரியாமலேயே அருணின் சடலம் வெளிநாட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

இதனையறியாத தாய், "தனது மகன் நல்ல வேலையில் சேர்ந்து இருப்பான். எமது கஸ்டங்கள் எல்லாம் இனித் தீர்ந்து விடும். நாம் யாரிடமும் எதுக்காகவும் கை ஏந்தத் தேவையில்லை. எனது மகனின் உழைப்பிலே இரண்டு பிள்ளைகளின் கலியாணத்தையும் சிறப்பாகச் செய்யலாம்" என்று நினைத்தவாறு தனது மகனின் மடலுக்காய்த் தபால்க்காரனை எதிர்பார்த்தவாறு வீட்டுத் திண்ணையில் அமர்ந்தாள்.

அன்றும் மடல் இல்லை. மாலை மயங்கி இருள் கவிந்தது. அத்தாயினது கண்களோ ஏக்கத்தால் கசிந்தது.

இப்படியாக எத்தனை குடும்பங்கள்தான் எண்ணிலா ஏமாற்றங்களையும், ஏக்கங்களையும் தொடர் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு வாழ்கிறது.

இதுதான் தமிழ் பேசும் குலத்துக்கான தலை நிமிர்வும் ஆகிறது.

---

# வசந்தகால நினைவுகள்





பத்து வருடத்திற்குப் பிறகு என் சொந்த ஊர் மட்டக்களப்பைப் பார்க்கும் ஆசையில் லண்டனிலிருந்து வந்தான் தீபன். கொழும்பை வந்தடைந்து மட்டக்களப்புப் பஸ் ஒன்றில் ஏறிக் கொண்டான்.

பஸ்சுக்குள் ஏறியதும் அவன் கண்கள் யாராவது உறவினர்கள். நண்பர்கள் இருக்கிறார்களா என்று தேடின. எல்லோரும் புதுமுகமாக இருந்தார்கள். பஸ் மட்டக்களப்பை நெருங்க நெருங்க அவனுக்கு பழைய நினைவுகள் வந்து போய்க் கொண்டிருந்தது.

வழியோரம் என்னை அறியாமலே சில கண்ணீர்த் துளிகள்...! தான் வாழ்ந்த வீடு. உறவுகள். படித்த நண்பர்கள். பாடசாலை ஆசிரியர்கள். பெற்றோர். குறும்பான தங்கை. தம்பி. இவர்களையெல்லாம் விட்டு விட்டு லண்டன் போக வேண்டிய சூழ்நிலை. தீபனுக்கு பத்தாம் ஆண்டு படிக்கும் போது அந்த ஆசை நிறைய இருந்தது.

தீபன் படிப்பை இடையில் விட்டு பணம் உழைக்கும் ஆசையில் மாமாவுடன் லண்டன் போனான். எல்லோருமே லண்டன் என்பது சொர்க்கம் என்பார்கள். ஆனால் அங்கு சென்ற போதுதான் ஒவ்வொரு வினாடியும் நரகமாகத் தெரிந்தது. உழைப்புக்குத்தான் லண்டன்! வாழ்வதற்கோ அது நரகம்! கொஞ்ச நேரம் ஓய்வு இல்லை. ஒழுங்கான தூக்கம். சாப்பாடு. உறவுகளோடு கூடப் பேசமுடியாமல் இயந்திரம் போல் சுழலும் வாழ்க்கை வாழ்ந்தான்.

தீபனுக்கு நினைக்கவே கசப்பாக இருந்தது. நம் ஊரில் தென்னைமர நிழலில் பாய் போட்டுப் படுத்தால் நித்திரை வருவதே தெரியாது. லண்டனில் ஏசி பூட்டி கட்டில் மெத்தையில் தூங்கினாலும் உறக்கம் வராது. இங்கிலீஸ் வார்த்தையால் பேசிப்பேசி அலுத்து விட்டது. பஸ்சுக்குள் இருந்தவர்கள் தமிழில் பேசுவதைக் கேட்டு ஆனந்தப்பட்டுக் கொண்டான் தீபன்.

நெடு நாளைக்குப் பிறகு வாய் விட்டுச் சிரித்தான். மட்டக்களப்பு பஸ் தரிப்பிடத்தை வந்தடைந்தான்.

தீபனுக்கு தான் பிறந்த மண்ணில் கால் வைக்கும் போது உள்ளமெல்லாம் குளிர்ந்தது. வீட்டை நோக்கி நடக்க என் வீடே மாறிப் போய் இருந்தது. ஓலையால் வேலி போட்டு இருந்தவர்கள். இப்போது மதில்........ பெரிய கேற் போடப்பட்டிருந்தது. புகைப்படத்தில் பார்த்த என் தங்கை அஸ்வியா வளர்ந்து பெரியவளாகி.... ரோஜாப் பூ பறித்துக் கொண்டிருந்தவள் கேற் திறக்கும் சத்தம் கேட்டு அம்மா அண்ணா வாறார் என்று கத்தினாள்.

உள்ளேயிருந்த அம்மா நரைத்த தலையுடன் முன்னேவர. பின்னாலே அப்பா. பாட்டி எல்லோரும் வெளியே ஓடி வந்தார்கள். 'என்னடா தீபன் ஒரு போன் கூட எடுக்காம வந்திட்டா. அதுவும் நடந்து வந்திருக்கா நம்மட்ட எத்தன கார் இருக்கு. அதில் ஒன்ற அனுப்பி இருப்பேன்' என்று அம்மா சொன்னதைக் கேட்டு எனக்குச் சிரிப்பு வந்தது. நாங்கள் சைக்கிள் கூட இல்லாமல் நடந்து சென்ற காலத்தை நினைத்துப் பார்த்தான் தீபன். அஸ்லியா வேலைகாரன வரச் சொல்லி அண்ணாட பெட்டியெல்லாம் கொண்டு போகச் சொல்லு என்றார் அப்பா. தீபனுக்கு லண்டன் நினைவுதான் வந்தது.

ஏன் என்றால் தீபனும் லண்டனில் வீட்டு வேலைக்காரனாகத் தான் இருந்தான். வாங்க அண்ணா. 'எப்படி இருக்கீங்க?' என்றாள். என் செல்லத் தங்கை அஸ்வியா. இருபது வயதை அடைந்த பருவமங்கையாக இன்றவள்.

'அண்ணா உங்களுக்கு சரியான வேலையாமே'

'இல்லம்மா யார் சொன்னாங்க?'

'அம்மாதான் சொன்னவங்க. நான் நல்லாத்தான் இருக்கிறன். 'நீ எப்படி இருக்கிறா' என்றான் தீபன்.

'எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் அண்ணா....!' 'ஓ வெரிகுட்....' தங்கையைப் பாராட்டினான் தீபன். அவனுக்கோ பேரானந்தம். தீபன் வந்து குளிச்சிட்டு சாப்பிடு' என்றாள் அம்மா. 'அம்மா நான் கிணத்தில குளிக்கிறன்!' 'ஏண்டா உனக்கு விசரா? கிணத்தில் வாளியால் அள்ளிக் குளித்தது போல் எதில் குளித்தாலும் திருப்தி கிடைப்பதில்லை. கிணற்றடிக்குக் குளிக்கப் போனான். அங்கு பெரிய மாமரம் ஒன்று இருந்தது. அந்த மாமரத்தைப் பார்த்த போது தீபனுக்கு பழைய ஞாபகம் வந்தது.

பக்கத்து விட்டு அன்ரியின் வீட்டில் நாட்டி இருந்த குட்டி மாமரத்தைப் பிடுங்கி எங்கள் கிணற்றடியில் வைத்து அது இப்போது பெரிதாக வளர்ந்து நிறையப் பழங்களைச் சுமந்தபடி இருந்தது. பாடசாலையில் படிக்கும் போது கல்லால் எறிந்து பிடுங்கி சாப்பிட்டதை நினைத்த போது தித்திப்பாக இருந்தது.

அந்தப் பசுமையான துள்ளித் திரிந்த பருவம் மீண்டும் வந்திடாதா என்று மனம் ஏங்கியது. என்ன செய்ய காலம் எல்லாம் மாறிப் போச்சி. ஊருக்கு வந்த போதுதான் மனதிற்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. தீபனின் தம்பி ஓடி வந்து அண்ணா இந்த மாமரம் உங்களுக்கு ஞாபகமிருக்கா பக்கத்து வீட்டு அன்ரியின் வீட்டில் இருந்த மாமரத்தைத் திருடிவந்து நம்மட வீட்ட நாட்டி வைச்சீங்களே! அதுதான் இது என்றான். ஓமடா என்று தீபனும் தம்பியும் சிரித்துக் கொண்டார்கள்.

தீபன் வா சாப்பிட என்றாள் பாட்டி. சாப்பிடவே தோன்றவில்லை. சந்தோசத்தில் வயிறு நிரம்பியது போல் இருந்தது. பத்துவருடம் தொலைந்து போன நிம்மதி. சந்தோஷம் இப்போது சிறகடித்துப் பறந்தது.

கலோ தீபன் என்று ஒரு இளம் பெண் வந்து கொண்டிருந்தாள். யார் நீங்க என்றேன். என்ன? தீபன் லண்டன் போனதும் எங்களையெல்லாம் மறந்து போயிட்டீங்களா? என்றாள். எனக்கு ஞாபகம் வரத் தாமதமாகியது. ஓ.... நீங்க விமலாதானே என்றேன். பரவாயில்லையே ஞாபகமிருக்கே என்றாள்.

அண்ணா விமலாவை உங்களுக்குத் தெரியும்தானே. ஓம் அஸ்வி தெரியும். விமலா இப்ப என்ன செய்கிறீங்க?'

'கலியாணம் கட்டி இரண்டு குழந்தையுடன் இருக்கிறேன். ''அம்மா'' என்று ஒரு குழந்தை ஓடி வந்தது.

''கலோ அங்கிள் நான் மதுஷன்'' என்று தன்னைத்தானே மூன்று வயதுக் குழந்தை அறிமுகப்படுத்தியதைப் பார்க்கும் போது விமலாவின் குழந்தையைக் கட்டிப் பிடித்துத் தூக்கி கொண்டான் தீபன். விமலா வேறு யாருமல்ல தீபனோடு படித்தவள்தான். அழகும் அறிவும் நிறைந்தவள். என்னைவிடப் படிப்பிலும் கெட்டிக்காரி.


அந்த அழகில் நானும் மயங்கியவன்தான். ஒரு வருடமாக ஒரு தலையாகக் காதலித்தேன். அக்காதலைப் பற்றிச் சொல்ல முடிவில்லை. அவள் பெரிய பணக்காரியாக இருந்தாள். அவளுக்கும் தீபனுக்கும் எட்டாத தூரம். எட்டாத கனியைப் பறிக்க தீபன் முயற்சிக்கவில்லை; இப்போது தீபன் பணக்காரன். அவள் ஏழையாகிப் போனாள்.

என்ன செய்யலாம் காலம் செய்த கோலமென்று எண்ணிக் கொண்டான். பின்னர் தீபன் வந்திருப்பதைக் கேள்விப் பட்டு வந்திருந்த பழைய நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்த போது பழைய வாழ்க்கை எனக்குக் கிடைத்த சந்தோஷத்தில் தன்னையே மறந்து சிரித்தான்.

சிவலிங்கம் சுமதி
ஏறாவூர் - 04.

# பொதுக்கட்டமைப்பு: சந்திரிகா என்ன நோக்கத்தோடு ?





எதிர்மறையான எதிர்வு கூறல்களுக்கு மத்தியில் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கடந்த வாரம் எட்டப்பட்டு விட்டது. சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பு நிலைக்குள்ளும் தனது அரசு சார்பு அமைச்சின் செயலாளர் ஊடாகக் கையொப்பமிட்டு அதனை உறுதி செய்திருக்கின்றார்.

இதன் மூலம் இலங்கையின் அரசியலரங்கில் ஒரு காட்சி மாற்றமே ஏற்பட்டிருக்கின்றது. இது எதிர்பாராத ஒரு மாற்றம் தான். இருப்பினும், கடந்த பத்தாண்டுகளாக இருந்து வந்த அரசியல் பின்புலம் ஒன்று தலைகீழாக மாறிவிட்டது என்று இதனைக் கருத முடியாது. 1995ம் ஆண்டு முதல் மிகக் கொடிய போரொன்றைக் கட்டவிழ்த்து விட்டு ஜனாதிபதி சந்திரிகா, யாரைத் தோற்கடிக்க முயன்றாரோ, அவர்களுடன் பலரது எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் ஒரு உடன்பாடொன்றுக்கு வந்திருக்கின்றார்.

கடந்த பத்தாண்டுகளுள் மட்டும் தமிழ் மக்கள் சந்தித்த இழப்புக்களையும் துன்பங்களையும் ஒரு தட்டில் வைத்துக் கொண்டு சந்திரிகா செய்து விட்டதாகக் கூறப்படும் இந்தச் சாதனையை எடை போட்டால், தமிழ் மக்கள் ஈடேறுவதற்கானவை எவையுமில்லை என்பது புலனாகும்.

அத்துடன் இப்போது அவரது அரசு ஒப்பமிட்டிருக்கும் பொதுக்கட்டமைப்பு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை மட்டும் கொண்டு வரப் போவதாக இல்லை. அதனை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போட்டு விடுவதற்கான சந்தர்ப்பங்களையும் சூழமைவுகளையும் அதிகமாகக் கூட்டி வந்திருக்கின்றது.

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு தனியரசுக்கான சட்ட அங்கீகாரத்தையும் வழங்கியிருப்பதாக ஜே.வி.பியின் விமல் வீரவன்ச உரத்துக் குரல் வைக்கின்றார். இதுவரை காலமும் புலிகள் இயக்கத்துடன் காணப்பட்டு வந்த உடன்பாடு, இணக்கம் என்பன இப்போது இன்னும் கீழிறங்கி விட்டன. புலிகள் தமக்கு கீழ் வைத்துள்ள கட்டமைப்பு ஒன்றுடன் ஒப்பமிட்டதன் மூலம் அவற்றை அங்கீகரித்து விட்டது என்று சோமவன்ச அமரசிங்க கூறுகின்றார்.

இதன் மூலமாக விடுதலைப் புலிகளின் தனியரசுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு விட்டது என்ற கூச்சல் தென்னிலங்கையில் பரவலாக்கப்படுகின்றது. இதனை ஒரு ஆதாரமாக முன்வைத்து ஜே.வி.பி வழக்கையும் தாக்கல் செய்கின்றது.

முன்னர் ரணில் அரசு விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னரும் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. அதன் விளைவாக புரிந்துணர்வு உடன்பாடு சந்தித்திருக்கும் மகாத்மியங்கள் சொல்ல வேண்டியதில்லை.

புரிந்துணர்வு உடன்பாடு பூரணமாக நடைமுறைப்படுத்தப்படாமல் சிறிலங்கா அரசினால் கைவிடப்பட்டமையால் இதுவரையும் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களும் இழப்புக்களுமே மிக அதிகம். அதனால், எதற்கு அடிப்படையாக உருவாக்கப்பட்டதோ அந்தப் பேச்சுவார்த்தையே தடைப்பட்டுப் போய்விட்டது. அதே கதியைப் பொதுக் கட்டமைப்புக்கும் ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையுடன் தான் இத்தனை பக்க எதிர்ப்புக்களோடும் சந்திரிகா அதனை உருவாக்கியிருக்கின்றார் என்பது தவறாக முடியாது.

**- ஞாபகன் -**

ஏனெனில், முன்பு போலில்லாமல் இப்போது அவருக்கு ஏற்பட்டுள்ள சர்வதேச நெருக்குவாரமும் அழுத்தமும் மறு புறத்தே புலிகள் இயக்கத்தின் தட்டிக் கழிக்க முடியாத நியாயப்பாட்டுக்குக் கிடைத்திருக்கும் அனுதாபமும் அங்கீகாரமும் இந்த முடிவை எடுக்குமாறு அவரை நிர்ப்பந்தித்திருக்கின்றன. அத்துடன் கூடவே அவருக்கு இருக்கும் எல்லையற்ற ஆட்சி அதிகார ஆசையும் இதற்குத் துணையாகியிருக்கின்றன.

ஆனால், அவர் இன்னமும் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் விரோதமான போக்கையே கொண்டிருக்கின்றார். உண்மையாகவே உரிமைகளையோ இயல்பு வாழ்வுக்கான வழிகளையோ தமிழர்களுக்கு வழங்க வேண்டும் என்று விருப்பம் கொண்டிருந்தால், இந்தப் பொதுக்கட்டமைப்பு ஊடாகத்தான் தன்னை தியாகியாக்கியிருக்க வேண்டும் என்பதில்லை.

மூன்றாம் கட்ட ஈழப் போருக்கு முன்பான பேச்சுவார்த்தைகளின் போது கேட்கப்பட்டது போல இயல்பு வாழ்வுக்கு வழிவிட பூநகரி முகாமை சற்று உள்நகர்த்தியிருக்கலாம். அல்லது அதன் பின் மிகப் பெரிய படை நடவடிக்கைகளை தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடங்காமல் விட்டிருக்கலாம். அவைதான் முடிந்து போனவை என்றாலும் ரணில் அரசு மேற்கொண்டு வந்த அமைதி முயற்சிகளுக்கு குழிபறிக்காது இருந்திருக்கலாம்.

ஆனால், கிடைத்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எதிர் நிலைப்பாட்டை எடுத்துவிட்டு இப்போது மட்டும் ஏன் தமிழர்களின் பக்கம் வந்திருக்கின்றார்? அதுவும் மிகக் கடுமையான எதிர்ப்பலைகள் உருவாகும் வரை காத்திருந்து விட்டு - சந்தர்ப்பங்களைக் கொடுத்துவிட்டு வந்திருக்கின்றார்.

இங்கேயும்தான் தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டிய கட்டம் உள்ளது போல் தெரிகின்றது. அல்லது இது தொடர்பாக அதிக எதிர்பார்ப்புக்களை வைத்திராது முன்னகர வேண்டியுள்ளது என்று தெரிகின்றது.

குறிப்பாக சிறுபான்மை இனங்களுக்கு இடையில் ஒரு முரண்பாட்டை ஏற்படுத்தி, எதிர்கால விடுதலைப் போராட்ட நகர்வுகளைப் பலவீனப்படுத்தும் தந்திரமாக பொதுக்கட்டமைப்பைக் கையாளத் தொடங்கியிருக்கின்றார் என்பது முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாட்டின் வழியாக உணரப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பை உருவாக்க மேற்கொண்ட கால இழுத்தடிப்புக்களில் முஸ்லிம்களின் குழப்பத்துக்கு இடமளித்து அடித்தளமிட்டே வந்திருக்கின்றார். இதனை விடுதலைப் புலிகளும் ஒரு குற்றச்சாட்டாக முன்வைத்திருக்கின்றனர். சிறிலங்கா அரச தரப்பில் ஏற்படுத்தப்பட்ட இந்த நெருக்கடியை இப்போது ஜே.வி.பியுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் கையாளத் தொடங்கியிருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தை வெளிப்படையாகக் கக்க முடியாத இக்கட்டான நிலையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி தனது இனவாதத்தை முன்னெடுப்பதற்கான ஒரு முகமாக ஜாதிக ஹெல உறுமயவை உருவாக்கியிருக்கின்றது என்று நம்பகமாகப் பேசப்படுகின்றது.

அந்த ஜாதிக ஹெல உறுமய ஊடாக பொதுக்கட்டமைப்புக்கு எதிரான நிலைப்பாட்டை சிறிலங்கா இராணுவத்திடமும் வளர்த்தெடுக்கின்றது. இதற்கு ஜே.வி.பியின் பங்கும் கூடுதலாக உண்டென்ற போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிந்திய நிலைப்பாடு சந்தர்ப்பவாதம் நிறைந்ததாகும்.

'வடக்குக் கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் பிரதிநிதித்துவப் பங்களிப்பு இன்றியே இந்த உடன்பாட்டில் அரசு ஒப்பமிட்டிருப்பது துரதிஸ்டவசமானது' என்று ஜி.எல்.பீரிஸ் தாமதமாகக் குறைபடுவதன் மூலம் உணர்த்துவது எதனை? யதார்த்தத்தில் பொதுக்கட்டமைப்பின் மூலமாக முன்னெடுக்கப்படப் போகும் நிவாரணப் பணிகளுக்கு தனது அரசியல் இலாபம் கருதிப் பங்களிக்காது இருக்கப் போவதையே தான்.

ஏற்கனவே, ஆளும் கட்சியில் அங்கம் வகித்த ஜே.வி.பியும் முஸ்லிம் காங்கிரசும் விலகியும் எதிர்ப்புத் தெரிவித்தும் வரும் தருணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு முழுவதும் சந்தர்ப்பவசமானதே.

ஒப்பீட்டளவில் பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டமைக்கு அமெரிக்கா, ஜப்பான், கனடா, நோர்வே போன்ற நாடுகளிடம் இருந்து வெளிப்பட்ட வரவேற்புக்கு சமமான எதிர் நிலையை இவை கொண்டிருக்கலாம். ஆக மொத்தத்தில் இத்தனை தடைகளையும் உருவாக்கி விட்டு- உருவாகச் சந்தர்ப்பம் வழங்கிவிட்டுத்தான் பொதுக் கட்டமைப்போடு ஜனாதிபதி சந்திரிகா தமிழர் பக்கம் வந்திருக்கின்றார்.

சமாதானத்தின் முன்னெடுப்புக்கு அவசியமானதெனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் பயன்படுத்தத் தயங்கிய நிறைவேற்று அதிகாரத்துக்கான ஆயுள் முடிவடைகின்ற தருணத்தில், பொதுக்கட்டமைப்பைச் செயலற்ற நிலைக்குள் தள்ளிவிட்டுத் தப்பிவிடக் கூடிய வழிகளோடுதான் வந்திருக்கிறார்.

இச்சந்தர்ப்பத்துக்குள் தனது அதிகாரக் கதிரையை இன்னோர் வழியில் தக்க வைத்தாலும் கைவிடுவதற்கான வழிமுறைகளையும் அவர் உருவாக்கிக் கொள்வார் என்பது கடந்த கால வரலாறு சொல்லும் பாடமாகும்.

## அவுஸ்ரேலிய முத்தமிழ் விழாவில் பரிசு பெற்ற கவிதை

### புலம் பெயர்ந்த தமிழினமே!

புனிதமான மண்ணை விட்டு
புலம் பெயர்ந்த தமிழினமே...
பூகம்பம் என்று நீ புறப்பட்ட போது
நாம் உன்னை நச்சரித்தோம்.
அய்யோ! வெட்கமாக இருக்கிறது
அன்று நீ செல்லவில்லையென்றால்
இன்று ஈழத் தமிழன் வாழ்ந்திருப்பானா?
தமிழ் மொழிதான் வாழ்ந்திருக்குமா?
தமிழ் நாடாம் தமிழ் நாடு
ஆறு கோடி தமிழினத்தால்
தமிழுக்கு என்ன இலாபம்? இல்லை சாபம்
ஒரு வரி என்றால் இரு சொல் பிறமொழி
ஈழத்தமிழன் இன்னலுற்றபோது
இரங்காத தமிழ் நாடு ஓர் நாடா?
புலம் பெயர்ந்த தமிழினமே
புகழாரம் உனக்கே! உயர்வும் உனக்கே
தமிழ் மொழியின் உயர்ச்சி
புலம் பெயர்ந்த தமிழனால்த்தான்
ஏன் ஏக்கம்? ஏன் தவிப்பு?
தமிழினத்தை அடிமைப்படுத்த - நினைத்தவர்கள்
தூங்கி விட்டார்கள் எதனால்?
எம்மினத்தின் விடுதலை வீரர்களால்
விருட்சமாய் விரிந்து நிற்கும் - விடுதலைப் போரினால்
என்று சொல்லி எழுதிட முடியாது
அதில் உனக்கும் உரிமையுண்டு
உறவுகளின் உரிமைக்காய் - குரல்கொடுத்துக்
கூவிய புலம் பெயர்ந்த தமிழினமே...
விடுதலைப் போரினை விருட்சமாய்
வளர்த்ததும் நீயே! விடுதலைக்கு வித்திட்டதும் நீயே
எம்மினத்தின் உறவுகளே உதிரத்தால் ஒத்துவிட்ட
உன்னத உறவுகளே!
இனி ஏன் ஏக்கம் எமக்கு?
இருக்கிறது எம்மிடம் ஓர்படை
தமிழிற்கு சவால் விட்டால்
நடப்பது எது என்பதை
உலகிற்கு உணர்த்த உள்ளனர்.
தமிழீழ அன்னை பெற்றெடுத்த - வீரப்புதல்வர்கள்
புலம் பெயர்ந்த தமிழினமே!
ஒன்றை மட்டும் புரிந்துகொள்
தமிழினத்தின் காவலர்கள் - விடுதலைப் புலிகள்
உலகத் தமிழர்க்கு ஒரே - தலைவன்
அவனே எம் அண்ணல்
சமாதானக் காற்று
எம் மண்ணில் சற்று வீசுகிறது
ஆனால் பொறுக்கவில்லை...
சிங்கள இனவாத அரசிற்கும்
தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கும்
எம் உறவுகளின் அரசியல் - பிரவேசம்
இம்மியளவும் பிடிக்கவில்லை
கடற்படையினரின் காட்டு மிராண்டித்தனம்
பொறுத்திருக்கிறான் தானைத் தலைவனும்
அவனது சேனைப் படைகளும் - ஆனால்
எம்மால் பொறுக்க முடியவில்லையே...
யுத்த காலத்தில் எட்டத்தே நின்றவன்
இன்றைய நிலையில் கழுத்தைப் பிடிக்கிறான்
புலம் பெயர்ந்த தமிழினமே - புரிந்து கொள்
பொறுமை என்பதை தலைவன் காப்பான்
ஈழத் தமிழன் இன்னுமின்னும் தாங்கமாட்டான்
நாம் எம் உரிமைக்காய்
எம் இறைமைக்காய் - மீண்டும்
ஓர் தடவை களம் சென்றால்
புலம் பெயர்ந்த தமிழினமே!
எமக்காக மீண்டும் ஓர் தடவை
குரல் நீ கொடுப்பாயா?

*குணரெத்தினம் - உமாரமணன்,*
*அம்பிளாந்துறை.*




# பலாப்பழமும், கல்வியும்

காந்தன் தரம் - 06 இல் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். அவன் ஒரு நாள் பாடசாலை விட்டு வீடு வந்தபின் தனது புத்தகப் பையைத் தூக்கி வீசிவிட்டு தனது தகப்பனாரிடம் நான் இனிப் பாடசாலைக்குப் போவதில்லை என்று கூறினான்.

அதற்குத் தந்தை ஏன் என வினாவினார். அப்போது காந்தன் ‘எழுத்துக்களை ஒவ்வொன்றாக எழுதிச் சொற்கள் ஆக்குவதும், சொற்களை ஒழுங்குபடுத்தி வசனங்கள் ஆக்குவதும் மிகக் கடினமாயுள்ளன.’ எனவே கல்வி கற்பது சிரமமாயுள்ளது. என்று கூறினான்.

அதற்குத் தந்தை எதுவும் பேசாமல் நீ என்னுடன் வா பழக்கடைக்குப் போவோம் என்று கூறினார்..

அதற்கு காந்தனும் சம்மதித்து இருவரும் பழக்கடைக்குச் சென்றனர். அங்கு பலாப்பழ வாசனை காந்தனின் மூக்கைத் துளைத்தது. அவன் தனது தந்தையிடம் எனக்கு சுவையுள்ள பலாப்பழமொன்று வாங்கித் தாரு ங்கள் என்று கூறினான்.

அதற்குத் தந்தை ‘பலாப்பழம் வெட்டுவது சிரமமானது. விதைகளை அகற்றிச் சுளைகளை எடுத்துச் சாப்பிட வேண்டும். அது தவிர கைகளில் பலாப்பழப் பால் ஒட்டிக் கொள்ளும். மிகவும் சிரமமானது. இதைவிட வாழைப்பழம் உண்பதும் இலகுவானது, அப்பழம் எவ்வளவு வேண்டுமானாலும் கேள் வாங்கித் தருகிறேன்’ என்று கூறினார்.

அதற்குக் காந்தன் ஒப்புக் கொள்ளவில்லை. ‘பலாப்பழந்தான் எனக்கு வேண்டும். அது தான் சுவை கூடியது. கஷ்டப்பட்டு சுளைகளை எடுத்துச் சாப்பிட்டால் சுவையாயிருக்கும்’ என்று அடம் பிடித்தான். மகனின் விருப்பிற்கேற்ப தந்தையும் பலாப்பழம் வாங்கிக் கொடுத்து விட்டு மகனைப் பார்த்துக் கூறினார்.

மகனே கல்வியும் இவ்வாறானது தான். பலாப்பழத்தை வெட்டி சுளைகளைச் சிரமப்பட்டு எடுத்து உண்டால் சுவையாக இருப்பது போன்று கல்வியைச் சிரமப்பட்டுக் கற்றால் பின்பு நன்றாயிருக்கும். எனவே நீ கஷ்ரப்பட்டாவது கல்வியைக் கற்பாயானால் பிற்காலத்தில் இன்புற்றிருப்பாய் என்று கூறினார்.

அன்றிலிருந்து காந்தனும் திருந்தி நன்கு கல்வி கற்று நல்ல கல்விமானாகவும், நற்பிரஜையாகவும் வாழ்வில் உயர்ந்தான். இதன் மூலம் நாம் விளங்கிக் கொள்வது எது தெரியுமா சிறுவர்களே! “முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்” என்பதாகும்.

**சோ.சங்கரலிங்கம்**
**மட்டக்களப்பு.**

## கணக்குப் புதிர்

நூற்றுக்குக் குறைவான ஏதாவது ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நினைத்த எண்ணை இரண்டால் பெருக்குங்கள். பெருக்கி வந்த தொகையுடன் 5ஐக் கூட்டுங்கள். அந்த கூட்டுத் தொகையை 50 ஆல் பெருக்குங்கள். அதிலிருந்து ஒரு வருடத்தின் மொத்த நாட்களின் தொகையைக் கழியுங்கள். கழித்து வந்த தொகையுடன் உங்கள் வயதைக் கூட்டுங்கள். அந்தத் தொகையுடன் 115 ஐக் கூட்டுங்கள் பின்னர் கூட்டிய விடையை அவதானியுங்கள். முன்னால் வருவது நீங்கள் நினைத்த எண் பின்னால் வருவது உங்கள் வயது.

**கோ.சந்திரிகா**
**கலைப்பிரிவு**
**சது-நாவிதன்வெளி.**
**அன்னமலை ம.வித்தி.**

## பொது அறிவு


01. தொலை நோக்கியைக் கண்டு பிடித்தவர் யார்?
**கலிலியோ கலிலி.**
02. உலகில் மிகச் சிறிய நாடு எது? **வத்திக்கான் நகர்.**
03. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது? **நோர்வே.**
04. துப்பாக்கியைக் கண்டுபிடித்த நாடு எது? **சீனா.**
05. இரண்டு பிரதமர்களால் ஆளப்படும் நாடு எது?
**கம்பூச்சியா.**
06. இலங்கையில் நிர்வாக மாவட்டங்கள் எத்தனை? **25.**
07. இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்?
**ராகேஷ் சர்மா.**
08. பூமியை விட சூரியன் எத்தனை மடங்கு விட்டமுடையது?
**109 மடங்கு.**
10. இந்தியாவின் தலைநகர் எது? **புதுடில்லி.**
11. சந்திரனின் விட்டம் எத்தனை கிலோ மீற்றர்? **3476 கிலோமீற்றர்.**
12. சூரியனின் விட்டம் எவ்வளவு? **1,39,000 கிலோ மீற்றர்.**

**த.கிரிதரன், தரம்-08, மட்-நாவற்குடா த.வித்தி.**

## எனது பாடசாலை

- எனது பாடசாலையின் பெயர் மட்-கொல்லநுலை விவேகானந்தா வித்தியாலயம்.
- எனது அதிபரின் பெயர் திரு.ம.பஞ்சாட்சரம்.
- எனது பாடசாலையில் ஒன்பது ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கிறார்கள்.
- எனது பாடசாலையில் தரம் 1-7 வரை இருக்கிறது.
- எனது பாடசாலை ஒரு சிறிய பாடசாலையாகும்.
- எனது பாடசாலை கிராமப் புறத்தில் அமைந்துள்ளது.
- எனது பாடசாலை பட்டிப்பளைக் கோட்டத்தில் ஒரு பின் தங்கிய பாடசாலையாகக் காணப்படுகின்றது.
- எனது பாடசாலையைச் சுற்றி சுற்று வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது.
- எனது பாடசாலையில் ஒரு கட்டிடமும், ஒரு தற்காலிக கொட்டிலும் இயங்குகின்றது.

**ம.தனலெட்சுமி.**
**தரம்-06.**
**மட்-கொல்லநுலை வி.வி.**



**சி.இக்னஸ்ரஜீத்**
**தரம்-07.**

## பதரைத் தெரிந்திடு

பாடசாலைக் களத்து மேட்டில் ~ நீ
காண்பாய் பல மாணவ மணிகளை
ஒரு மணியை தெரிந்தெடுத்து ~ அதனோடு
ஒப்பிடாதே மறுமணியை
தெரிந்தெடுத்த மணியோடு ~ நிகராக்க
ஆராய்ந்தெடு பல வழியை.

பதராத் தெரிவது உன் ~ மனதுக்குள்
உழைச்சல் தரும் நிச்சயமாய்
சோர்ந்து விடாதே பணியை எண்ணி~ உன்
மதிநுட்பத்தை கையாழ பொறுமையுடன்
பக்குவமாய்த் துலக்கிவிடும் ~ அப்பதரும்
உன் கைப்பக்குவத்தால்.

களனிதனில் பயனற்றுப் போகும் ~ பதர்களை
தரமாக மாற்ற வழியேதும் இல்லை
உழவனுக்கு.
பாடசாலைக் களத்து மேட்டில் ~ உரமாக்கி
உன் உழைப்பை மனமுவவந்து செய்தால்
கட்டாயம் நீ காண்பாய் ~ பதரற்ற
பக்குவமான மாணவ மணிகளை.

**த.நிமலன்**
**மட்-விஸ்னு மகா.வித்தி.**

## டைட்டானிக் கப்பல்

டைட்டானிக் கப்பலை உருவாக்கிய ஆண்டு. 1911ம் ஆண்டு.
கப்பலின் நீளம். 882 அடி.
கப்பலின் நிறை. 46329 தொன்.
கப்பலின் உயரம். 175 அடி.
கப்பலை உருவாக்கிய நிறுவனம் வவிட் ஸ்டார்லவின்.
கப்பல் புறப்பட்ட திகதி. 10.04.1912.
கப்பல் செல்ல வேண்டிய இலக்கு. நியுயோர்க் துறைமுகம்.
பயணிகளின் எண்ணிக்கை. 1343 பேர்.
கப்பலின் கப்டன் மர்டொக்.



பனிப் பாறையில் மோதும் போது பிரயாணம் செய்த வேகம். மணிக்கு 25 மைல்.

**கு.ஜயந்தினி.**
**மண்டூர் - 03.**




**ஆர்.சுந்தரம்**
**பலாங்கொடை**
**தமிழ் மகா வித்தியாலயம்.**

## விடுகதைகள்

01. வால் நீண்ட குருவிக்குளூ வாயுண்டு; வயிறில்லை அது என்ன?
02. உயிரில்லாத நீதிபதி; ஒழுங்காய்த் தீர்ப்பு வழங்குகிறார் அவர் யார்?
03. போட்டதை எடுக்க முடியாது. என்றாலும் பூமிக்கது அழகாச்சு. அது என்ன?
04. அழைக்கும் போது உரக்கக் குரல் கொடுப்பான். பேசும் போது காதுக்குள் கிசுகிசுப்பான் அவன் யார்?
05. மெல்லியதாய் இருக்கும்; தண்ணீரின் மேலே மிதக்கும்; ஆயிரம் பேர்சேர்ந்தாலும் அதைக் தூக்க முடியாது அது என்ன?
06. இருந்த இடத்தில் இருந்தபடி காலம் காட்டுவாள் அவள் யார்?
07. தூக்கம் வந்தால் தானாக மூடும் கதவுகள் அவை எவை?
08. செம்பு நிறைய சிவப்பு முத்துக்கள் அது என்ன?
09. உனக்குச் சொந்தமானது; ஆனால் உன்னை விட அதிகமாக மற்றவர்களே உபயோகிப்பர் அது என்ன?
10. துள்ளும் முயற்குட்டி செம்பட்டை வால்வெட்டினால் இரத்தமில்லை. அது என்ன?
11. பலர் கட்டிய மாளிகை ஒருவருக்குத் தெரிந்தால் போதும் காணாமல் போய்விடும். அது என்ன?

**த.ஜிவசங்கரி, தரம்-04V,**
**மட்-விவேகானந்தா ம.ம.வித்தி.**





**அ.ஜெனனீபன்,**
**தரம்-05, மட்-தாழங்குடா ஸ்ரீவி.வித்தி.**

## விடைகள்

01. அகப்பை 02. தரசு
03. கோலம்
04. தொலை பேசி
05. நீர்க் குமிழ்
06. கடிகாரம்
07. கண்இமை
08. மாதுழம் பழம்
09. பெயர். 10. இறால்
11. தேன்கூடு.




## கடல் சூழ இருந்தென்ன இருள் சூழ இருக்கின்றோம்

மின்சாரமே இன்று உலகை இயக்குகிறது எனும் அளவுக்கு அதன் தேவை இன்றியமையாததாகவுள்ளது. இருந்தும் உலகத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு இதன் உற்பத்தி இன்னும் தன்னிறைவு பெறவில்லை.

உலகில் கோடிக்கணக்கான, மக்கள் மின்சாரத்தின் பயனை இன்னும் பெறவில்லை என்பது நாம் அறிந்ததே. இன்று பல்வேறு வழிகளிலும் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சூரிய ஒளி மூலம், காற்றாடிகள் மூலம் என இவை விரிவடைந்துள்ள போதும் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானளவில் அவை கிடைப்பதில்லை. இந்நிலையில் கடலைப் பயன்படுத்தி பல்வேறு வழிமுறைகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன.

***கடற் கனல் சக்தி***

(Ocean Thermal Energy)

கடலின் மேல் மட்டத்திற்கும் கீழ் மட்டத்திற்குமிடையேயுள்ள வெப்ப வேறுபாட்டைப் பயன்படுத்தி வெப்பக் கடத்தல் மூலம் (Heat Changer) தாழ்நிலை கொதி திரவத்தினை (Law Boiling Liquid) ஆவியாக்கி ரேபைனை இயக்குவதன் மூலம் மின்சாரம் பெறப்படுகிறது. அமெரிக்கா, யப்பான் ஆகிய நாடுகளில் இம்முறையில் பெருமளவு மின் உற்பதி செய்யப்படுகிறது.

***கடல் ஏற்ற இறக்க சக்தி***

(Tidal Energy)

கடலில் ஏற்படும் கடல் மட்ட உயர்வுகளைப் பயன்படுத்தி நீரை உயரமான இடங்களில் தேக்கி வைத்துப் பின் அதனை கொண்டு ரேபைன்களை இயக்கி மின் பெறப்படுகிறது. அத்துடன் கடல் ஏற்றத்தின் போதும், இறக்கத்தின் போதும் ரேபைன்களை இயக்கி மின் பெறும் முறை தற்போது விருத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் 240Mw மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மிகப் பெரிய மின் உற்ப்த்தி நிலையம் பிரான்ஸில் உள்ளது.

***கடல் அலை***

(Ocean Wave)


கடல் அலைகள் ஏற்படும் போது சுழலக்கூடிய தொடர் சுழலிகளைப் பயன்படுத்தியும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. அமெரிக்கா போன்ற நாடுகள் மட்டுமன்றி அயல் நாடான இந்தியாவும் இம்முறையில் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இவை இப்படியிருக்க எமது தாயகத்தில் முத்தையன் கட்டுப் பகுதியில் தனிமனித ரொருவர் மிக எளிமையான முறையில் மேலதிகமாக வெளியேறும் குளத்து நீரைப் பயன்படுத்தி 30 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் செய்தி முன்மாதிரியானதும் பாராட்டத் தகுந்ததொன்றுமாகும். நீங்களும் இவ்வாறு பயனுள்ள ஏதாவதை முயற்சிக்கலாமே.




## பாதுகாப்பில் பக்கபலம்

செயற்திறன் மிக்க பல்வேறு வகை ரோபோக்கள் பற்றிய செய்திகள் தொடர்ந்தும் வந்துகொண்டே இருக்கின்றன. இவ்வகையில் இவ்வாரம் மற்றுமொரு புதுவகை ரோபோ அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. ஒரு பாதுகாப்பு உத்தியோகஸ்தர் போன்று பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவென ரோபோக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வகை ரோபோக்களில் ஒன்று திடீரென தோன்றும் தீயை உணர்ந்து அதனை உடனடியாக அணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதையே நீங்கள் இங்கு காண்கிறீர்கள்.

## சேது சமுத்திரத்திட்டம் சேதங்களுக்கு அத்திவாரம்?







1860 இல் பிரித்தானிய கொமாண்டர் ரெயிலர் அவர்களால் இத்திட்டம் உருவாக்கப்படடது. காலத்துக்குக் காலம் முன் மொழிவுகளுடன், மட்டுமே நின்றுபோன இத்திட்டத்தை தற்பொழுது சுற்றுச் சூழல் ஆர்வலர்கள், ஆய்வாளர்களின் எதிர்புக்களையும் மீறி நடைமுறைப்படுத்த இந்திய அரசு ஒற்றைக்காலில் நிற்கிறது. மொத்தமாக 187 கி. மீ. நீளத்தையும் 12மீ. ஆழத்தையும் 300மீ. அகலத்தையும் கொண்டதாக அமையவிருக்கும் இக் கால்வாய் ஆதாம் பாலத்திற்கு அருகே 30கி.மீ. நீளத்திற்கும் பாக்கு நீரிணைப் பகுதியில் 54கி.மீ. தூரத்திற்கும் ஆழப்படுத்தப்படவுள்ளது.

இதனால் சுற்றுச் சூழலுக்குப் பல வகையான பாதிப்புக்கள் ஏற்படும் என துறைசார் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக கடல் வாழ் உயிரினங்கள் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டு சில உயிரினங்கள் இப்பகுதியில் இல்லாதொழிந்து விடும் என்கின்றனர் சில விஞ்ஞானிகள். கப்பல்களின் எண்ணெய் கடலில் சிந்துதல், கழிவுகள் சேருதல் அகழ்வினால் பவளப் பாவறைகள் மற்றும் கடல் வாழ் உயிரினங்களின் வாழ்விடங்கள் அற்றுப் போதல் போன்றவற்றால் பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும், இதனால் மீன்பிடித் தொழிலும் பாதிப்புக்கு ள்ளாகும் எனவும்




தெரிவிக்கப்படுகின்றது. இதைவிட கடலரிப்பு, கால நிலை மாற்றம் என்பனவும் ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றிற்கு மேலாக இப்பகுதியிலுள்ள சில தீவுகள் மூழ்கிப்போகலாமெனவும் கூறப்படுகிறது.



## மண்ணிற்கு வேறு விண்ணிற்கு வேறா?

கணணித் துறையில் வியத்தகு முன்னேற்றங்கள் ஏற்பட்டுவரும் இவ்வேளையில் விண்வெளி வீரர்கள் பயன்படுத்தவென புதுவகையானதொரு கணணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.எடையற்ற நிலையில் கைகளினால் கணணியை தொடர்ந்து இயக்குவதில் உள்ள பல்வேறு சிரமங்களைக் கருத்தில் கொண்டு முழுக்க முழுக்க குரல் வழிக் கட்டுப்பாட்டைக் (Voice control) கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ள இக் கணணி தற்போது அமெரிக்க நாசா விண்வெளி ஆய்வுநிலையத்தில் பரீட்சிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

# ஜே.வி.பி என்கின்ற பூனையை மடியில் கட்டிக் கொண்டு சகுனம் பார்க்கப் புறப்பட்ட சந்திரிகா

**மொத்தத்தில் சிறிலங்கா தேசம் எந்த சர்வதேச சமூகத்தை அரவணைத்து புலிகளுக்கு எதிராக அழுத்தத்தைப் பிரயோகிக்கவைத்து, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவைத்ததோ, அதேசர்வதேச சமூகத்தை தற்பொழுது தமிழர் தரப்பு தனக்குச் சாதமாகத் திசை திருப்புவதில் வெற்றிகண் டுள்ளது.**

**புலிகளைப் பொறுத்தவரையில் இந்தப் பொதுக்கட்டமைப்பு விவகாரம், ''மயிரைக் கட்டி மலையை இழுக்கும்'' ஒரு விடயம். 'வந்தால் மலை: போனால் மயிர்'. பொதுகட்டமைப்பு விவகாரம் கைச்சாத்திடப்பட்டாலும் சரி, கைச்சாத்திடப்படாவிட்டாலும் சரி, புலிகளைப் பொறுத்தவரையில் இந்த விவகாரத்தின் முடிவு ஒரு பாரிய வெற்றியாகத்தான் அமைந்திருக்கும்.**



பல கேள்விகளுடன்தான் காலம் இங்கு ஓடிக்கொண்டிருக்கின்றது.

யுத்தம் மீண்டும் ஆரம்பமாகுமா? சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படுமா? தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் கட்டவிழ்த்துவிடப்படுமா? ஜே.வி.பி. என்ன செய்யும்? பாராளுமன்றம் கலைக்கப்படுமா? ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா? இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமா?.. இவ்வாறு பல கேள்விகள் மக்கள் மனங்களில் உலா வந்தவண்ணமே இருக்கின்றன.

இது போன்ற கேள்விகளுக்கான பதில்கள் எப்படியும் அமையலாம் என்பதுதான் மிகவும் சங்கடமான விடயம். எதையுமே இது இப்படித்தான் நடக்கும் என்று எவரும் உறுதியாகக் கூறமுடியாத ஒரு தத்தளிப்பான நிலைதான் இங்கு காணப்படுகின்றது.

எதுவும் நடக்கச் சந்தர்ப்பம் இருக்கின்றது.

ஒன்றுமே நடக்காமல் இருக்கவும் சந்தர்ப்பம் இருக்கின்றது.

மேற்கூறப்பட்ட கேள்விகள் தொடர்பான விடயங்கள் பற்றி ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கம் அல்ல. மேற்படி கேள்விகளும், தடுமாற்றங்களும் நாட்டில் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில், தமிழர் தரப்பு என்ன செய்துகொண்டிருக்கின்றது என்பது பற்றிப் பார்ப்பதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது.

**விடுதலைப் புலிகளைச் சங்கடத்தில் மாட்டுவதற்காக சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும், சிறிலங்கா அரசுக்கு எதிராகவே திருப்பிவிடும் இராஜதந்திர நடவடிக்கைகளில் தமிழர் தரப்பு வெற்றி பெற்றிருக்கின்றது என்பது தற்பொழுது நிரூபனமாகியுள்ளது. கருணா விவகாரம், புலிகளின் விமானம் இருப்பதான விவகாரம், புத்தர் சிலை விவகாரம், சுனாமி நிவாரணக் கட்டமைப்பு விவகாரம், என்று விடுதலைப் புலிகளைக் குறிவைத்து சிறிலங்கா அரசு விரித்த வலையில், சிறிலங்கா அரசாங்க த்தையே சிக்கவைப்பதில் தமிழர் தரப்பு தற்பொழுது வெற்றிகொண் டிருக்கின்றது.**

தமிழர் தரப்பு தற்போதைய சூழ்நிலையில் எப்படியான அனுகுமுறையை மேற்கொண்டு வருகின்றது? என்படியான காய் நகர்த்தல்களில் ஈடுபட்டு வருகின்றது? என்ன செய்ய உத்தேசித்திருக்கின்றது? இது பற்றி ஆராய்வதே இன்றைய நோக்கமாக இருக்கின்றது.

கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்தால் தமிழ் தரப்பு கவனமாக மேற்கொண்டிருந்த காய்நகர்த்தல்கள் கச்சிதமாக வேலை செய்ய ஆரம்பித்திருப்பதை தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

விடுதலைப் புலிகளைச் சங்கடத்தில் மாட்டுவதற்காக சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும், சிறிலங்கா அரசுக்கு எதிராகவே திருப்பிவிடும் இராஜதந்திர நடவடிக்கைகளில் தமிழர் தரப்பு வெற்றி பெற்றிருக்கின்றது என்பது தற்பொழுது நிருபனமாகியுள்ளது. கருணா விவகாரம், புலிகளின் விமானம் இருப்பதான விவகாரம், புத்தர் சிலை விவகாரம், சுனாமி நிவாரணக் கட்டமைப்பு விவகாரம், என்று விடுதலைப் புலிகளைக் குறிவைத்து ஸ்ரீலங்கா அரசு விரித்த வலையில், ஸ்ரீலங்கா அரசாங்கத்தையே சிக்கவைப்பதில் தமிழர் தரப்பு தற்பொழுது வெற்றிகொண்டிருக்கின்றது.

முதலாவதாக சுனாமி நிவாரணக் கட்டமைப்பை எடுத்துக் கொள்வோம். சுனாமி அனர்த்தம் இடம்பெற்று நான்கு நாட்களில், நிவாரணம் தொடர்பாக அரசும், புலிகளும் இணைந்து செயற்படும் அழைப்பை ஜனாதிபதி சந்திரிகாவே முதன் முதலில் புலிகளிடம் விடுத்திருந்தார். சுனாமி நிவாரணம் தொடர்பாக புலிகளுடன் இணைந்து செயற்படும் பொதுக் கட்டமைப்புப் பற்றி ஜனாதிபதியே சர்வதேச சமூகத்திடமும் முதன் முதலில் தெரிவித்திருந்தார். முன்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து புனர் நிர்மானம் தொடர்பாக அமைக்கப்பட்ட 'சிரான்' மூலம் பெற்றுக் கொண்ட படிப்பினைக் காரணமாக புலிகள் பொதுக்கட்டமைப்பிற்கு உடன்படமாட்டார்கள்: சர்வதேச சமூகத்திடம் இதனைக் காரணம் காண்பித்து புலிகளை நிவாரண விடயத்தில் ஓரங்கட்டிவிடலாம் என்று நினைத்துச் சந்திரிகா இந்த விவகாரத்தை முன் மொழிந்தார். ஆனால் புலிகள் கவனமாகக் காய் நகர்த்த, சர்வதேச சமூகம் இந்த பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை இறுக்கிப் பிடித்துக்கொண்டது. புலிகள் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அவசரம் காண்பிக்காமல் பல விட்டுக்கொடுப்புக்களை தொடர்ந்து மேற்கொள்ள, சிறிலங்கா அரசாங்கமோ ஜே.வி.பி. என்கின்ற பூனையை மடியில் கட்டிக் கொண்டு பொதுக்கட்டமைப்பு என்கின்ற சகுனம் பார்க்கப் புறப்பட்டது. சிக்கல் மேல் சிக்கல். சிங்கள பேரின வாதத்தின் 'ஜெண்டில்மென்' முகமூடி சர்வதேச சமூகம் முண்பு ஒட்டு மொத்த மாகக் கிழிந்தது. பௌத்த பிக்குகளின் நடத்தைகள், அரசாங்கத்தின் பங்காளிகளின் நடவடிக்



கைகள் என்று சிங்கள தேசத்தின் உண்மையான முகத்தை அவர்களை அறியாமலேயே உலகிற்கு வெளிப்படுத்தியிருந்தார்கள். சுனாமி நிவாரணக் கட்டமைப்பு என் கின்ற பொறியைவைத்த சிறிலங்கா அரசாங்கத்திற்கே அது பொறியாக மாறியிருந்தது. ஆழும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சிதறும் அழவிற்கு சர்வதேச அழுத்தம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராகத் திரும்பியிருந்தது. சிறிலங்கா அரசாங்கத்தின் மீதான சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையில்லாத் திர்மானமே 'பொதுக்கட்டமைப்பு அழுத்தமாக' பிரயோகிக்கப்பட்டிருந்தது.

மொத்தத்தில் சிறிலங்கா தேசம் எந்த சர்வதேச சமூகத்தை அரவணைத்து புலிகளுக்கு எதிராக அழுத்தத்தைப் பிரயோகிக்கவைத்து, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவைத்ததோ, அதே சர்வதேச சமூகத்தை தற்பொழுது தமிழர் தரப்பு தனக்குச் சாதமாகத் திசை திருப்புவதில் வெற்றிகண்டுள்ளது. புலிகளைப் பொறுத்தவரையில் இந்தப் பொதுக்கட்டமைப்பு விவகாரம், "மயிரைக் கட்டி மலையை இழுக்கும்'' ஒரு விடயம். 'வந்தால் மலை: போனால் மயிர்'. பொதுகட்டமைப்பு விவகாரம் கைச்சாத்திடப்பட்டாலும் சரி, கைச்சாத்திடப்படாவிட்டாலும் சரி, புலிகளைப் பொறுத்தவரையில் இந்த விவகாரத்தின் முடிவு ஒரு பாரிய வெற்றியாகத்தான் அமைந்திருக்கும்.

அடுத்ததாகப் புத்தர் சிலை விவகாரத்தை எடுத்துக்கொண்டாலும், அதுவும் தமிழர் தரப்பிற்கு பாரிய ஒரு வெற்றியைப் பெற்றுத்தந்திருக்கின்றது. எதையோ எதிர்பார்த்து திருகோணமலையில் சிலர் புத்தர் சிலை ஒன்றை வைத்துத் தொலைக்க, புத்தர் சிலை மூலமாக தமிழர் தாயகம் மீது நீண்ட காலமாக இடம் பெற்றுவரும் சிங்கள ஆக்கிரமிப்பு பற்றிய உண்மை உலகிற்கு தெரியவந்துள்ளது. திருகோணமலையின் உண்மையான பாரம்பரியம் என்ன? இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் திருகோணமலையல் இருந்த தமிழர் சனத்தொகை என்ன? சிங்களவர் சனத்தொகை என்ன? எப்படியெல்லாம் சிங்கள ஆக்கிரமிப்பு இடம்பெற்றது?.. போன்ற விடயங்களெல்லாம் சர்வதேச சமூகத்தால் தற்பொழுது கிளரப்பட்டு வருகின்றன. 'எதற்கடா இப்படி ஒரு காரியத்தைப் பண்ணித்தொலைத்தோம்'' என்று சிங்களப் பேரினவாதிகள் கவலைப்படும் அளவிற்கு புத்தர் சிலை விவகாரம் சிங்கள சமூகத்தைப் பொறுத்தவரையில் பாதகமான ஒரு விடயமாக மாறியுள்ளது.

இந்தப் புத்தர் சிலை விவகாரத்தில் தமிழர் தரப்பு மேற்கொண்ட அமைதிவழிப் போராட்டமும், அந்தப் போராட்டத்தில் காண்பித்த நிதானமும், உறுதியும் தமிழர் தரப்பிற்கு வெற்றியைப் பெற்றுத்தந்திருக்கின்றது. சிலையை அகற்ற வேண்டும் என்ற நீதிமன்றத் திர்ப்பும், தீர்ப்பை மீறிச் செயற்படும் சிறிலங்கா அரச இயந்திரமும் கூட, சிறிலங்காவின் சட்ட ஒழுங்கு பற்றிய யதார்த்த நிலையை சர்வதேச சமூகத்திற்கு எடுத்தியம்பி நிற்கின்றது.

அந்தப் புத்தர் சிலை அந்த இடத்தில் இருந்து அகற்றப்படுவதை விட, அவமானச் சின்னமாக அங்கு தொடர்ந்து இருந்து சீரழிவது, தமிழ் தரப்பிற்கக்கிடைத்த பெரிய தொருவெற்றி என்பதில் சந்தேகம் இல்லை.

மேலே ஆராயப்பட்ட இரண்டு விவகாரங்கள் உட்பட இலங்கை அரசியலில் அண்மையில் இடம் பெற்று வரும் பல்வேறு நிகழ்வுகள் ஊடாக, மற்றொரு காரியமும் தமிழர் தரப்பின் மத்தியில் நடந்துகொண்டிருக்கின்றது என்பதும் இந்த இடத்தில் குறிப்பிடத்தக்கது. சிங்களப் பேரினவாதிகள் தமது சுய ரூபத்தை பகிரங்கமாக வெளிப்படுத்த ஆரம்பித்ததைத் தொடர்ந்து, தமிழர் தரப்பினர் தம்மிடையேயான பேதங்களை மறந்து ஒரே நோக்கத்துடன், ஒரே அணியில் திரள ஆரம்பித்திருப்பது, தமிழர் தரப்பிற்கு அண்மையில் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று குறிப்பிடலாம்.

தமிழர்களுக்கு உரிமை வழங்குகின்ற விடயம் வரும்போது, அதற்கு எதிராக சிங்கள மக்கள் திரண்டு தமது ஒற்றுமையை வெளிப்படுத்துவதன் மூலம், தமிழர் தரப்பு தம்மிடையேயான பேதங்களை மறந்து ஒற்றுமைப்படவேண்டிய அவசியத்தை உணர்த்திவிடுகின்றார்கள். கருணா, கிழக்கு, முஸ்லிம்.. போன்ற பெயர் அடையாளங்களுடன் தமிழ் மக்களைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட உளவியல் புலனாய்வு யுத்தத்தை, கிழர்ந்தெழுந்து தன்னை வெளிப்படுத்திய சிங்களப் பேரினவாதம் சுக்குநூறாக்கியுள்ளது. தமிழர்கள் தங்கள் பேதங்களை மறந்து ஒன்றுபடவேண்டும், ஒரே அணியில் நின்று போராடவேண்டும் என்கின்ற பாடத்தை மக்கள் தற்பொழுது கற்றுத் தேறியுள்ளார்கள்.

இனப்பிரச்சினை தொடர்பான சிங்கள தேசத்தின நிலைப்பாட்டை, கத்தியின்றி, இரத்தம் இன்றி, இனக்கலவரம் இன்றி சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கு மற்றொரு தடவை உணர்த்தியுள்ளது. தமிழர் தரப்பு அண்மையில் பெற்ற பாரிய வெற்றி இதுதான் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை.

**- ஜெயப்பிரபா -**

# ஐந்து ஆசிரியர்களுடன் இயங்கும் மட்-வட்டவான் கலைமகள் வித்தியாலயம்

**"தற்போது தரம் 08 வரைக்கும் உள்ளது. இந்த வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இடவசதியோ, கதிரை, மேசைகள் பற்றாக்குறையாகவே உள்ளது. தரம் ஒன்றுக்கான மாணவர்கள் தரையில் இருந்துதான் கற்கிறார்கள். இதனால் மாணவர்களின் சீருடைகள் அழுக்கடைகின்றன. இங்கு மிகவும் முக்கியமான பிரச்சினை குடிநீர். கிணறு ஒன்று உள்ள போதிலும் குடிப்பதற்கு நீர் உகந்ததாக இல்லை. இக்குறைகளை நிவர்த்தி செய்வது யாருடைய பொறுப்பு?"**




ஆரம்ப காலப் பகுதியில் இக்கிராம மக்கள் கல்வியில் பெரியளவில் ஈடுபாடு கொண்டவர்கள் அல்ல. காரணம் இப்பகுதி மக்கள் அயல் கிராமத்து தொடர்புகள் குறைந்து காணப்பட்டதுடன் இவர்களை வழி நடத்துமளவிற்கு தலைமைத்துவம் இருக்கவில்லை. இதனால் மக்கள் தங்களின் தொழில், குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டார்களே தவிர வேறு எதனையும் பற்றி சிந்திக்கவே இல்லை. அத்துடன் போக்குவரத்தும் விருத்தியடையவில்லை. பாதைகள் கூட ஒற்றையடிப் பாதைகளாகவே இருந்தன.

வெளியிடத்தில் இருந்து இக்கிராமத்தில் குடியேறிய த.விஸ்வலிங்கம் என்பவர் தற்போது அமைந்துள்ள உஷன் ஏத்தம் என்றழைக்கப்படும் இடத்தில் கோழி வளர்ப்புத் திட்டம் ஒன்றினை மேற்கொண்டு வந்தனர். அதனால் "கோழிப் பாம்" ஏத்தம் என்று முன்பு அழைக்கப்பட்டது. இவர் புகையிரத நிலயத்தில் கடமை புரிபவர். அத்துடன் இவரின் மனைவி ஆசிரியராக இருந்தமையினாலும், இப்பகுதி மக்களைக் கல்வியில் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடனும், மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற சேவை மனப்பாங்குடனும் கடற்கரை யோரமாகக் குடியேறியவர்களில் 20 குடும்பங்களை மேற்குப் பக்கமாக சில தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி குடியிருப்புக்கான சில வசதிகளைச் செய்து கொடுத்தனர்.


கல்வியை வளர்க்க வேண்டும் என்பதற்காக தற்காலிக ஒரு சிறிய கிடுகினால் அமைத்த கொட்டகை ஒன்றின் மூலம் 10-15 அளவில் முதல் எழுத்துக்களை கற்பித்தும் தங்கள் பெயர்களை தாங்களாகவே எழுதவும் கற்பித்தனர். தனியொரு ஆசிரியர் மாத்திரமே உள்ளார். இத்தனைக்கும் எவ்வித வளமும் இருக்கவில்லை. மாணவர்கள் தரையிலேயே அமர்ந்து கல்வி கற்கின்றனர். இப்பகுதி மக்கள் பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்கள். அரசிற்கு இப்படியான ஊர் ஒன்று இருக்கின்றது என்பதே தெரியாது. அவ்வாறான நிலையில் எப்படி கல்வியை முன்னேற்றுவது. 1978ம் ஆண்டு இடம்பெற்ற சூறாவளியினால் இந்தத் தற்காலிக கொட்டிலும் அழிந்துவிட்டது. இதனால் பெரும் பின்னடைவினை ஏற்படுத்தியது. இவர்களின் முயற்சியினாலும், மக்களின் ஒத்துழைப்புடனும், மீண்டும் ஓலைக் கொட்டில் அமைக்கப்பட்டது. வளம் குறைவாக இருந்த போதிலும் இந்த ஆசிரியரின் முயற்சினால் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் இந்த இடத்தினை விட்டு அகல வேண்டிய நிலை உருவாகியது. பின்பு 1980ம் ஆண்டு காலப் பகுதியில் பெருமாள் புண்ணியமூர்த்தி என்ற ஆசிரியர் 75 மாணவர்களுடன் தரம் 1-5 வரை பெரும் சிரமத்தின் மத்தியில் கல்வி தொடரப்பட்டது. நிரந்தர கட்டட வசதி எதுவுமில்லை. இவரின் முயற்சியினால் அரச உதவியுடன் 20x40 கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் கட்டடம் அமைத்தும் பெரும் இடப் பற்றாக்குறை எதிர்நோக்கப் பட்டது. அத்துடன் மாணவர்கள் மரங்களின் கீழ் கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. அத்தோடு ஆசிரியர் பற்றாக்குறையும் இருந்தது. அதிபருடன் மேலும் ஒரு தொண்டர் ஆசிரியர் மாத்திரமே இருந்தார். இவரின் காலப்பகுதியில் கல்வி வளர்ச்சி பெற்றதுடன் சுற்றுப் புறமும் ஓரளவுக்கு விருத்தியடைந்திருந்தது.

அதாவது பாடசாலை என்றால் எவ்வாறு இருக்க வேண்டும் என கற்றுக் கொடுத்தார். இதில் ஒரு விடயம் என்னவெனில் கல்



குடா வலயத்தின் கீழ் இப்பாடசாலை பதிவு இடம்பெற்றது. முற்றாக இல்லா விட்டாலும் ஓரளவு அரச உதவிகள் கிடைக்கப்பெற்றன. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவராகவும் இருந்தார். இவர் நீண்டகாலம் சேவையாற்ற முடியாமல் இருந்ததால் சதாசிவம் - பரமேஸ்வரன் என்பவர் அதிபராக நியமனம் பெற்றார். 1993ம் ஆண்டு காலப்பகுதி இராணுவக் கெடுபிடியான காலப்பகுதியாகும். இருந்தும் மாணவர்களின் கல்வி பாதிப்படையக் கூடாது என்ற நோக்கத்தில் பெரும் சிரமத்தின் மத்தியில் பாடசாலை நடாத்தப்பட்டது. எனினும் கெடுபிடி அதிகரித்தமையினால் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடையத் தொடங்கியது. இதனால் ஒரு வருடத்திற்கு



பாடசாலை இயங்காது காணப்பட்டது. பினனர் இப் பாடசாலை தற்காலிகமாக கடற் கரைப் பக்கம் நகர்த்தப்பட்டு இயங்கி வந்தது. அத்துடன் மாணவர்களில் பெரும்

**சுகுணம்**

பாலானோர் பாடசாலையை விட்டு விலக்கினார். இந்த மாணவர்கள் வேறு பாடசாலைக்குச் செல்ல வேண்டியமையினால் இந்தப் பாடசாலையில் மாணவர்களின் தொகை 50க்கும் குறைவாகவே காணப்பட்டது. இப்பகுதியில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் சம்பவங்கள் ஏற்பட்டன. இதனால் மாணவர்கள் விலகியமையினால் பாதிப்பே தவிர நன்மைகள் எதுவும் இல்லை. காரணம் இப்பகுதியிலிருந்து வேறு பாடசாலைக்குச் செல்ல வேண்டுமாயின் சுமாராக 10 கிலோமீற்றர் செல்ல வேண்டும். அது மட்டுமல்ல பொருளாதாரம் இன்மையினால் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கினர். 1993ம் ஆண்டு 06ம் தரம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் ச.பரமேஸ் வரன் அதிபர் இடமாற்றம் பெற்றார். இதனையடுத்து தற்போதுள்ள திருமதி ஏ.ஏ.தாஸ் அவர்கள் அதிபர் பொறுப்பேற்றார். மீண்டும் 1998ம் ஆண்டு தற்போது இயங்கி வரும் இடத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இப்பாடசாலை தற்போது தரம் 08 வரைக்கும் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இந்த வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இடவசதி, கதிரை, மேசைகள் பற்றாக்குறையாகவே உள்ளது. தரம் ஒன்றுக்கான மாணவர்கள் தரையில் இருந்துதான் கற்கின்றார்கள். இதனால் மாணவர்களின் சீருடை அழுக்கடைகின்றன. இங்கு மிகவும் முக்கியமான பிரச்சினை குடிநீர். கிணறு ஒன்று உள்ள போதிலும் குடிப்பதற்கு நீர் உகந்ததாக இல்லை. இக்குறைகளை நிவர்த்தி செய்வது யாருடைய பொறுப்பு? ஏன் அதிகாரிகள் பாராமுகமாக உள்ளார்கள் என்பதுதான் தெரியவில்லை.

தற்போது தரம் 08 வரை தரமுயர்த்துப்பட்டு மொத்தமாக 174 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இந்த எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பௌதீக வளம், ஆசிரியர்கள் இல்லை. ஒன்பது ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதில் 04 பட்டதாரி ஆசிரியர்கள் இதில் பட்டதாரிகளுக்குப் போட்டிப் பரீட்சை நடாத்துப்பட்டுள்ளது. சித்தியடையும் பட்சத்தில் இவர்கள் வேறு ஒரு பாடசாலைக்கு மாற்றம் பெற்றுச் சென்று விடுவார்கள். ஒப்பந்த அடிப்படை ஆசிரியர் ஒருவர் கற்பிக்கிறார். மொத்தமாக அதிபர் உட்பட 05 பேர் மாத்திரமே உள்ளனர்.

இதே வேளையில் எதிர்வரும் ஆண்டுகளில் இப்பாடசாலை தரம் உயர்த்துவதாகக் கூறப்படுகின்றது. அப்படியானால் தற்போதே அனைத்து வளமும் மிக மிகக் குறைவாக உள்ள நிலையில் மேலும் வகுப்புக்கள் அதிகரிப்பது எந்தளவிற்குச் சாத்தியமாகும். ஆனால் அதிகரிக்க வேண்டிய தேவையும் உள்ளது. வளப் பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். காரணம் கிராமத்தில் சனத்தொகை அதிகரிப்பு ஏற்பட்டமையினால் மேல் வகுப்புக்கான தேவையுள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் சுமார் 10கிலோ மீற்றர் சென்றுதான் இந்த மாணவர்கள் கல்வி கற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளது.

இது எந்தளவிற்குப் பொருந்தும் என்பது தெரியாது. காரணம் பொருளாதாரத்தில் மிக வும் பின் தங்கியவர்கள். இதனால் மாணவர்களின் கல்வி வளர்ச்சியானது முற்றிலும் பாதிக்கப்படுகின்றது. இதனைத் தடுக்க வேண்டுமாயின் அரசாங்கம் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் முன்வர வேண்டும். இதேவேளை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் புறவிருத்திச் செயற்பாடுகளும் இன்றியமையாதது. ஆனால் இதற்குரிய எந்தவித வளமும் இங்கில்லை. அதாவது விளையாட்டு மைதானம், சிறுவர்களுக்கான பூங்கா என்பன இல்லை. இதனால் மாணவர்கள் உளரீதியாக சில பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றார்கள்.

நிச்சயமாக நகரப் புறங்களுக்குக் கொடுக்கப்படும் வளங்கள் கிராமப் பகுதிகளுக்கு கிடைக்குமானால் கிராமப் புறப் பாடசாலைகளும் விருத்தியடையுமல்லவா? இதற்கு யார் முன்வருவார்கள்? தற்போது கல்விச் செயற்பாடானது கற்றலுடன் இணைச் செயற்பாடுகளை உள்ளடக்கியது. ஆனால் இச்செயற்பாடு எந்தளவிற்கு விருத்தி பெற்றுள்ளது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

அடுத்து கல்வி அதிகாரிகள் திடீர் மேற்பார்வைகளைச் செய்ய வேண்டும். இந்நிலமை மிகவும் குறைவாகவே உள்ளது. வலயக்கல்வி அதிகாரி இப்பாடசாலைக்கு வந்ததே இல்லை எனக் கூறப்படுகிறது. அப்படியானால் இப்பாடசாலையின் குறைகளை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என கேள்வி எழுகின்றது. இதில் ஒன்றை உறுதியாகக் கூற முடியும். கிராமப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியடைய வேண்டுமாயின் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் அதிகாரிகளின் மேற்பார்வையும், உதவியுடனும் முன்னேற்றம் செய்யலாம்.

அடுத்து முதலில் இப்பாடசாலைக்கு பௌதீக வளம் கிடைக்க வேண்டும். இக்கிராமத்தைப் பொறுத்த வரையில் அரச உதவிகளை விட சில தொண்டர் நிறுவனங்களின் உதவியே மிகக் கூடுதலாகக் கிடைத்துள்ளது எனலாம்.




## மாணவர் எழுச்சி...

'இளமையில் கல்வி
சிலையில் எழுத்தாம்'
பழமொழிகள் சொல்கிறது.

இன்றைய இளசுகள்
நாளைய தலைமைகள்
என்றும் சொல்லப்படுகிறது.

காளைப் பருவத்தைக்
காதல் பருவமாக
மட்டும் எடுத்தால்
கோழையின் வாழ்வின்
வரைவிலக்கணமாகும்.

மாணவப் பருவம் வெறும்
கல்விப் பருவம் மட்டுமல்ல
மகா வரலாறு படைக்கும்
அத்திவாரம்.

சிறுதுளிகள் தான்
வெள்ளமாகிறது
சிந்தித்தால் இளசுகளின்
கனவுகள்
வல்லரசைப் படைக்கும்.

மாணவர்கள் எழுந்தால்
மறுமலர்ச்சி பூக்கும்
மகா வல்லரசும்
மண் கவிழும்
மண்ணின் பெருமை
வரலாற்றைப் படைக்கும்.

தமிழீழ மாணவம் எழுந்தால்
தரணியில் தமிழின் மறுமலர்ச்சி
தலைநிமிரும் தமிழ் புகழ்....
***கவிஞர்***
***எஸ்.பி.பாலமுருகன்.***

## காத்திருப்பு

காத்திருப்பின்
நீளங்கள் தான்
எத்தனை.....?
இத்தனைக்கிடையில்
ஒவ்வொரு நிமிஷங்களும்
உன் வாழ்க்கையில்
ஒவ்வொரு யுகங்களாகும்.
ஆனாலும்........
உனது காத்திருப்பின்
நாட்கள் தான்
உனக்குக் காலனாகும்.
அப்போது தான் உனக்கு
ஏமாற்றத்தின் ஆழம் புரியும்...!
ஏக்கத்தின் தாக்கம் தெரியும்...!
விசாரிப்புக்கள் உனக்கு
விசனத்தை உண்டாக்கும்!
அதனால் தான் சொல்கிறேன்
என்றோ ஒரு நாள்
உனக்கு நீயே
எதிரியாவாய்;
ஓ....
உணர்ந்து கொள்
உண்மையைப் புரிந்து கொள்.
***ந.விஜிதா***
***அரசடித்தீவு.***

## பதில் கூறு

சுனாமியாகிய
இயற்கை அன்னை
அலைக்கரங்களால்
எங்கள் உறவுகளை வளர்த்தாலும்
விழிக் கற்களால் அவர்களை
அழிக்க எப்படி மனம் வந்ததோ?
எங்கள் உறவுகளை அழித்தாலும்
உள்ளத்திலுள்ள நினைவுகளை
அழிக்க முடியுமா?
ஆம்! அவளில் தப்பில்லை
கடவுளுக்குத்தான் எங்களில்
அன்பில்லையோ?
உலகே கூடி அழுவதைப் பாரு
படைத்திட்ட சாமியே பதிலைக்
கூறு!
***ம.திரேசா***
***அன்னமலை.***

## காவிய வணக்கம்

துரோகிதனைத்
துல்லியமாய்
இனம் கண்டு
கெடுதலை கிழித்தெறிந்த
கௌசல்ய அண்ணாவே.....
துரோகிகள் வலையினிலே
நீர் வீழ்ந்ததென்ன
சதியா?
இல்லை இதுதான் உன்
தலை விதியா?

அரசியலில் ஆல
விருட்சமதாய்
தலை நிமிர்ந்த
தலைவா நீ
அயராத தூக்கத்தில்
தூங்குகிறாய்
ஏன் ஐயா?

விதைக்கப்பட்ட
உனது உடல்
விதையாக
இனி மலர்ந்து
படைக்கப் போகும்
காவியத்தைப்
பார்ப்பார்கள்
கயவர்கள்.

தமிழ் முஸ்லிம் உறவின்
தலைவா....
உமக்காய் அன்று
அனைவரும் வழங்கியது
கடைசி வணக்கமல்ல....
காவிய வணக்கம்
மறக்க வேண்டாம்.
***எஸ்.கே.***
***பெரியபோரதீவு.***

## தாய்

அன்புத் தாயே பத்து மாதம் - உன்
அன்புக் கருவறையிலிருந்து
இப் பூவுலகில் மலர்ந்தவுடன்
பூவாகப் பார்த்தது - நான்
உன் திருமுகத்தைத்தான்!

முதல் ஒலியாய் என் காதில்
ஒலித்த இனிமையான இசை - உன்
தாலாட்டுப் பாடல்தான்!

சிறுமியாக இருந்த போது
அன்பு காட்டி பாலூட்டி
சீராட்டி அரவணைத்து - என்னை
மண்ணுலகில் அற்புதமாய்
நிலை நாட்டியதும் தாயே நீதான்!

பாவையாக இருந்த போது
கொஞ்சித் தழுவிய கையால்
இன்று குமரியான பின்னும் - நீ
மானத்தைக் காத்திடும்
நாணத்தைக் கற்றுத்தந்தாய்.

தாயே நீ அன்றி
வேறுயார் உள்ளனரோ
அன்பின் பிறப்பிடமாய்...?
***த.மேனகா***
***ஆரையம்பதி - 3.***

## சுதந்திரம்

சமாதானம் இல்லாத
சச்சரவுகள் நிறைந்த
நாட்டு வாழ்க்கையை
விட்டு நான் இனி
வெளியேறுகிறேன்.....

எங்கே காட்டுங்கள்
காட்டு விலங்குகள்
கூட்டு வாழ்க்கை
நடாத்துகின்ற காட்டினை
அங்கே போய்
நான் இனிக்
குடியேறுகிறேன்.
***கே.எல்.ஹில்மி***
***சாய்ந்தமருது - 13.***

## நினைவு கலைந்ததென்ன?

உன்னை சிலை
என்று நினைத்தேன்
நீயோ கற்பாறையாய்த்
தெரிந்ததென்ன?

உன்னைக் கவிதையாய்
வடிக்க நினைத்தேன்
என் கற்பனை
கலைந்ததென்ன?

உன்னை கண்ணுக்குள்
பதிக்க நினைத்தேன்
என் கண்ணீர் அதை
அழித்ததென்ன?

உன்னைக் கார்மேகமாக
நினைத்திருந்தேன்
என் மனக் காற்று - அதனைக்
கலைத்ததென்ன?
***தி.கண்ணன்***
***எருவில்.***

## தோள் கொடுப்போம்

ஒற்றுமைக்கு உதாரணமாய்,
ஓரினத் தேனிகளாய்,
உறவுகளிற்குப் பாலமானோம்.
உடன் பிறவா சகோதரரானோம்.
நட்பில் கர்ணனுக்கும்
நன்றியில் கும்ப கர்ணனுக்கும்
நல்லதோர் எடுத்துக் காட்டானோம்
இன்று வேற்றுமையில்
வாடுவதேன்
இது விதியின் சதியா?.... இல்லை
மாற்றார் சதிதான் விதியா?
தோழர்களே தோள் கொடுப்போம்
தோல்விகளைத் தோற்கடிப்போம்.
***கோ.சந்திரிகா***
***அன்னமலை.***

## காதல் பிசாசு

அழகு என்னும்
விசத்தை வைத்து
அபிநயம் காட்டி
ஆண்களை
ஆட்டிப் படைக்கும்
பிறவிகளடா
இந்தப் பெண்கள்
இதனை அறிந்தும்
காதலால் நாடுதடா
இந்தக் கண்கள்
கவிதை எழுதத்
தெரிந்த உனக்கு
காதலைப் பற்றித்
தெரியல்லடா
காதல் வந்தாடா
அதன் வேதனை
தெரியுமடா
நீ காதலிக்கிறாயோ
இல்லையோ
உன்னைக் காதலிச்சாத்தான்
காதலைப் பற்றியும்
தெரியும்
சரி சரி விடடா
இப்ப நான்
என்ன செய்யணும்?
அவ என்னைப் பார்க்கிறாடா
நான் அவவ
காதல் பண்ணுறண்டா
அப்ப போய்
சொல்ல வேண்டியதுதானடா
முடியல்லடா.
***எஸ்.ரி.***
***தமிழீழம்.***

## ஒற்றுமை

பூமியைப் பார்த்து
வானம் அழுகின்ற போது
பூமி வானத்தைப்
பார்த்துச் சிரிக்கின்றது.
கண்ணே நான்
உன்னைப் பார்த்து
அழுகின்ற போது
நீ என்னைப்
பார்த்துச் சிரிக்கின்றாய்.
***ந.துரைராசசிங்கம்***
***கோட்டைக்கல்லாறு - 01.***

## பயமும் வருகுது

ஆடியிலே சமஞ்ச பொண்ண தேடியலைகிறன் - எங்க
அத்தை பெத்த கிளியை எண்ணி ஓடாய்த் தேய்கிறேன்
மாடாய் உழைச்சஉழைப்பை எல்லாம் சேர்த்து வைக்கிறன் - அவள்
வப்பாட்டியா இருந்தாலென்ன கூட்டி எடுக்கிறன்.

மூன்று முடிச்சி அவள் கழுத்தில் போட்டுக் கொள்ளுவன்
மூக்கணாங் கயிறைக் கையால் பிடிச்சிக் கொள்ளுவன்
மன்றில் ஏறி அவளுக்காக வளக்கும் பேசுவன் - நான்
வாய் கிழிய பொய்களெல்லாம் எடுத்து வீசுவன்.

நேத்து வரை பூவலடி காத்துக் கிடந்தன்
நிம்மதியை இழந்து மனம் வேர்த்துக் கிடந்தன்
பார்த்துப் பார்த்து ஏங்கி மனசு தவிச்சுக்கிடந்தன் - நான்
பார்த்ததாலே பூத்தகண்ணாய் ஆகி நடந்தன்.

அவளுக்காகவே உடலில் உசிருமிருக்குது
அரைகுறையாய் எனதுடலோ மெலிஞ்சிபோகுது
சிவல நிறத்தழகியாலே கனவும் தோணுது - அவள்
'செருப்பதனை' நெனச்ச பின்னே பயமும் வருகுது.
***கூழாவடியான்.***

## வேலைக்கு செல்கிறேன் தோழி

வேலைக்குச் செல்கிறேன் தோழி
உன் உறுதி மொழி கேட்டு
போதைக்கு அடிமையாகி
பாதை மாறிய கணவனைப்
பாதையில் விட்டு விட்டு
வேலைக்குச் செல்கிறேன் தோழி!

சேலையை இழுத்த
என் பிஞ்சுக் குழந்தையின்
கரங்களை வேகமாகத் தள்ளி விட்டு
வேலைக்குச் செல்கிறேன் தோழி!

பசி என்று அழுத போது
புசிக்கத் தராத
போலி உறவுகளை
வெறித்துப் பார்த்து வேதனையடைந்தபடி
வேலைக்குச் செல்கிறேன் தோழி!

பட்டினி கிடந்து தண்ணீரை மட்டும்
குடித்த நாட்களையும்
தண்ணீரில் கரைந்த இரவுகளையும்
நினைத்துப் பார்த்து
ஞானம் பிறந்தது எனக்குள்.

கண்களுக்கு கண்ணீர் மைதீட்டி
உதட்டுக்கு வேதனைச் சாயம் தீட்டி
சமுதாயத்தின் கேலிப் பேச்சைக் காதிற் போட்டுக் கொள்ளாமல்
விரைந்து நடை போடும் கால்களுக்கு
'உறுதி'ச் செருப்புப் போட்டு நெருக்கும் பஸ்சுக்குள்
நெருக்குப்பட்டு வேலைக்குச் செல்கிறேன் தோழி!
***சிவலிங்கம் சுமதி***
***ஏறாவூர் - 04.***

## இலட்சியக் கனவு

வெந்து போன மண்ணில்
நொந்து போனது மனம்
காய்ந்து போன இதயத்தில்
நைந்து போனது உறவு.

நிறைந்து போன கவலையில்
கரைந்து போனது கண்ணீர்
வறுமையின் கொடுமையில்
சிதைந்து போனது - என்
இலட்சியம்

வீட்டைப் பார்த்தால் கூரைவழியே
ஓட்டைகள் பளிச்சிடுகின்றன
இதற்கிடையில் முடிந்து - தான்
விடுமா...?
என் இலட்சியம்
இல்லவே இல்லை.
***பு.கயல்விழி***
***நொச்சிமுனை.***

## அகதி வாழ்க்கை

பட்டம் பெறுவதற்குப் பாடுபட்டுப்
படித்தோம்
போர் தந்தது சோகம் - முயன்று
தளராது
முன்னேறினோம் -எங்களைத் தடுத்து
நிறுத்தியது சுனாமிப் பேய்.

கல்விக்கோ ஏங்குகின்றோம்!
பள்ளியோ வெகு தூரம்!
போக்குவரத்தோ மிகக் கஸ்ரம்
பாடுபட்டு உழைத்தாலும் கிடைப்பது
அகதி எனும் பட்டம்.

இது எல்லாம் சம்பந்தப்பட்டவர் -
கண்ணுக்கோ
மங்கலான சமாச்சாரம்
சுட்டிக் காட்டினால் - அதற்கும்
ஏதாவதொரு சாட்டு
அகதி வயிறுக்கு என்றுமே வேட்டு
***பு.சீலன்***
***தம்பிலுவில் - 01.***

# ஈழத்தமிழரின் இணையிலாக் கலையே கூத்துக் கலை

**கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உலக நாடக தின விழா - 2005 இல் சிறந்த கூத்துக் கலைஞராக ''தலைக்கோல்'' விருது பெற்ற மன்னாரைச் சேர்ந்த கூத்துக் கலைஞர் குழந்தை அவர்களுடனான நேர்காணல்**



**கேள்வி:- வணக்கம் ஐயா. முதலில் உங்களது ஊர், பெயர் முதலான விபரங்களைப் பற்றி வாசகர்கள் அறிய ஆசைப்படுவார்கள்.....! கூறுங்கள்......?**

**பதில்:-** வணக்கம்.....! என்னுடைய பெயர் செ.செபமாலை புனைபெயர் குழந்தை. ஊர் மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள 'முருங்கன்' ஆகும். 1940.03.08 இல் பிறந்தேன். முருங்கன் மகா வித்தியாலயமே எனது ஆரம்பப் பாடசாலையாய் இருந்தது. இதில் இருந்துதான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் சென்றேன். 1958,59 ஆகிய இரு ஆண்டுகளும் பயிற்சி நெறிக்காலமாகும். 1960 ஆம் ஆண்டிலே பயிற்சியை முடித்து வெளியேறினேன். 1964 இல் 'முருகன் முத்தமிழ் கலாமன்றம்' என்னும் கலா மன்றத்தை உருவாக்கி கலைத் தொண்டுகளாற்றி வருகிறேன்.

**கேள்வி:- உங்களது இன்றைய இந்த உயர்வுக்கு உங்களது இளமைக்கால அனுபவமே அடித்தளமாக அமைந்திருக்கும் என நினைக்கிறேன் இதுபற்றி.......?**

**பதில்:-** அருமையானதொரு கேள்வி..! பாடசாலையில் படிக்கின்ற போது 5வயதில் இருந்து பாடல்கள் பாடியும், நடனங்கள் ஆடியும் பல்வேறு கலைத்திறமைகளை வெளிக்காட்டி வந்தேன். 8ம்,9ம் தரங்களில் படிக்கும் போது எனது இந்தக் கலையார்வ, ஆக்கமுயற்சிகள் உச்சநிலையைப் பெற்றது. இவ்வாறாக எனது கலைப்பயணம் படிப்படியாய் வளர்ச்சி பெற்று வந்தது.

இன்றைய உயர்வுக்கெல்லாம் காரணம் அன்றைய எனது இளமைக்காலம்தான். அதிலும் அந்தப் பாடசாலை வாழ்க்கையை எத்தனை பிறப்பெடுத்தாலும் என்னால் மறக்கமுடியாது.

**கேள்வி:- இளமைக் காலத்திலேயே நீங்கள் கலைப்பயணத்திலே கால்பதிப்பதற்கான பின்புலம் என்ன?**

**பதில்:-** என்னுடைய தந்தையார் பெயர் செபஸ்த்தியென். அவர் ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞர். அண்ணாவின் பெயர் மரியன் சந்தான். அவர் ஒரு புலவர். இவர்கள் காட்டிய வழியே எனது இன்றைய வழி. இதிலேதான் என் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.

**கேள்வி:- கலைஞர்களுக்குப் பொதுவாக மனைவி வாய்ப்பதில்லை என்றும், இடஞ்சலையே ஏற்படுத்துபவளாக இருப்பாள் என்றும் கூறப்படுகிறதே....! இந்தநிலையில் உங்களது மனைவி......?**

**பதில்:-** உண்மைதான். ஆனாலும் என் மனைவி இதற்கு விதிவிலக்கானவள் என்றே நினைக்கிறேன். அந்த வகையில் என் மனைவி படித்தது 5ம் தரம் வரைத்தான். ஆனால் நல்ல கலை ஆர்வம் மிக்கவள். கலையை உளமார ரசிப்பவள். என் இன்ப துன்பங்களில் எல்லாம் தோளோடு தோள் நின்று உழைத்து வருபவள். என் தந்தைக்கும், தமையனுக்கும் அடுத்ததாக மனைவியே பக்கபலமாக இருக்கிறாள்.

**கேள்வி:- உங்களை கவர்ந்த கலைஞர்களைப் பற்றி கூறமுடியுமா..?**

**பதில்:-** நிச்சயமாக....! எனது உயர்ச்சிக்குக் காரணமான கலைஞர்கள் யாழ்ப்பாணக் கலைஞர்கள். இத்தனைக்கும் மேலாக எனக்குத் தானாக ஏற்பட்ட ஆர்வம். அண்ணாமார், தம்பிமார், சீமான், பிரேந்திரன், இரத்தினம், ஜேசுதாஸ் மற்றும் இறந்த மருமகன் அந்தோனிப்பிள்ளை. உட்பட பல கலைஞர்கள் என்னைக் கவர்ந்தவர்கள். என் கலை வளர்ச்சிக்காகத் துணையாக நின்றவர்கள்.

**கேள்வி:- நீங்கள் படைக்கும் கூத்துக்களில் இழையோடும் கருப் பொருட்கள் என்ன?**

**பதில்:-** தமிழர்வீரம், காதல், இலட்சியம் போன்றவற்றையே மையமாகக் கொண்டிருக்கும். இவற்றை அடிப்படையாக வைத்தே சரித்திர, சமூக நாடகங்களையும், நாட்டுக் கூத்துக்களையும், மற்றும் பல படைப்புக்களையும் படைத்து வருகின்றேன்.

**கேள்வி:- நீங்கள் இதுவரையில் ஆடிய, அரங்கேற்றிய கூத்துக்கள் பற்றி விபரமாகக் கூறுங்களேன்?**

**பதில்:-** ஆரம்பத்தில் சமூகநாடகங்கள்..

01. 'பாட்டாளிக் கந்தன்'
02. 'பணத்திமிர்'
03. 'இலட்சிய வாதிகள்'

பிண்பு சரித்திர நாடகங்கள்...

01. 'கண்ணகி'
02. 'இலங்கை கொண்ட இராஜேந்திரன்'

அதனை அடுத்து......

நாட்டுக்கூத்துகள்.

01. 'வீரத்தாய்'- (கொழும்பு கலைக்கழகப் பரிசு பெற்றது.
02. 'கல் சுமந்த காவலர்கள்'
03. 'வீரனை வென்ற தீரன்'
04. 'யார் குழந்தை?'

மொத்தத்தில் 50க்கும் மேற்பட்ட நாடகங்களையும், கூத்துக்களையும் எழுதியும், பழக்கியும், அரங்கேற்றியும் உள்ளேன்.

**கேள்வி:- 'சவால்கள்தான் சாதனைக்கான வழிகள்' என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இத்தகைய கலைகளின் வளர்ச்சியில் நீங்கள் சந்தித்த சவால்களும், அதனூடாக நீங்கள் பெற்ற சாதனைகளும் என்ன?**

**பதில்:-** பணத்தட்டுப்பாடு, பணம் படைத்தவர்களின் உதவியின்மை, அரசாங்கத்தின் இதற்கான அக்கறை போதாமை, யுத்த நெருக்கடியான சூழ்நிலைகள் போன்றனவைகளுக்கு மத்தியிலே தான் எனது கலைப் பிரவேசமும், பயணமும் தொடர்ந்தது, தொடர்கிறது. இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து பெற்ற சாதனைகளாக பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றிருக்கின்றேன்.

**கேள்வி:- என்னென்ன பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளீர்கள் என்று கூற முடியுமா?**

**பதில்:-** 01.1995 இல் வடகிழக்கு மாகாணசபையால் 'மாவட்டத்தில் சிறந்த கலைஞர்' என்ற விருதைப் பெற்றேன்.

02. 1998 இல் அரச இலக்கிய பேரவையின் சாகித்திய விருதினைப் பெற்றேன்.

03. 1999இல் அரச இலக்கிய பேரவையின் கலாபூசண விருதைத் தனதாக்கிக் கொண்டேன்.

04. 2000ம் ஆண்டில் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் ஆளுனர் விருதைக் கட்டிக் கொண்டேன்.

05. 2000ஆம் ஆண்டில் ஆயர் ராஜப்பு ஜோசப் வழங்கிய 'திருக்கலை வேந்தன்' என்னும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டேன்.

06. 2005 இல் சிறந்த கூத்துக்கலைஞராக இந்தத் 'தலைக் கோல்' விருதினைத் தட்டிக் கொண்டேன்.

---

**நேர்காணல்:~**
**கன்னிமுத்து**
**வெல்லபதியான்**

---

**கேள்வி:- பல வெளியீடுகள் மூலமும் நீங்கள் கலைத் தொண்டுகள் ஆற்றியுள்ளதாகத் தெரிகிறதே......! என்னென்ன வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறீர்கள்?**

**பதில்:-** 1966இல் ''அறப்போர் அறை கூவல்'' என்னும் பாடல் தொகுப்பினையும், 'இன்பத் தமிழின் இதய ஒலத்தினையும்' வெளியிட்டேன். மேலும் 'நாம்' 'பரிசுபெற்ற நாடகங்கள்' (தொகுப்பு-சாகித்திய பரிசு பெற்றது) 'மரபு வழி நாடகங்கள்' 'மாதோட்டம்' (கவிதைத் தொகுப்பு) போன்றவற்றை வெளியிட்டிருக்கிறேன்.

**கேள்வி:- அன்றைய நிலையோடு இன்றைய நிலையினை ஒப்பிடும் போது கூத்துக்கலை அருகிக் கொண்டு செல்வதைத்தானே காணமுடிகிறது. இது பற்றி....?**

**பதில்:-** தொலைக்காட்சி ஆதிக்கம், சினிமா மோகம்......! இவற்றிலேதான் பெரும்பாலான மக்கள் மூழ்கி விடுகிறார்கள். இதனால் இத்தகைய (தமிழர்) பாரம்பரியக் கலைகளின் தரத்தினையும், தனித்துவத்தினையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

இது மாத்திரமன்றி இத்தகைய கலைகளை, கலைஞர்களை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தோ, பணம் படைத்த தனவந்தர்களிடமிருந்தோ மிகமிக அரிதாகவே கிடைக்கின்றன. இதனாலும் இக்கலைகள் அருகிக் கொண்டு செல்கின்றன. இந்த மோசமான நிலை மிகவும் மனவேதனையை தருகிறது.

**கேள்வி:- இந்த இடத்தில் ஒன்றை நாம் மறக்க முடியாது. இத்தகைய அருங்கலைகளை வளர்ப்பதற்காகத்தான் கி.ப.கழக நுண்கலைத்துறை, கலை, கலாசார பீடமானது அயராது முழுமூச்சாகச் செயற்பட்டு வருகிறது. இது தொடர்பில் உங்களது கருத்தென்ன?**

**பதில்:-** உண்மைதான். இதனை மறுக்கவோ, மறக்கவோ முடியாது. கி.ப. கழக சமூகமானது ஆற்றிவரும் சேவைகளோ அளப்பரியவை. அரும்பெரும் நம் தமிழ், முஸ்லிம் கலைகளை வளர்ப்பதிலும், வாழ்விப்பதிலும், பிற்கால சந்ததியினருக்காக அவற்றைப் பேணிக் கடத்துவதிலும் பல யுத்திகளையும், முறைகளையும் கையாண்டு படைத்து வரும் பணிகளோ பல்திறப்பட்டவை. இப்படி நான்கு பல்கலைக்கழகங்கள் நாலா பக்கமும் இருந்தாலே போதும்.

**கேள்வி:- நவீன மயமான இந்தக் காலகட்டத்திலே அருங்கலைகளை வளர்ப்பதில் புதிய புதிய யுத்திகளைத் தான் கையாள வேண்டியிருக்கிறது. அந்த வகையில் எந்த யுக்திகளை நீங்கள் கைக் கொள்கிறீர்கள்?**

**பதில்:-** பல இரவுகள் தொடராக இடம் பெறும் பெரிய நாடகம், கூத்துக்களைச் சுருக்கி 01 மணித்தியாலம், 02 மணித்தியாலம் கொண்டதாக அமைத்தும், நடித்தும் வருகிறோம்.

**கேள்வி:- இப்படியாகச் சுருக்கும் போது அதன் கட்டுக்கோப்பும், தனித்துவமும் இழந்து போகும் அல்லவா?**

**பதில்:-** மிகவும் முக்கியமான கருத்துக்களையும், கட்டங்களையும் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் நெறியாள்கையைக் கையாண்டு சுருக்குவதன் மூலம் இழப்புக்கள் அதிகம் நேர்வதற்கு வாய்ப்புக்கள் இல்லை. இருந்தும் பாதிப்புக்களும் உள்ளதுதான். இன்னும் என்ன செய்ய?

**கேள்வி:- தமிழர் விடுதலைப் போராட்ட வளர்ச்சிக்கு கலைத் தொண்டு மூலம் நீங்கள் பங்காற்றியதாகக் கூறப்படுகிறதே........! இதன் பொருத்தப்பாடு என்ன?**

**பதில்:-** தமிழ் பேசும் மக்களது பிரச்சினைகளை மையமாகவைத்து 'தாகம்','என் மகன் மாவீரன்','வித்துக்கள்' ஆகிய நாடகங்களை எழுதி, அவற்றை அரங்கேற்றியுள்ளேன். இவை தவிர கதாப்பிரசங்கம், வில்லுப் பாட்டுக்கள் போன்றனவும் செய்தேன்.

**கேள்வி:- 'கலை கலைக்காக' என்றும் 'கலை வாழ்க்கைக்காக' என்றும் இரு பிரதான கொள்கைகள் இருக்கின்றனவே. இதனைப்பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

**பதில்:-** இரண்டும் முக்கியம் தான். இருந்தும் 'கலை வாழ்க்கைக்காக' இருக்க வேண்டும் என்பதனையே பெரிதும் நான் விரும்புகின்றேன். வாழ்க்கையே ஒரு கலைதான். எனவே மக்கள் வாழ்க்கையை அவர்களது ஏக்கங்களை தாக்கங்களை எனப் பல்வேறு பிரச்சினைகளையும் அது பிரதிபலித்துக் காட்ட வேண்டும்.

**கேள்வி:- மன்னார்க் கலை, மட்டக்களப்பு கலை பற்றிய உங்களது கருத்தோட்டம் எவ்வாறு இருக்கிறது?**

**பதில்:-** இவை இரண்டு மாவட்டங்களுமே கலைமணம் கமழும் பிரதேசங்களாகும். இருந்தும் இரண்டு இடங்களிலும் அன்றிருந்தது போல் கலைகள் இன்றில்லை. அருகியே காணப்படுகின்றன. ஆனாலும் இரு பிரதேசங்களிலுமே அருங்கலைகள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அங்கும், இங்கும் வாழும் மக்கள் கலை ஈடுபாடு உடையவர்களாவார்கள். மன்னார்க் கலைகளையும் விட மட்டக்களப்புக் கலை ஒருபடி உயர்ந்து நிற்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.

**கேள்வி:- தலைக்கோல் விருதினைப் பெறும் போது உங்கள் மனநிலையில் ஏற்பட்ட மாற்றம்......?**

**பதில்:-** ஆரம்ப காலத்தில் இருந்து கலை வளர்ச்சிக்காகக் கஸ்ரப்பட்டதற்கு கிடைத்த பரிசாகவும், மாபெரும் மற்றுமோர் வெற்றியாகவும் 'தலைக் கோலை'க் கருதினேன். பேரானந்தம் அடைந்தேன். இவ் விருது வழங்கிக் கௌரவித்ததன் மூலம் எனது கலைப்பணியினை எந்த இடர்பாடுகள், சவால்கள், பிரச்சினைகளின் மத்தியிலும் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்ல முடிவு செய்துள்ளேன். உத்வேகத்தினையும், ஆக்கவூக்கத்தினையும் எனக்கிது அளித்துள்ளது. அந்த வகையில் கி.ப.கழகத்துக்கு என்றென்றும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டவனாவேன்.

**கேள்வி:- வளர்ந்து வரும் கூத்துக் கலைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது....?**

**பதில்:-** அவர்கள் சலனம் அடையாமல் கூத்துக்களின் உண்மை நிலைகளையும், அருமை பெருமைகளையும் அறிந்து நேரத்தையும், காலத்தையும் அர்ப்பணித்துச் செயற்பட வேண்டும்.

எதிர்ப்புக்கள், ஏக்கங்கள், தாக்கங்கள், சவால்கள் அனைத்தையும் சந்திக்கும் சக்தியைப் பெற வேண்டும். இத்தனைக்கும் மத்தியிலே கலைச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன் கொண்டு செல்ல வேண்டும். முன்னோடிக் கலைஞர்களை அணுகி அறிவுரைகளையும், ஆலோசனைளையும் பெறவேண்டும். முக்கியமாக மக்களுடைய சமுதாயப் பிரச்சினைகளை மையப்படுத்தியதாகவும், அவற்றுக்குத் தீர்வு கூறுவதுமான படைப்புக்களைப் படைக்கவேண்டும். அருகிக் கொண்டு வரும் அருங்கலைகளை வளர்ப்பதற்கும், வாழ்விப்பதற்கும் அயராது பாடுபட வேண்டும்.

ஈழத் தமிழர்களின் இணையிலாக் கலையான கூத்துக்கலைக்காக இறுதி மூச்சுவரை உழைக்க வேண்டும்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

## உலக நாடக தின விழா – 2005

## ஒரு பார்வை

**சென்ற வாரத் தொடர்ச்சி........**

உரோம அரங்கும் கிரேக்க அரங்கினைப் போலவே பார்வையாளர்கள் மேல் இருந்து கீழ் நோக்கிப் பார்ப்பதாகவும் கீழே நடனம் இடம் பெறுவதாகவும், அது இடம் பெறுவது மத்தியாகவும் அமைந்திருந்தது.

இதனை அடுத்து மத்தியகால அரங்கானது மேலைத்தேய அரங்காகவும், திருச்சபை, வைபிள் கதைகளைப் பிரதிபலிப்பதாகவும் சிறப்புப் பெற்றது. எலிசபத்தியன் அரங்குதான் சேக்ஷ்பியர் அரங்காகும். இது கீழ், மேல் என்னும் இரு வித



அரங்குகளைக் கொண்டு சிறப்புப் பெற்றது. களரியிலே வசதி குறைந்தோர் அமர்ந்திருப்பார்கள். நடனம் ஆரம்பமாகப் போகின்றது என்பதன் அறிகுறியாகக் கொடி உயரமாகப் பறக்கும். இவ்வாறான சிறப்பம்சங்களைத் தத்ரூபமாக எலிசபத்தியன் அரங்கானது வெளிப்படுத்தியது.

இதனை அடுத்து படச்சட்ட மேடை அரங்கும், நவீன அரங்கும் பார்வைக்காக ஒழுங்கமைத்து உருவாக்கி வைக்கப்பட்டிருந்தன். இவை இரண்டும் பொதுவாக தற்கால மேடை அமைப்பு முறைகளைக் கொண்டிருந்தன.

இவற்றினைத் தவிர அரங்கியற் கண்காட்சியகத்திலே இன்னிய அணியினரின் நிழற்படங்களும், கலை, கலாசார விழாக்கோலங்களையும், நிகழ்வுகளையும் பிரதிபலிக்கும் புகைப்படங்களும் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. பல்வேறு முகமூடிகளும் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. மொத்தத்தில் அரங்கியற் கண்காட்சியானது இவ்வருட உலக நாடக தினவிழாவினைச் சிறப்பித்ததோர் நிகழ்வாகவும், புதியதோர் நிகழ்வாகவும் அமைந்து முக்கியத்துவம் பெற்றது. மூன்று தினங்களும் இக்கண்காட்சி இடம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையடுத்து பறைமேளக் கூத்தானது பல்கலைக்கழக வட்டக் களரியிலே ஆரம்பமானது. இதனை ஆரம்பிக்குமுகமாக அறிமுக உரையினை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் சிறப்புற எடுத்து விளக்கினார். முதலிலே பறைமேளக் கலையின் முக்கியத்துவத்தினை பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் தங்களது கை வண்ணத்தாலே காட்டினார்கள். பின்பு களுதாவளை யைச் சேர்ந்த 4 பேரைக் கொண்ட பரசுராமன் குழு முரசுக் கலையான பறைமேளக் கூத்து மூலம் அனைவரையும் கவரச் செய்தது.

திரு.கா.பரசுராமன் அவர்கள் சொர்ணாளி (ஊதுகுழல்) ஊத, இன்னொருவர் தம்பட்டம் இசைக்க இரு இளைஞர்கள் தலைகளிலே தலைப்பாகை கட்டி, மேனியிலே உடையின்றி இடையினிலே பாவாடை போன்ற செந்நிற உடை அணிந்து, மேளத்தினைத் தாங்கியபடி அடித்து, ஆடி தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். இது தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியத்தை நினைவுபடுத்தியது.

பின்பு பிற்பகல் 2.30 மணியளவில் ஆற்றுகைகள் ஆரம்பமாயின. சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி மாணவர்களின் நடன நாடகமானது ''இயற்கையை நேசித்தால் அது நம்மை நேசிக்கும். பகைத்தாலோ அது நம்மைப் பகைக்கும்'' என்னும் கருத்தைப் புலப்படுத்தும் வகையிலே முக்கியத்துவம் பெற்றது.

இதிலே ''புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே''என்று மீனவர் கடலுக்குச் செல்லும் காட்சிகளையும், பெண்களுக்கு அடித்தல், உதைத்தல் போன்ற காட்சிகளையும், யுத்த வேட்டுக்களையும், இறுதியாக இயற்கையை மதியாததால் வந்த விபரீத விளைவுகளையும் காணமுடிந்தது. நுண் கலைத்துறை மாணவியின் ''புதிதளித்தல்'' நடிப்பானது பாரதியாரின் ''அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்..''என்னும் பாடலுக்கான அபிநயமாக அமைந்து சிறப்புப் பெற்றது. பாரதியாரையும் பழமையுடன், புதுமையையும் இது நினைவூட்டியது.

'புதிதளித்தல்' நடிப்பினை அடுத்து சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி மாணவர்களின் ''இசைக் கோலங்கள்'' என்னும் கலை நிகழ்வானது அரங்கை அலங்கரித்தது. அதற்கு அடுத்ததாக மூன்றாவது கண் உள்ளூர் அறிவுச் செயற்பாட்டுக் குழுவினால் ''வேண்டாம் என்று சொல்கிறோம்'' என்ற ஆற்றுகையானது இடம் பெற்றது. இதுவும் கலாரசனையைத் தூண்டுவதாக இருந்தது. இதனுடன் பகல்நேர நிகழ்வுகளானது நிறைவுற்றது.

பின்பு மாலை நிகழ்வானது 7.00 மணிக்கு அறபுத்துறை பதில் தலைவர் திருமதி. கலாநிதி. அம்மான்கிளி முருகதாஸ் தலைமையிலே ஆரம்பமானது. மாலை 7.00 மணியில் இருந்து 10.00 மணிவரையான விழா நிகழ்வாக 'லயம்' என்னும் கலை நிகழ்வானது இடம்பெற்றது. அது பற்றிச் சிறிது விளக்கமாக இங்கே நோக்கப்படுகிறது.

### லயம்-மண்ணின் தாளங்கள் (வானவில்-வர்ணங்கள்)

மண்ணின் தாளங்களாய், வானவில் வர்ணங்களாய் அமைந்த 'லயம்' என்னும் கலை நிகழ்ச்சியானது பொதுவாக இலங்கைத் தமிழரதும், சிறப்பாக கிழக்கு மாகாணத் தமிழர் இஸ்லாமிய மக்களதும் பண்பாட்டின் வெட்டுமுகத் தோற்றத்தை விளக்குவதாயும், அவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும் அமைந்திருந்தது.இது கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திறந்த வெளியரங்கிலே; செனட் சபைக் கட்டடத்துக்கு முன்பாக மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

வானவில்லில் பல நிறங்கள் உள்ளது போல, இலங்கைப் பண்பாட்டிலும் பல பிரிவுகள் காணப்படுகின்றன. வானவில்லின் அழகு அதன் ஏழு நிறங்களாய் உருவாவது போல இலங்கையின் மானுட அழகு அதன் பல்லினப் பண்பாட்டால் உருவாகியுள்ளது. இந்த வகையிலே தான் 'லயம்' என்னும் இக் கலா நிகழ்ச்சியானது வானவில் வர்ணங்களெனவும் பெயர் பெற்றது. இலங்கை பல்லின மக்களின் கலைகளிடையே வேற்றுமைகளும் உண்டு. பொதுத் தன்மைகளும் உண்டு. இத்தகைய வேற்றுமைகளையும், பொதுத் தன்மைகளையும் கொண்டதுதான் பண்பாடாகிறது.

மண்ணோடு பிணைந்து வாழும் சாதாரண கிராமிய மக்களின் பண்பாட்டையும், கலைகலாசார விழுமியங்களையும் முக்கியத்துவப்படுத்தி நிகழ்த்தப்பட்ட இந்தக் கலை நிகழ்வானது மண்ணின் தாளங்களைப் (Rhythm of the soil) பெரும் கலைநயத்தோடும், கலைமெருகோடும் தந்து நின்றது. இது பத்துப் பெரும் பிரிவுகளின் கீழ் இருபத்தொன்பது நிகழ்ச்சிகளைத் தம்கண் கொண்டதாக உருவாக்கப்பட்டிருந்தது.

இந்த அரும் பெரும் அற்புதக் கலை நிகழ்ச்சியினை வடிவமைத்து, ஒழுங்கமைத்து தயாரித்துத் தந்தவர் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களாவார். இதற்கெல்லம் தோளோடு தோள் நின்றவர்களாக பீடாதிபதி திரு. பாலசுகுமார் அவர்களையும், திரு.அ.விமல்ராஜ் அவர்களையும் காணமுடிந்தது. இந்நிகழ்ச்சியானது

**கன்னிமுத்து வெல்லபதியான்**

சடங்கு சம்பிரதாயங்களில் இருந்து ஆரம்பித்து தொழிலுக்கு ஊடாகப் பொழுது போக்கிற்கு நகர்ந்து, கிராமிய ஆடல் பாடல்களை அறிமுகம் செய்து சாஸ்திரிய பரத ஆடல்வரை தொடர்ந்து சென்றது.

அதனைத் தொடர்ந்து இந் நிகழ்ச்சியானது நின்று விடாமல் தமிழரின் வடமோடி ஆட்டத்தாள லயத்துடன் சிங்கள மக்களின் கண்டிய நடனம், பாதரட்ட நடனம் என்பனவும், தமிழ் மக்களின் பரத நாட்டியம் தென்மோடி நடனம், வடமோடி நடனம் போன்றனவும் இஸ்லாமிய மக்களின் கழிகம்பு நடனம் என்பனவும் இறுதியிலே வானவில்லின் நிறங்கள் போல ஒன்றாக இணைவதனை வெகுசிறப்பாக வெளிக்காட்டியது. இந்த வகையில் கலையின் பல்வேறு பிரிவுகள் அனைத்தும் லயத்தில் இணைவததையும், லயமே சாஸ்வதமாக அமைவதையும் நோக்க முடிந்தது.

'லயம்' தம்கண் உள்வாங்கியிருந்த பத்துப் பெரும் பிரிவுகளாக பின்வருவன அமைந்திருந்தன.;

01. ''மக்களது இசைக் கருவிகளை அடித்தளமாகக் கொண்ட இன்னிய அணி.''

இந்த மகுடத்தின் கீழ் 'இது ஒரு பண்பாட்டு அணி' என்பதை விளக்குவதான நிகழ்சிசியும், ஆற்றுகைகளும் என இரு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அற்புதமாய் இருந்தது.

02. ''சடங்குப் பாடல்களும் ஆடல்களும்''

இதன் கீழ் ஊர்காவல் பண்ணல், கண்ணகையம்மன் குளிர்த்தி, மாரியம்மன் வீதியுலா, நடைக்காவடி ஆட்டக்காவடி, கத்தோலிக்க மக்களின் தவக்கால வியாகுலப் பிரசங்கம், கரகம் எனும் ஏழு சிறுசிறு நிகழ்ச்சிகள் இடம் பெற்றமை. அழகாக இருந்தது.

03. ''பறை முழக்கமும், மத்தள, உடுக்கு ஓசைகளும்''

இந்தத் தொனிப் பொருளின் கீழ் பறைமேள முழக்கமும், ஆட்டமும் இடம்பெற்றதோடு, மேளப் பேச்சும் என இருநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவை முரசுக்கலையான பறை மேளக்கலையின் முக்கியத்துவத்தினைப் பறைசாற்றுவதாய் அமைந்திருந்தன.

04. ''தொழிலும், தொழிற் பாடல்களும்''

இத்தலைப்பின் கீழ் விவசாயிகள் வயல் உழுதல், மீனவர்கள் மீன்பிடித்தல் முதலான தொழிற்காட்சிகளும், அவற்றுக்குச் சிறப்பூட்டுவதாக இவை சார்ந்த தொழிற் பாடல்களும் அமைந்திருந்தன.

05. ''பொழுதுபோக்கு-இசையும், விளையாட்டும்''

இந்த மகுடமானது விளையாட்டிசை, வேடிக்கை இசை, வசந்தன் பாடல், இஸ்லாமியரின் பக்கீர் பைத், இஸ்லாமியரின் திருக்கல்யாணப் பாடல்கள், இசை நாடகப் பாடல்கள் என்னும் ஆறு அரிய நிகழ்ச்சிகளைத் தாங்கி அழகு பெற்றது.

06. ''கிராமிய மக்களின் நடனங்கள்''

இது வசந்தன் ஆட்டம், மகிடி ஆட்டம், தென்மோடி ஆட்டம், வடமோடி ஆட்டம், கழிகம்பு ஆட்டம் என்னும் ஆட்டவகைகளைத் தம்கண் கொண்டு பார்ப்போர் அனைவரையும் பரவசப்படுத்தியது.

07. ''பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் வடமோடி நடனத்தை அடித்தளமாகக் கொண்டு தயாரித்த இராவணேசன் நாடகத்தில் இருந்து ஒரு காட்சி''

அந்தக் காட்சிதான் இராவ



ணன் சபாமண்டப வருகையாக அமைந்து எல்லோரையும் கவர்ந்தது.

08. ''தமிழரது சாஸ்திரிய பரத நடனம்'' என்னும் இந்தத் தாற்பரியத்தின் கீழ் 'தில்லானா' என்ற அற்புத நடனமானது நடைபெற்றது.

09. ''லயம்''

இதிலே வடமோடி, தென்மோடித் தாளலயங்களும் ஆட்டச் சிறப்புக்களும் இடம் பெற்றதோடு, வடமோடித் தாளத்தில் சிங்கள மக்களின் கண்டிய நடனம், பாதரட்ட நடனம், தமிழரின் பரத நடனம், இஸ்லாமியரின். கழிகம்பு ஆட்டம் என்பன இணையும் பாங்கும் கலை மெருகோடு நடைபெற்றன.

10. ''மங்களம்''

என்னும் மகுடத்தின் கீழ் மங்களப் பாடல்கள் முழங்கின.

இவ்வாறாக ஆரம்பம் முதல் இறுதி வரையான 'லயம்' தந்த பத்துப் பெரும் பிரிவுகளில் அடங்கிய 29 நிகழ்வுகளும் மண்ணின் தாளங்களாகவும், வானவில் வர்ணங்களாகவும் அமைந்து உன்னதம் பெற்றதனைக் காண முடிந்தது.

மேலும் இது வடிவமைப்பு, ஒழுங்கமைப்பு, தயாரிப்பு என அனைத்திலும் தனித்துவமும், முதன்மையும், முழுமையும் பெற்று விளங்கியமை சிறப்பம்சமாகும். தவிர; நமது பண்டைய பழம்பெரும் கலை கலாசார விழுமியங்களையும், அது சார்ந்த ரசனைகளையும் மறந்து சினிமாவிலும், தொலைக்காட்சியிலும் மூழ்கிப் போன மக்களுக்கு அருங்கலைகளையும், அவற்றின் தாற்பரியங்களையும் தனித்துவங்களையும் நினைவூட்டுவதாயும், அவற்றின் பால் கலாரசனைகளையும், ஈடுபாட்டினையும் தூண்டுவதாயும் 'லயம்' அமைந்திருந்தது. சாதிமத பேதம் எதுவும் அற்றமுறையிலே கலைகள் கலைகளாகவே மதிக்கப்பட வேண்டும். எந்த மதமெனினும் எந்த இனமெனினும் அவர்களது பண்பாட்டு மரபுகளும் கலை கலாசாரக் கோலங்களும் போற்றப்பட வேண்டும், அவை அனைத்தும் அழிந்தொழிந்து போகவிடாது கட்டிக் காக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துவதாயும் லயத்தினைக் காணமுடிந்தது.

இத்தனைக்கும் மேலாக இந்த லயம் என்னும் அரிய கலா நிகழ்ச்சியானது அருங்கலைகளின் பொக்கிஷமாகவும், அவற்றின் சங்கமமாகவும், இவற்றுக்கெல்லாம் உயிரும் உணர்வும் கொடுத்து வளர்ப்பதாகவும் விளங்கியமை வியக்கத்தக்கதாகும். மேலும் இது சமூக நலனை வளர்ப்பதாகவும்,சமரசம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றை ஏற்படுத்துவதாகவும், இன, மத ஐக்கியத்தை உருவாக்குவதாகவும், அனைத்து மக்களையும் கலைக்கு ஊடாக ஒன்றிணைப்பதாகவும் அமைந்து சிறப்புப் பெற்றது. முதல் நாள் விழா நிகழ்வுகளானது இந்த லயத்துடனே நிறைவு பெற்றது.இந்த வகையிலே நய முடனும், கலை மெருகுடனும், பண்பாட்டுச் சிறப்புகளுடனும் லயத்தினை வடிவமைத்து, ஒழுங்கமைத்து, உருவாக்கித்தந்த பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும், இதற்கெல்லாம் உதவியாக இருந்த பீடாதிபதி திரு.பாலசுகுமார் அவர்களும், திரு. அ.விமல்ராஜ் அவர்களும் பங்கு பற்றும், மாணவர்களும், விரிவுரையாளர்களும், மரபு வழிக்கலைஞர்களும், மேலதிக உதவியாளர்களும் என்றென்றுமே மதிக்கப்பட வேண்டியவர்களாகின்றனர்.

*(பார்வை தொடரும்......)*

# கராத்தே கலை கற்றலில் ஒரு போதும் பாதிப்பை ஏற்படுத்தாது

## சென்சி T.K கேந்திரமூர்த்தி



சென்சி T.K கேந்திரமூரத்தி (President Northeast Karate Federation, JKMO Chief instructor - Amparai District, Black Belt 4th Dan) அவர்கள் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் அறியப்பட்ட கராட்டிக்கலை போதனாசிரியர். இவர் 80களில் இருந்து இன்று வரை கராட்டிக் கலையை பயின்று, பயிற்றுவித்து வருகிறார். தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பல்வேறு போட்டிகளில் பங்குகொண்டு வெற்றியீட்டக்கூடிய அளவிற்கு எம் தாயக வீரர்களை உருவாக்கும் தனது முயற்சியில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றி வருகின்றார்.

திரு. கேந்திரமூர்த்தி அவர்களை ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு சார்பில் இவ் வாரம் நேர்காணகிறோம்.

**கேள்வி:-** தங்களது கராத்தே உலக பிரவேசம் பற்றி.....

**பதில்:-** 1980ல் மருதமுனையில் நடை பெற்ற ஒரு கராத்தே நிகழ்வைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதில் மிக இறுக்கமான உடல் அமைப்பைக் கொண்ட உயரமான பயிற்சி ஆசிரியர் ஒருவர் மிக லாவகமாகவும் விரைவாகவும் தனது உடலை இயக்கி கராத்தேயின் நட்பங்களை விளங்க வைத்துக் கொண்டு இருந்தார். அதைப் பார்த்தபோது எனக்கு ஆச்சரியமாகவும் ஆர்வமாகவும் இருந்தது. அப்போதே இவரிடமே இக்கலையைக் கற்க வேண்டும் என்ற எண்ணம் உருவானது. இவ்வுந்துதலால் 1980களில் அந்த ஆசிரியரிடம் கராத்தேக் கலையை பயில ஆரம்பித்தேன்.


அவர் தான் JKMOtpd (Japan Karate Maruyoshikai Organization) இலங்கைக்கான பிரதான போதனாசிரியரும், முன்னாள் இலங்கை கராத்தே சம்மேளனத் தலைவரும், ஆசிய கராத்தே நடுவர்களில் ஒருவருமான திரு இராமச்சந்திரன் அவர்கள். அன்று தொடக்கம் இன்றுவரை அவரே எம்மை வழி நடத்தி வருபவராவார்.

**கேள்வி:-** கராத்தே பழகுவோர்கள் முரட்டுத்தனமான சுபாவம் கொண்டவர்களாக அடிதடிக்காரர்களாக இருப்பார்கள் என்றொரு எண்ணப்பாங்கு எம்மக்கள் மத்தில் பொதுவாக காணப்படுகிறது. தங்களது அனுபவத்தின் ஊடாக இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** கராத்தேக் கலையை நாம் ஒரு புனிதக்கலை என்றே குறிப்பிடுகிறோம். இதில் தற்காப்பு என்பதற்கு அப்பால் மன ஒருமைப்பாட்டுக்கும், சகிப்புத் தன்மைக்கும், பொறுமைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கராத்தேக் கலையைப் பயில ஆரம்பிக்கும் கட்டத்தில் அல்லது அரைகுறையாக கற்கும் சந்தர்ப்பங்களில் ஒருவகை மன எழுச்சி ஏற்படுவது இயல்பே. எனினும் ஒரு சிறந்த ஆசிரியரிடம் முறையாகக் கராத்தே கலையைக்கற்கு ம் வீரர்களிடம் இத்தகைய இயல்புகள் எழவாய்ப்பு இல்லை.

எனது அனுபவத்தைப் பொறுத்த வரை எமது ஆசிரியர் எம்மை அவ்வாறே உருவாக்கினார். நாமும் எமது மாணவர்களை அவ்வாறே உருவாக்குகின்றோம். அவர்கள் மிகக் கட்டுப்பாடும் பொறுமையும் உள்ள மாணவர்களாகவே இருக்கிறார்கள். துணிச்சலும் தன்னம்பிக்கையும் கொண்ட இவர்கள் வலிந்து அடிதடிக்குப் போனதாகவோ அல்லது முரட்டுத்தனமாக நடந்து கொண்டதாகவோ நான் இது வரை கேள்விப்படவில்லை.

**கேள்வி:-** இதேவகையான மற்றுமொரு சந்தேகம் பெற்றோர்கள் மட்டத்தில் நிலவுகிறது. இத்தகைய தற்காப்பு கலைகளில் ஈடுபாடு கொண்ட மாணவர்கள் கல்வியில் பின் தங்கி



விடுவார்கள் என்ற அச்சம் காணப்படுகிறது. இது பற்றி தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:-** இக்கருத்து உண்மையானால், இன்று உலகிலே கராத்தேக் கலையில் முன்னணி வகிக்கும் யப்பானில் உள்ள மக்களெல்லோரும் முட்டாள்களாகவே இருந்திருப்பர். மேலும் எனது சொந்த அனுபவத்தை எடுத்துக் கொண்டால் என்னுடைய கறுப்புப் பட்டி மாணவர்களில் அநேகர் உயர் கல்வி கற்று பணி செய்பவர்கள். தமது மாணவப் பருவத்திலேயே இக்கலையை பயிலத் தொடங்கியவர்கள்.

### சுடரவன்

அதே வேளை கல்வியிலும் தமது திறமையை வெளிகாட்டியவர்கள். உதாரணமாக 2004ல் நடந்த சர்வதேச சொடோக் கான் (ISKA) சுற்றுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற எனது மாணவர் ஒரு பொறியியலாளர். அப்போட்டியில் வேறு பிரிவுகளில் வெள்ளிப் பதக்கம் பெற்றவர் ஒரு பட்டதாரி ஆசிரியர். தற்போது தொடர்ந்தும் தனது எம்.எஸ்.சி கற்கை நெறியை தொடர்ந்து கொண்டு இருப்பவர். வெண்கலப் பதக்கம் பெற்றவர் கலைப்பட்டதாரி. தனியார் நிறுவனத்தில் பணியாற்றுபவர்.

எனவே, கராத்தே கல்விக்கு தடையாக உள்ளது என்ற கருத்து முற்றிலும் உண்மைக்கு புறம்பானதே. மாறாக அது மாணவர்களிடையே மன ஒரு நிலைப்படுத்தல், ஞாபக சக்தி சுறுசுறுப்பு என்பவற்றை வளர்க்கிறது. மேலும் பல்வகையான நோய்களை இல்லாமல் செய்வதற்கு அல்லது கட் டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு கராத்தேக் கலை உகந்ததாகும். இத்தகைய கலை கற்றலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறுவது பொருத்தமற்றது.

**கேள்வி:-** தேசிய அளவில் ஒப்பிடும் போது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கராத்தேக்கலையின் நிலை எவ்வாறுள்ளது?

**பதில்:-** நெருக்கடியான சூழல், வாய்ப்புக்கள் மறுப்பு, வசதி குறைவு என்பவற்றின் மத்தியிலும் பொதுவாக எமது தாயக மாணவர்கள் வெளிப்படுத்தும் திறனாற்றல் பாராட்டுக்குரியது.

தேசிய அளவில் மட்டுமன்றி இங்கு நடைபெறும் சர்வதேச அளவி லான (ISKA) போட்டிகளிலும் எமது அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் - குறிப்பாக கனிஷ்ட வீரர்கள், இலங்கையில் உள்ள எந்த மாவட்டத் தயும் விட முன்னிலை வகிக்கின்றனர்

(தொடரும்..........)

**1. சௌந்தரராஜா சோபனராஜ்**

2004 ஆம் ஆண்டு சர்வதேச சோட்டேக்கான் கராத்தேச் சுற்றுப் போட்டி (ISKA)
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம்

2004 ஆம் ஆண்டு தேசிய கராத்தேச் சுற்றுப் போட்டி (9 வயது)
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம்
குமிற்றி (Kumite) ~ தங்கப்பதக்கம்

2005 ஆம் ஆண்டு சர்வதேச சோட்டேக்கான் கராத்தேச் சுற்றுப் போட்டி (9 வயது)
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம்

**2 கேந்திரமூர்த்தி சாரங்கன்**

2003 ஆம் ஆண்டு சர்வதேச சோட்டேக்கான் கராத்தேச் சுற்றுப் போட்டி (9 வயது)
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம்

2005 ஆம் ஆண்டு சர்வதேச சோட்டேக்கான் கராத்தேச் சுற்றுப் போட்டி (9 வயது)
காட்டா (Kata) ~ வெண்கலப்பதக்கம்
குமிற்றி (Kumite) ~ வெண்கலப்பதக்கம்

**3. சௌந்தரராஜா பாலுராஜ்**

2004 ஆம் ஆண்டு சர்வதேச சோட்டேக்கான் கராத்தேச் சுற்றுப் போட்டி
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம் (13 வயது)
குமிற்றி (Kumite) ~ தங்கப்பதக்கம் (13 வயது)

2004 ஆம் ஆண்டு தேசிய கராத்தேச் சுற்றுப் போட்டி
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம் (13 வயது)

2005 ஆம் ஆண்டு சர்வதேச சோட்டேக்கான் கராத்தேச் சுற்றுப் போட்டி
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம் (13 வயது)

**4. கேந்திரமூர்த்தி ராஜேந்திரப்பிரசாத்**

2000 ஆம் ஆண்டு தேசிய கராத்தேச் சுற்றுப் போட்டி (9வயது)
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம்

2002 ஆம் ஆண்டு தேசிய கராத்தேச் சுற்றுப் போட்டி (9வயது)
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம்
குமிற்றி (Kumite) ~ வெள்ளிப்பதக்கம்.

2003 ஆம் ஆண்டு தேசிய கராத்தேச் சுற்றுப் போட்டி (9வயது)
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம்

சர்வதேச சோட்டேக்கான் கராத்தேச் சுற்றுப் போட்டி (10வயது)
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம்
குமிற்றி (Kumite) ~ வெண்கலப்பதக்கம்

2004 ஆம் ஆண்டு
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம் (11வயது)
குமிற்றி (Kumite) ~ வெண்கலப்பதக்கம்.

2005 ஆம் ஆண்டு தேசிய கராத்தேச் சுற்றுச் போட்டி
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம் (11வயது)

**5. சௌந்தரராஜா கோமன்ராஜ்**

2004 ஆம் ஆண்டு தேசிய கராத்தேச் சுற்றுப் போட்டி
காட்டா (Kata) ~ தங்கப்பதக்கம் (17வயது)

**6. சௌந்தரராஜா சரத்ராஜ்**

2005 ஆம் ஆண்டு தேசிய கராத்தேச் சுற்றுப் போட்டி (19 வயது)
காட்டா (Kata) ~ வெண்கலப்பதக்கம்


---

ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாரம் தோறும் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் போட்டிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் ஒரு அதிஸ்டசாலிக்கு 250 ரூபா பணப்பரிசும், பாராட்டுப் பெறும் 10 அதிஸ்டசாலிகளின் பெயர் விபரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

*விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:- 11-07-2005*

## குறுக்கெழுத்துப் போட்டி 58

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 58**
**ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**




### இடமிருந்து வலம்

01. இயல், இசை, நாடகம் மூன்றினையும் சேர்த்துக் குறிப்பது.
05. நோன்பு.
07. வெளிச்சத்தின் எதிர் (குழம்பியுள்ளது)
08. கிணற்றில் நீரை இலகுவாக அள்ள உதவுவது.
10. தலை.
11. திருநெல்வேலி இந்த இனிப்புக்குப் பெயர் போனது (திரும்பியுள்ளது)
13. அமைப்பு.
14. அந்த நாட்களில் மன்னரின் அறிவித்தலை செய்வதற்கு இதை அடித்தே செய்வார்கள். (குழம்பியுள்ளது)
16. இந்தச்சனி ஒருவருக்குப் பிடித்துவிட்டால் அவருக்குத் துன்பம் தான் தொடர்கதை
18. மலையை இப்படியும் அழைப்பர்

### மேலிருந்து கீழ்

01. ஆறும் கடலும் சங்கமமாகும் இடம்.
02. நெல் குற்றும் போது அரிசி உமியுடன் இதுவும் வரும்
03. தெளிவற்ற தன்மை.
04. சில பத்திரிகைகளின் ஞாயிறு வெளியீடு இவ்வாறு அழைக்கப்படும் (தலைகீழ்)
06. விரியும் என்பதன் எதிர்பதம் (குழம்பியுள்ளது)
09. இவரின் கதைகள் நகைச்சுவையாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் இருக்கும்
12. பெண் தெய்வம்
15. பெண்களின் கழுத்தைக் கூட கடலினடியில் கிடக்கும் இந்தப் பொருளுக்கு ஒப்பிடுவர்
17. திருவள்ளுவர் அருளியது. (இறுதியெழுத்தை இழந்துள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி 56 ற் கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பக்குவம்
02. திரவம்
07. தகரை
09. பர(ம்)
10. (கா)லன்
11. அம்பு
12. கம்சம்
14. அரும்பு
16. கல்
17. துறவி
18. முனி

**மேலிருந்து கீழ்**

01. பரதன்
02. குதிரை
03. வர(ம்)
04. சம்பவம்
06. அரம்
08. கலகம்
11. அன்பு
13. துருவம்
14. புரவி
15. முல்லா

### பரிசு பெறும் அதிஸ்டசாலி

எஸ். ரகுவரன்
இல. 111/A, விவேகானந்தர் வீதி,
நற்பிட்டிமுனை - 7, கல்முனை

### பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. தெ.சிவநந்தினி
லிங்கபுரம், கிளிவெட்டி
மூதூர்

02. த.அலோசினி
நாவற்காடு, மட்டக்களப்பு

03. வ.இளநிதி
மணிமேகலை இல்லம்
வந்தாறுமூலை

04. ஏ.எம்.அல். அப்ஸர்
282, ஓடாவியார் வீதி, ஏறாவூர் -02

05. த.நாகையா
நியூ ராணி ஸ்ரூடியோ
கல்முனை

06. ஞா.நிதர்சனா
மண்டூர் - 02

07. ஆர். உதயகுமார்,
41, புதுநகர், மட்டக்களப்பு

08. ச. சசிகலா
குறுமண்வெளி 11, களுவாஞ்சிகுடி

09. சௌ. கிருஷா பிரியபாலி
வேம்படி வீதி,
களுதாவளை - 04

10. நா.ஹேமானந்தி
பாடசாலை வீதி,
சேனைக்குடியிருப்பு-1
கல்முனை.

# ஆசிரியர் சேவைக்கான பதவி உயர்வு
# ஏற்பாடுகளும் தற்போதைய உள்ளீர்ப்பு விளக்கமும்

| வகுப்பு/தரங்களின் வகை | ஆசிரியர் வகை | புள்ளிகள் சேவைக்காலம் | சேவைக் காலப் பயிற்சி | தொழில்சார் மீளாய்வு | தடைதாண்டல் பரீட்சை ஏனைய தேவை | கட்டாய சேவை |
|---|---|---|---|---|---|---|
| 3ம் வகுப்பு 11ல் உள்ளவர் 3ம் வகுப்பு 1 பதவி உயர்வு பெற | பயிற்றப் படாதவர்கள் | —— | 150 மணித்தியாலம் | —— | வெளிவாரிப் பட்டம் அல்லது ஆசிரிய பயிற்சி | —— |
| 3ம் வகுப்பு 1ல் உள்ளவர்கள் 2ம் வகுப்பு தரம் 11க்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்ள | பயிற்றப்பட்ட டிப்ளோமா அதற்கு சமமான தகமை பெற்றவர்கள் | 3-1ல் 5புள்ளிகள் | 150 மணித்தியாலம் | —— | —— | குறித்த கஷ்டப்பிரதேச பாடசாலையில் 2வருடசேவை |
| | பட்டதாரிகள் அல்லது அதற்கு சமமான தகமை பெற்றோர் | 3-1ல் 5புள்ளிகள் | —— | அல்லது | பட்டப் பின் கல்வி டிப்ளோமா | குறிப்பிட்ட கஷ்டப்பிரதேச பாடசாலையில் 2வருட கட்டாய சேவை |
| 2ம் வகுப்பு 11ல் உள்ளவர்கள் 2ம் வகுப்பு தரம் 1 க்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்ள | பயிற்றப்பட்ட/டிப்ளோமா பெற்றோர் | 2-11ல் 10புள்ளிகள் | 06 வாரங்கள் | தொழில்சார் மீளாய்வு | —— | குறித்த பாடசாலையில் 2வருட கட்டாய சேவை |
| | பட்டதாரிகள் அதற்கு சமமானதகமையுள்ளோர் | 2-11ல் 10புள்ளிகள் | 150 மணித்தியாலங்கள் | தொழிசார் மீளாய்வு | பட்டப்பின் கல்வி டிப்ளோமா | குறித்த பாடசாலையில் கட்டாய 2வருட சேவை |
| 2ம் வகுப்பு தரம் 1ல் இருந்து வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்ள | பயிற்றப்பட்ட/டிப்ளோமா பெற்றோர் | 2-1ல் 5புள்ளிகள் | 75 மணித்தியாலங்கள் | தொழிர்சார் மீளாய்வு | தடைதாண்டல் பரீட்சை | —— |
| | தொழில் தகமைகள் பெற்ற பட்டதாரிகள்/ அதற்கு சமமான தகமை பெற்றோர். | 2-1ல் 5புள்ளிகள் | 75 மணித்தியாலங்கள் | தொழிர்சார் மீளாய்வு | தடைதாண்டல் பரீட்சை அல்லது கல்வியில் முதுமாணிப்பட்டம் | —— |

இலங்கை ஆசிரியர் சேவை 06.10.1994 முதல் அமுலாக்கப்படுகின்ற போதிலும் கடந்த 10 வருடகாலத்தினுள் பல்வேறு திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டமையால் பல பிரமாணங்கள் தொடர்பில் ஆசிரியர்களுக்கான சரியான விளக்கம் போதாமலேயுள்ளது. இதனைத் தெளிவுபடுத்தும் வகையிலும் பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான இதுவரை வழங்கப்பட்ட சலுகைகளையும் எதிர்காலத்தில் எவ்வாறான முறையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன என்பதை தெளிவுபடுத்தும் நோக்கிலும் இக்கட்டுரை வரையப்படுகிறது.

இலங்கையில் கடமையாற்றும் 02 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு பல்வேறு கட்டங்களிலும் ஆசிரியர் தொழிற் சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் மற்றும் அரசியல்வாதிகளுடனான சந்திப்புக்களின் மூலமுமே 06.10.1994ம் ஆண்டு முதல் செயற்படும் வகையில் இச்சேவை கொண்டுவரப்பட்டது. இச்சேவையினுள் மூன்று வகுப்புக்களும், 5 தரங்களும் காணப்படுகின்றன. இவைகளுக்கு ஆசிரியர்கள் எவ்வாறு நியமனம் பெறுவார்கள் என்பதை இப்போது நோக்குவோம்.

3ம் வகுப்பின் 11ம் தரத்திற்கு க.பொ.த (சா.த) அல்லது க.பொ.த (உ.த) தகமையுள்ள பயிற்றப்படாத ஆசிரியர்கள் நியமனம் பெறுவர். அதே போன்று3ம் வகுப்பின் 1ம் தரத்துக்கு பட்டதாரிகள் முதல் நியமனம் பெறுவர் இவ்விரண்டு தரங்களிலுமே முதல் நியமனம் இடம் பெறுவதுடன் அடுத்தடுத்த தரங்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றது.

3ம் வகுப்பின் 11ம் தரத்திற்கு நியமனம் பெறும் க.பொ.த தகைமைகள் கொண்டவர்கள் ஆசிரியர் பயிற்சியை முடித்துக் கொண்டதும் 3ம் வகுப்பின் 1ம் வகுப்புக்கு பதவி உயர்த்தப்படுவர். அதே போன்று பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாவைப் பூர்த்தி செய்யும் பட்டதாரிகள் 3ம் வகுப்பு 1ம் தரத்திலிருந்து 2ம் வகுப்பின் 11ம் தரத்துக்கு நியமனம் பெறுவர். அல்லது 3ம் வகுப்பு 11 தரத்திலுள்ளவர்கள் 5 வருட சேவையுடனும் 3ம் வகுப்பு 1ம் தரத்திலுள்ள பட்டதாரிகளும் அதற்கு சமமான தகைமையுள்ளவர்களும் 5 வருட சேவையுடன் அடுத்த தரத்துக்கு பதவி உயர்வு பெறுவர். இதனைவிட ஏனைய தரங்களுக்கான பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ள இன்னும் பல தேவைகளையும் பூர்த்தி செய்வதன் மூலமே பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் இதன்படி ஆசிரியர் சேவையின் பதவி உயர்வு பெறத் தேவையான தேவைப்பாடுகளை மேலுள்ள அட்டவணை மூலம் ஒரே பார்வையில் நோக்குவோம்.

மேற்படி அட்டவணையின்படி அவதானிக்கும் போது ஒரு தரத்திலிருந்து அடுத்த தரத்துக்குச் செல்ல பல தேவைகள் ஈடு செய்யப்பட வேண்டியுள்ளதைக் காணலாம். இனி தற்போது வெளியாகியுள்ள சுற்றறிக்கை பற்றிய புதிய உள்ளீர்புத் திட்டம் பற்றி அவதானிப்போமாயின்.

98 வீதமான ஆசிரியர்கட்கு சம்பள உயர்வையும், 65 வீதமான ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகளையும் பெற்றுக்கொள்ள வகைசெய்துள்ளதுடன் 06.10.1994ல் கொண்டுவரப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையில் நிலவிய பல குறைபாடுகளையும் போக்கியுள்ளதாக இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு.

**01. 50வயது தடைநீக்கம்**

இலங்கை ஆசிரியர் சேவை 2-1ல் இருந்து வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்வுபெற என அட்டவணையில் குறிப்பிட்ட தேவைகளுடன் 50வயதும் அடைய வேண்டும். இந்த 50வயதுத் தடை இனி எப்போதுமே இருக்க மாட்டது எனக் கூறப்பட்டுள்ளது.

**02. புள்ளியடிப்படை பதவி உயர்வு**

31.12.2004 வரையும் ஏனைய சகல தேவைப்பாடுகளும் நீக்கப்படுவதுடன் புள்ளியடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது வகுப்பு ஒன்றுக்கு அல்லது ஏதாவது தரத்திலிருந்து அடுத்த தரத்துக்கு பதவி உயர்வுபெற கீழ் வருகின்ற நிபந்தனைகளை நீக்கி பதவி உயர்வு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

A. 150 மணித்தியாலம் அல்லது 75 மணித்தியால சேவைக்கால பயிற்சி நீக்கம்.

B. தொழில்சார் மதிப்பீடு நீக்கம்.

C. 2 வருட கஷ்டப்பிரதேச பாடசாலைச் சேவை நீக்கம்.

D. தடைதாண்டல் (E.B) பரீட்சை நீக்கம்.

**இ.மகேசன்**

**03. புள்ளி வழங்கும் முறையில் மாற்றம்.**

A. பயிற்றப்படாத ஆசிரியர்களின் இரு வருட சேவைக்காலத்துக்கு 1 புள்ளி வீதம் வழங்கி எஞ்சிய காலம் 12 மாதங்களுக்கு மேலாயின் ஒரு புள்ளியும் வழங்கப்படும்.

B. பட்டதாரிப் பயிலுனர், பட்டதாரி, பயிற்றப்பட்ட டிப்ளோமா பெற்றவர்கட்கு ஒருவருடதுக்கு 1புள்ளி வீதம் வழங்கி எஞ்சிய 6மாதகாலத்துக்கு ஒரு புள்ளி.

C. விசேட சித்திபெற்ற பட்டதாரிகள், கல்விமாணிப்பட்டம் பெற்ற பட்டதாரிகள், பட்டப்பின் கல்வி டிப்ளோமா முடித்தவர்கள், பயிற்றப்பட்ட பட்டதாரிகள், விஞ்ஞானம், கணிதம், விவசாயம், ஆங்கிலம், கணனிக்கல்வி போன்ற பாடங்களில் விசேட பட்டம் பெற்றவர்கள் போன்றவர்களுக்கு 06.10.1994க்கு முன்பு ஒருவருட சேவைக்கு இரு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

D. பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுக்கு ஒரு புள்ளி.

**04. பதவி உயர்வு வழங்கும் முறை**

A. இலங்கை ஆசிரியர் சேவை 3-11 க்குப் பதவி உயர்வு பெற 06.10.1994ம் திகதிக்கு முன்னராக பயிலுனர் காலம் யாவும் பயிற்றப்படாத ஆசிரியர் சேவைக்காலமாக கருதி ஆசிரியர் சேவை 3-11க்கு உள்வாங்கல்.

B. 3-11ல் இருந்து 3-1க்கு பதவி உயர்வுபெற பயிற்றப்படாத சேவைக்காலத்தில் 5புள்ளிகள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி அல்லது பயிற்றப் பட்டச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி முதல் 3-1க்கு நியமனம் பெறுவர்.

C. ஆசிரியர்சேவை 2-11க்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்ள சேவைக்காலம் முழுவதும் 10புள்ளிகள் அல்லது 3-1ல் 5 புள்ளிகள் அல்லது பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெற்றதிகதி அல்லது முதுமாணிப்பட்டம் பெற்ற திகதி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர் பட்டம் பெற்றதிகதி முதல் 2-11க்கு பதவி உயர்வு பெறுவர்.

D. ஆசிரியர் சேவை 2-1க்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்ள சேவைக் காலம் முழுவதும் 15புள்ளிகள் அல்லது 2-11ல் 10புள்ளிகள் பெற்றவர்கள்

E. ஆசிரியர் சேவை வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்வு பெற சேவைக்காலம் முழுவதும் 20 புள்ளிகள் அல்லது 2-1ல் 5 புள்ளிகள் நிறைவு செய்தவர்கள் வகுப்பு ஒன்றுக்கு ஏனைய தேவைகள் இன்றி பதவி உயர்த்தப்படுவர்.

**05. சம்பள நிலுவைகள் இல்லை**

பதவி உயர்வுகள் புள்ளிகளினடிப்படையில் வழங்கினாலும் அதற்கான சம்பள நிலுவைகள் 31-12-2004ம் திகதிவரை வழங்கப்படமாட்டது. 01-01-2005ம் திகதிக்கு முதல்சம்பள நிலுவைகள் வழங்கப்படும்.

**06. டிப்ளோமாதாரிகளுக்கான நன்மைகள்.**

2 வருட விவசாய, மனையியல் டிப்ளோமா முடிந்தவர்கள் 3வருட சங்கீத, நடன, சித்திர டிப்ளோமா முடித்தவர்கள் அத்திகதியிலிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகக் கணிக்கப்படுவர்.

**07. 06.10.1994க்கு முன்பு பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெறாத பட்டதாரிகள்.**

06.10.1994க்கு முன்பு பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெறாத பட்டதாரிகள் அந்தத் திகதியில் 45வயது அல்லது அதற்கு கூடிய வயது அடைந்திருப்பின் அவர்கள் தொழில் தகமை உடையவர்களாகக் கருதப்பட்டு ஆசிரியர் சேவையினுள் உள்வாங்கப்படுவர்.

மேற் கூறப்பட்டவாறு புதிய சுற்றறிக்கை மூலம் நன்மைகள் கிடைக்கவுள்ளதுடன் எதிர்காலத்தில் அதாவது 31.12.2004ம் திகதிக்குப் பின்பு சலுகைகள் எதுவுமின்றி ஆசிரியர் சேவையினுள் உள்வாங்கவென குறிப்பிடப்பட்ட சகல தேவைகளும் பூர்த்தி செய்யபடும் போதே பதவி உயர்வுகிடைக்கும் எனவும் கூறப்படுகிறது.

இருப்பினும் இந்நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட ஆசிரியர் சங்கங்கள் தொடர்ந்து முயற்சிகள் எடுக்கும் என்ற நம்பிக்கையுண்டு. அதற்கு முன்பு ஆசிரியர் சமூகம் வெளிக்காட்ட வேண்டிய அவசியமும் காணப்படுகிறது.

## சவால்களைத் தாண்டுமா......

களும் உடன்படிக்கை கைச்சாத்திட்டதற்குப் பின் தொடர்ச்சியான தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு பல்வேறு முனைகளாலும் பலத்த சவால்களையும், சோதனைகளையும், தடைகளையும் தாண்டித்தான் இந்தக் கட்டமைப்பு தமது பணிகளை முன்னெடுக்க முடியும். இதனை முன்கொண்டு செல்வதற்கு போர் நிறுத்த உடன்படிக்கை பிரதானமானதாகும். இதனைச் செவ்வனே நடைமுறைப்படுத்துவதுடன் தேச விரோத ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு மக்களுக்கு இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் நிவாரண நிதிப் பகிர்வுகள் தடையின்றிக் கிடைப்பதற்கான வழிமுறைகளையும் மேற்கொள்ளும் போதுதான் இதில் நம்பிக்கை கொள்ள முடியும்.

இதேவேளை சுனாமிப் பொதுக்கட்டமைப்பு நிறுவப்பட்டதால் தமிழினம் சமாதானம் கிடைத்து விட்டதாகக் கருதிவிடக்கூடாது. ஏனெனில் கடந்த போர்க் காலத்தின் போது தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்கள், துன்பங்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்ற வாழ்க்கையைச் சீர்படுத்துவதற்கான திட்டங்கள் எல்லாம் இந்த சுனாமிப் பொதுக்கட்டமைப்பினால் மறைக்கப்பட்டு சமாதானச் சூழலை உருவாக்கி விட்டது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதியும் பேரினவாதிகளும் முனைகின்றனர். எனவே தமிழினம் இந்த மாயை வலை வீச்சில் மூழ்கிவிடாது அவதானிப்புடன் இருப்பது அவசியம்.

ஆறாவது நிறம் செம்மஞ்சள்



# வானவில்லே!
# ஒரு கவிதை கேளு........

என்.ஏ.தீரன்

அதிவிடியல் செம்மஞ்சள். அந்தி வானம் செம்மஞ்சள்... மஞ்சள் பூசி மையல் கொள்ளும் மங்கையர் தம் நாணமுறு கன்னங்கள் செம்மஞ்சள். எம்மஞ்சள் என்றாலும் அம்மஞ்சள் செம்மஞ்சள் போல் அம்சமாயில்லை.

ஆரெஞ்ச், பாப்பாளி, இலந்தை, மாம்பழம், கரட், பூசணி, விளா, அன்னாசி என்பன செம்மஞ்சள் பழங்கள். இவற்றிலுள்ள 'க்ரை ப்போட்ளான்ரின' 'அல்பா' புற்றுநோயையும் சற்றே குணமாக்கும். குருதி விருத்தி பெறும்.. நரம்புகள் முறுகேறும்........

செம்மஞ்சள் பட்டும், செஞ்சாந்துப் பொட்டும் 'இழுக்குதடி என்னை.....'என இழுபட்டான் அவினாசிமணிக் கவிஞன்..... 'ஆரஞ்சுக் கன்னமோ... அழகு வண்ணக் கலரோ....' என வாய்பிளந்தான் கவிகாமுப் புலவன்...

இளம்மஞ்சள் நிறத்தில், செம்மஞ்சள் மலர்கள் பூத்துச் சிதறிய ஸல்வார்ஹமீஸ் அணிந்து செம்மஞ்சள் 'ஸோல்' தோள் தழுவி மேலேறி கார்க்குழல் மறைத்து கூர்முகவழகை மேலு மோர்படி கூட்ட ஆக்கிலா தயாரானாள். இன்று முதல் வேலை தினம்.

'வாப்பா.....நான் ரெடி' என்றாள்.

உம்மாவும், வாப்பவும் அவள் எதிர் நின்றனர்.... பசி நெருப்பில் வயிறெரிந்து சேமித்துப் படிப்பித்து நோயுற்று, உருச் சிறுத்த உருவங்கள்... எல்லாம் இவளின் பிரகாசத்திற்காக தம்மை உருகு திரியாக்கிய பெற்றோர்.. ஆக்கிலாவுக்காக.....!

'அல்லாஹ்ட காவல்.... மகள்... கவனம்...'

'பிஸ்மில்லாஹ்...'

வலது பாதம் முதலில் வைத்து சடுதியில் வீதியில் பாதியில் இறங்கித் திரும்பி, மஞ்சள் பூக்குடை விரித்துச் சிறிதாய்ப் புன்னகைத்து.... திரும்பியும் பாராமல் விரைந்தாள்

ஆக்கிலா... எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறும் இந்நாள். நன்நாள்.. கன்நாள், இப் பெண்ணாள் காத்திருந்த பொன்நாள்...... இன்று முதல் வேலை நாள்.

பேரூந்து தரிப்பிடத்தில் தயார் நிலையில் செம்மஞ்சள் நிற மட்டக்களப்பு பஸ்.. உள்ளேறினாள்... மெல்லேறினாள்.. இரட்டை ஆசனம் வேண்டிப் பெற்றாள்.. சிட்டு காத்திருப்பாள் காரைதீவில்...

அரைமணி நேரம் ஆள்தேடி.. நிரப்பி.. அடுக்கி பதுங்கித் தவழ்ந்து காலை எட்டைந்து தாண்டியபோது பாண்டிருப்பில் ஆக்கிலா வேண்டியபடி பத்தினிக் கோயில் பதி தாண்டியதும் அருகில் பேரூந்து சற்று தரிக்க,

சிறுபிறை நெற்றிப் பொட்டுடன் மஞ்சள் சுடிதார் செட்டுடன் பேரூந்தில் தாவினாள் சிட்டுக் கமலினி. ஆக்களிடை ஆக்கிலாவைத் தேடினாள்.........

'ஷ்ஷ்ஷ்... கமலீ.. இங்கே வா...' வரிசையிடையிருந்தாள் ஆக்கிலா

'ஷ்ஷ்ஷ்...அப்பாடா.. அங்கேயா..? நெரிசலிடையுட் புகுந்தாள் கமலினி.

'குட்மோனிர்னிங் ஆர்க்கீ..'

'ஸேம் ட்டு யூ காக்கீ..'

மறுபடியும் பேரூந்து பேரூர் பெயர்ந்தது. எந்நேரமும் எதுவும் நடக்கலாமெனும் போர்க் காலம்... பிணங்கள் தின்னும் பேய்க்காலம்.. முக்காலும் பயணிகள் முகங்களில் சாக்காலம் நோக்காலம். மறுபடி சோதனைச் சாவடிகள்... சோனையிடல்கள்.. அதிரடிப்படைகள்... கவனம் மிதிவெடிகள்... இடையிடையே துணைப்படைகள்.. தூரேகத்தின் அடிப்படைகள்... இறங்கி, நடந்து, ஏறிக்கடந்து, ஆடி நடந்து, ஆறடி ஊர்ந்து, அடைந்தது மட்டக்களப்பு ஊரு. பேரூந்து........

'அப்பாடா... இறங்கலாமினி... கமலினி..'

'ஆமாண்டா... நமக்கினி... நடையினி...'

நடந்தனர். அடைந்தனர். நுழைந்தனர்.. பிராந்திய முகாமையாளார் பிரத்தியேக அறை போய்ச் சேர்ந்தனர். ஏற்கனவே அங்கு இரா மக்கிருஸ்ணன் காத்திருந்தான். செம்மஞ்சள் ஐரோப்பியர் இருந்தார். இவர்களைக் கண்டு மகிழ்ந்தார்.

'வெல்கம் கேர்ள்ஸ்...'என்றார். கை தந்தார்.. குலுக்கினார்.. ஆங்கிலத்தைக் கிலுக்கினார். வாழ்த்தினார். சொன்னார்.

'என் பெயர் மேக்மில்லன் பரூச்சர்... மேற்கு ஜர்மனில் பருலின் சிற்றி.... திருமணமாகி பின் பிரிந்தேன்...மனைவி இந்தியவுடன் வாழ்கிறாள்... விட்டுவிட்டு ஜீ.கே. வங்கியில் அஸிஸ்டன்ற் கிளரிக்கலில் சேர்ந்தேன்... முழுமூச்சாக உழைத்தேன்.. எல்லா பரீட்சையும் பாஸ் செய்தேன். இப்ப பிராந்தியங்களின் இணைப்பு முகாமையாளராக இருக்கிறேன்.. பிரத்தியேகமாக எனக்கு மட்டும் 'கட்டர்பில்லர்' என்ற குட்டி விமானம் தந்திருக்கிறது வங்கி..

கொஞ்சம் பேச்சை நிறுத்தி இவர்கள் மூவரையும் பார்த்தார் அழுத்தி, மறுபடி ஆரம்பித்தார்.........

'நமது வங்கி உலகின் மூன்றாவது வர்த்தக வங்கி.. இரண்டு தடவைகள் ஐ.நா விருது வென்றது. நியூயோர்க், இலண்டன், சிங்கப்பூர், ஒஸ்ட்ரேலியா, ஜேர்மன், கனடாவில் பயிற்சி முகாம்களை நடத்துகிறது. ஐயாயிரம் கோடி அமெரிக்கா டொலர்களை முதலீடாக வைத்து உலக வர்த்தகத்தைக் கட்டிப் போட்டிருக்கிறது.... உங்கள் மூவருக்கும் பிராந்தியங்களின் உதவிப் பயிற்சி முகாமையாளராகச் செயற்பட பயிற்சியளிக்கும் ஏழு வாரம்... பின் பரீட்சை... அதி கடினம்.. மூளையின் 'பின்ற்ரேஸன்'கள் வெடிக்குமளவுக்கு இருக்கும்... சித்தியடைந்தால் பதவிச் சொர்க்கம். சித்தியடையாவிட்டால் பயிற்சியோடு சாதாரண கிளரிக்கல்... எல்லாச் செலவுகளும் வங்கி பொறுப்பேற்கும்... அண்டவேர் உட்பட....

என்று வெடிப்பொலிச் சிரித்தார்... ஆளுக்கொரு செம்மஞ்சள் பொன்னெழுத்தில் பொறித்த பைல்கள் தந்தார். சிக்கலான வார்த்தைகள் கொண்ட ஸீ.டீக்கள் தந்தார்... உடனடிப்பணம் பெறும் மணிக்கார்ட்டுக்கள் தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியில் தந்தார். மறுபடி சொன்னார்..

'இன்றைய உங்கள் மகிழ்ச்சியான தினத்தை முன்னிட்டு என்னோடு பகலுணவு அருந்த அழைக்கிறேன்.. அதுவரை இந்த வெப் தளத்தைப் பார்வையிடுங்கள்... உள்ளவற்றை மூளை உள்ளவரை உள்வாங்குங்கள்.. இதில் ஒப்பமிடுங்கள்... நன்றி...'

உடன் விடை பெற்றுச் சென்று விட்டார்... சீருடைப் பணியாள் உயர்ரக குளிர் பானமும், மென் போதை மதுபானமும், கிழங்குச் சீவல்களும் கொணர்ந்தான்... பணிவுடன் வைத்தான்... சென்றான். ஆக்கிலாவும் கமலினியும், இராமக்கிருஸ்ணனும் திகைப்பான கனவுலகில் இலயித்துப் போய் சில நிமிடங்கள் பேச மறந்திருந்தனர்....

'... ... ...' என்று கேட்டாள் கமலினி.

'... ... ...' என்றாள் ஆக்கிலா

ஆக்கிலா கமலினியுடன் கேட்போர் கூடத்திற்கு வந்தாள்... அங்கிருந்து கணணியில் ஜீ.கே வங்கி இணையத்தளத்தைப் பார்வையிட்டனர்... ஆரம்ப வரலாறுகள்... மூலதனங்கள்.. சர்வதேச வர்த்தகத்தில் சிக்கலான ஆங்கிலச் சொற்கள்... தாண்டிய தடைக்கற்கள்.. கொடுகடன், படுகடன், எடுகடன்.. உடனுக்குடன்... விபரங்கள்... ஊழியர் சேம நலன்கள்.. பயிற்சி அறிமுகங்கள்... கால், அரை, இறுதி ஆண்டறிக்கைகள்... திகைப்பான வங்கி உலகிலிருந்து மீண்ட போது பகலுணவுக்கு அழைப்பு வந்தது.. ஏ.ஆர்.ஓ வுடன் மினக்கெட்டுச் சாப்பிட்டு இறுதி உபதேசங்கள் பெற்று நாளைய கடமை



பொறுப் பேற்று நான்கு மணிக்கு எல்லாம் முடிந்தன......

'கமலினி இனி போகலாமினி...'

'வாருமினி... பஸ்ஸேதும் வருமினி..'

வங்கியை விட்டு வெளியே வர அலறி ஓடின வாகனங்கள்...குளறி ஓடினர் சனங்கள்... அமளிதுமளிப்பட்டது நகரம்.. அடித்திழுத்துப் பூட்டப்பட்டன கடைகள்... மறிக்கப்பட்டன பொலிஸ் தடைகள். விரைந்தன அதிரடிப்படைகள்.. ஏன்.. என்ன..., இல்லை விடைகள்... தற்காப்பு தேடி ஓடும் சனங்களில் பொற்காப்பு அணிந்தோடிய பெண் ஒருத்தியை நிறுத்திய போது அவள் சொற்கோர்வையின்றியே சொல்லித் தடைதாண்டி ஓடினாள்.........

'பாலத்தடியில கண்ணிவெடியில... அதிரடியில ஏழுபேர் போல... பெடியளில மூணு பேரு இல்ல....

இன்றைக்குமா..? கமலினி பயத்துடன் ஆக்கிலாவின் கையைப் பற்றினாள்... ஆக்கிலா தைரியத்தைக் கைப்பற்றினாள்.. உடன் மறுபடி வங்கியை நோக்கி விரைந்தாள்... நுழைந்தாள்... இனி...?

*(சிவப்பு தொடரும்.........)*

# முஸ்லிம் தமிழர் கிராமியக் கவியமுதம்

இதுவரை ஈழநாதம் வெள்ளி இதழ்களில் முஸ்லிம் தமிழர் கிராமியக் கவியமுதம். தொடரில் காதல், வீரம், இன ஒற்றுமை பற்றியவை எழுதி வந்தேன். பல பண்டைக்கால வரலாற்றுக் குறிப்புக்களையும் எழுதினேன்.

இத்துடன் வரும் இரண்டு பிரதிகளும், நயினாகாடு. இரட்டைக் கல்யாணம் பற்றிய நிகழ்வுகளாகும். இதில் நாகூரான் போடியார் கல்யாணப் பதிவுக்காரர், இந்து மதக் காதலர் முத்து வேலனுக்கும், மலர்விழிக்கும், கல்யாணப் பதிவு செய்ததாக எழுதியுள்ளேன். இது எப்படிச் சாத்தியமாகும் என்று யோசிப்பீர்கள். உண்மையில் அந்தக் காலத்தில் நடந்த சம்பவம்தான். அந்த நாளையில் கல்யாணப் பதிவை இந்துக்களுக்கும் போடிமார் சாட்சி வைத்துப் பதிவு செய்தது சமயச் சடங்கென்றில்லை. தமிழர் மரபிலிருந்துதான் முஸ்லிம்களாகிய பரம்பரை இவ்விதமாகச் சாட்சி வைத்துப் பதிவு செய்தவர்கள். அவர்களின பூசாரி ஐயர்களிடமும் ஒப்புக் கொடுத்தும் பின்னர் பதிந்து இன ஒற்றுமையை வலியுறுத்தி வாழ்ந்த வரலாற்றையும் இக்கவியமுதத்தில் வெளிக்காட்டவே இதனை எழுதியுள்ளேன். இன்று மத. வழி சட்டங்கள் தனித்துவமடைந்துள்ளதால் சிலர் விளங்கிக் கொள்ளவே முக்காலச் சட்ட வரம்பற்ற நிகழ்வை இதில் எழுதியுள்ளேன்.

அந்தக் காலங்களில் பேரடியார் வன்னியர் பண்ணையார் காராளர் ஆட்சி முறைகளிலிருந்தனர். போர்த்துக்கீசர், டச்சுக்காரர், ஒல்லாந்தர், பிரித்தானியர் வரைக்கும் 2000ம் ஆண்டுகளுக்கு முன்பும் இன்று 1948 வரைக்கும் அன்னிய நாட்டவர்கள் (இலங்கை பெயர் வரும்முன்) ஈழத் தீபகத்துக்கு வந்தனர். இங்குள்ள குறுநில மன்னர்களைப் போரிட்டுக் கொன்றும் சிறைபிடித்தும் இங்குள்ள பேரடியார் முதல் காராளர்கள் வரை கப்பம், பண்டங்களாக நாட்டு மக்களிடம் அறவிடுவதற்காகவே முதலாளித்துவ பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளாலும் சுரண்டுவதற்காகவே சில சட்டங்களை வகுத்தனர். நாட்டு மக்களை ஏமாற்றியும் அடக்கியும் பழைய வன்னிமையாட்சி, பேரடியார் ஆட்சி முறைகளையே கையாண்டும் வந்தனர்.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு என்ற பெயர்கள் வரும் முன் கற்பகத்தீவு, புளியந்தீவு, காரைதீவு, கருங்கொடித்தீவு, கொண்டை வெட்டான்தீவு என்று பல தீவுகளை பண்ணையார், வன்னியார், பேரடியார்கள் நிர்வகித்து வரலாயினர். இவர்களுக்கு தமிழ் மொழி எழுத்தறிவு 95 சதவீதத்தினருக்கு இல்லை. வள்ளுவர் ஆண்டு 2000 கிறிஸ்தவர் ஆண்டுகளுக்கு முன்னரும் பனையோலை புத்தகக் கட்டுக்களில் எழுத்தாணியினால் கீறல்களாக எழுதிப் படித்தனர். இவர்களில் சிலர்தான் பெயர் எழுதும் புகழ் பெற்றவர். பேரடியார் என்று திரிபடைந்து போடியார் என இன்றும் பேசப்பட்டு வருகின்றன. அக்கால மக்கள் காணி, வயல், தோட்டம், ஆடு, மாடு, காதல், கலியாணம், கற்பழிப்பு, களவு, கொலை சகலவற்றிற்கும் நீதி நியாயம் கேட்டு இந்தப் போடியார்களிடம் வருவார்கள். அக்காலங்களில் காசும் புழக்கமில்லை. நெல், குரக்கன், தானியங்களும், வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு வட்டாக் கொண்டு போடியார் சபையிடம் அன்பளிப்புச் செய்து காரியமாற்றுவர்.

இன்று நயினாகாட்டு வயல் வட்டை விதைப்பு, களை பிடுங்குதல், தண்ணி பாய்ச்சும் வேலைகளில் மலர்விழி, முத்து வேலன், ஆயிஷா பீவி, செல்ல முகம்மது காதலர் சோடிகளின் கிராமிய கவியுணர்வுகளைப் பார்ப்போம். ஆயிஷா முத்துக்கு செல்ல முகம்மது வயித்தில புள்ள. இதைப் போடியார் சபைக்குத் தெரியாமல் மறைத்து இருவருக்கும் கலியாணப் பதிவு செய்யவே கூட்டி வந்தனர். காடு, மலை, வயல், வழிகளில் வரும் போது குத்தலும், கிண்டலுமாகப் பாடி வந்தனர்.

''வெள்ளரிக்காய் கொடியில் - இந்த
வெள்ள மணலில் கிடந்தாலும்
கள்ளருக்குத் தேவல்லகா........
கச்சி வேப்பங்கா ருசிக்காதுகா....."

என்று மச்சான் முத்து வேலன் புதிர் போட்டுப் பாடி வந்தான். மலர்விழிக்கு மட்டும் விளங்கி விட்டது.

''வெள்ளரிக்காய் பெருத்து - பழம்
வெடிச்சா மணம் வருகுங்கா - மச்சான்
வழிப்போக்கர் கண்டவுடன்
வாயூறிக் களவெடுத்தும் தின்பாங்ககா...."

என்று மலர்விழி பாடியதும் செல்ல முகம்மதுக்கும் ஆயிஷா பீவிக்கும் விளங்கி விட்டது. ஆயிஷா அடி வயிற்றைத்தடவி வெட்கப்பட்டதை அவர்கள் மூவரும் பகிடியாகப் பார்த்து வந்து கொண்டிருந்தனர். நயினாகாட்டு நாகூரான் போடியாரின் மாட்டுப் பண்ணை வயல்வெளி, தென்னந்தோப்பு வாடிக்கு வந்துவிட்டனர். தீவான்

கலாபூசணம்
மருதூர்வாணர்

பரணில் சூட்டுக்கோல் காய்ச்சி முதியான் கன்றுகளுக்கு கயிற்றால் கழுத்து, கால்களைக் கட்டி பாடுகாட்டிப் பூமியில் கிடத்தி இருவர் பிடித்திருக்க போடியார் தன்பெயரை நாகூ என்று நெருப்புத் தணல்போல் தெரிந்த துறட்டி இரும்புக் கம்பியினால் குறி சுடுவதைக் கண்டதும் மலர்விழி பயந்து விட்டாள் ஆயிஷா பிள்ளை. வயிறு பொய்ச்சாட்சி சொல்லி கலியாணப் பதிவு செய்ய வந்தோமே. எங்களுக்கு இந்தச் சூட்டுக் கம்பியால் சூடு போடுவாரோ.......? எனப் பயந்தாலும் கவியுணர்வில் சமயோசிதமாகப் பாடுகிறாள்.

''நாகுப் பசுக் கன்றுக்கும் - போடியார்
நா - கூ குறி சுடுகுமாப் போல...
சேகு மம்மதுக்கும் ஆயிஷாவுக்கும் - கல்யாணம்
சேர்த்தெழுதி ஓலைத்துண்டு தாருங்ககா..."

என்று மலர்விழி போடியாரைக் கவரும்படி கவிபாடினாள். தலையை நிமிர்ந்து உற்றுப் பார்த்தார். மலர்விழியைப் போடியார் தெரிஞ்ச பெட்டைதான். பக்கத்துச் சாமித்தம்பி செய்யக்காரண்ட மகள். இவளேன் முஸ்லிமான இதுகளுக்குப் பரிந்து வந்து கவிபாடுகிறாள் எனப் போடியாரும் கவியுணர்வில்,

''கொச்சிப் பழங்களப் போல.....
குமரிமார் ரெண்டும் வந்துநிக்கியல்கா
மச்சாமார் ரெண்டு பேரும்
மறிப்பட்ட கல்யாணம் பண்ணவாகா...."

என்று போடியாரின் கையிலிருந்த சூட்டுக் கோலை ஓங்கிக் காட்டி பாசாங்கு செய்து பாடிக் கேட்டார். தங்களையெல்லாம் சுடுவது போல் பாடிய போடியாரை சமாளித்துப் பாடினாள் மலர்விழி.

''வெந்த சூட்டில;
வேகரிப்பாப் பாடுறீங்ககா போடியாரே
வந்த ஏழையள் நாங்க;
வாழவழி காட்டுங்ககா..."

''இறக்காமம் இவள் பொடிச்சி
ஏழைத் தாய். தகப்பனத் தின்னிகா....
மறக்காமே மச்சானிவகளை
மணம் முடிக்க வந்தவ... கா..."

என்று மலர்விழி பாடியதும் போடியாரின் மனம் குளிர்ந்தது. மயங்கிப் போனார்.

''நெற்றியிலே பொட்டிரிக்கி - தமிழச்சிநீ
நேசமுள்ள அழகி. பொய் பேசமாட்டாய்...
வெற்றிலை பாக்கு வெச்சி - இப்ப
விவாகத்தைச் செய்வியளா.....கா...."?

என்று பாடியதும் முத்துவேலன் வெற்றிலை (வல்லுகம்) பையத் திறந்து நாலு தலப் பாக்கும், நாலு வெற்றிலையும், புகையிலைத் துண்டும், சுண்ணாம்பும் எடுத்தார். பக்கத்து வாய்க்காலில் தாமரை இலையொன்று பிய்த்து வந்து வட்டாவில் வைத்து போடியாரிடம் நீட்டிக் கொடுத்தான். மகிழ்ந்து பார்த்துப் பாடினார்.

''நாலு பேரும் சோடி சேர
நாலு பாக்கும் நாலு வெற்றிலையும்
காலுக்கு கட்டுப் போடக் காணுமாகா...
கை எழுதக்கூலி..."

என்று பாடினார். போடியாரின் மனக் குறையைக் கேட்டதும் மலர்விழி பாடுகிறாள்.

*தொடரும்.............*

# பௌத்த மதத்தின் பெயரால் பறிபோகும் தமிழ் பிரதேசங்கள்

**“உகந்தை செல்லும் வழியில் சன்னியாசி மலை என்று ஒரு இடம் உண்டு. இது ஆடகசுந்தரி ஆட்சி புரிந்த இடம் என்றும், இந்த இடத்தில் இந்தியாவில் இருந்து வந்த கிரி என்ற வடநாட்டு ஞானி ஒருவர் மோட்சம் பெற்றார் என்றும், அதனால் இது சன்னியாசிமலை என்றும் கூறப்படுவதுடன் நேர்த்திக்கடன் வைத்து ஒரு கல்லை தூக்கி வைத்தால் வேண்டிய வரம் கிடைப்பதாகவும், வரம் கிடந்ததும் அடுத்து முறை வந்து அக்கல்லுக்கு பதிலாக வேறு ஒரு கல்லை கீழே இறக்குவதும் தமிழர் மரபு. இதை எல்லாம் தவிடுபொடியாக்கும் எண்ணத்தில் இன்று மலையிலும் ஒரு புத்தர் சிலையை வைத்தும் அதில் ஒரு சிறிய விகாரை ஒன்றைக் கட்டியும் உள்ளனர். பாணமையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற புத்தவிகாரை தமிழர்களின் காணியைச் சுவீகரித்து அதில் புத்த விகாரையும் அமைத்துள்ளனர்.”**

பௌத்த மதத்தின் பெயரால் பாரிய ஒரு யுத்தம் வருவதற்கு வழி கோலப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. திருகோணமலை நகரப் பகுதியில் புதிதாக முளைத்த ஒரு புத்தர் சிலை புதிய ஓர் பிரச்சினையை உருவாக்கியுள்ளது என்பது யாவரும் அறிந்த விடயம். ஆனால், இதை சிங்கள அரசு எப்பவோ ஆரம்பித்து விட்டது என்பது எம்மவர்களுக்கு நன்கு தெரியும்.

போரியல் ரீதியாக தமிழர் பலம் பெறும் போது அவர்களது ஒற்றுமையைச் சிதைக்கவும் இதன் மூலம் சிங்கள இராணுவத்திற்கு ஏற்பட்டு விடும் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு மதவாதிகளைத் தூண்டி காடையர் கூட்டத்தில் பலத்தையும் பெறுவதற்கே இப்படியான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.


அது மாத்திரமல்ல சமாதான காலத்தில் படையிலிருந்து விலகிய சிறிலங்கா இராணுவத்தினரின் தொகை 40,000 தாண்டி விட்ட சமாதான காலத்திற்கு முன்பிருந்து விலகியவர்களின் தொகையும் சமாதான காலத்தில் படையிலிருந்து விலகியவர்களின் தொகை 98,000 என்றும் அண்மையில் படைத்தலைமையின் அறிக்கையில் வெளியிட்டுள்ளது. இப்படி படிப்படியாக படை விலகி ஓடுவதால் படையினர் மத்தியில் போராடும் மனநிலை குறைவடைந்து வருவதால் அதை மாற்றும் நோக்கோடு மதரீதியான போராட்டங்களைக் கட்டவிழ்த்து விடுகிறது. சமாதான உடன்படிக்கைக்குப் பிற்பாடு கதிர்காமத்தில் ஏழுமலையில் இருந்த வேலை அகற்றி விட்டு அதில் ஒரு புத்த விகாரை கட்டியதுடன் அந்த வேல் இருந்த இடம் தெரியாத அளவிற்கு உருமறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் தென் தமிழீழத்திலுள்ள கூமுணை ஆற்றோரமாக கபிலத்து அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இப்பாதையால் வருடா வருடம் பாதயாத்திரை செல்லும் கதிர்காமக் கந்தன் பக்தர்கள் இக் கோயிலில் வழிபட்டுச் செல்வது வழக்கம். இப்பொழுது அங்கும் ஒரு புத்தர் சிலை அமைத்து புத்த விகாரை கட்டுவிக்கப்பட்டுள்ளது.

உகந்தை செல்லும் வழியில் சன்னியாசி மலை என்று ஒரு இடம் உண்டு. இது ஆடகசுந்தரி ஆட்சி புரிந்த இடம் என்றும், இந்த இடத்தில் இந்தியாவில் இருந்து வந்த கிரி என்ற வடநாட்டு ஞானி ஒருவர் மோட்சம் பெற்றார் என்றும், அதனால் இது சன்னியாசி மலை என்றும் கூறப்படுவதுடன் நேர்த்திக்கடன் வைத்து ஒரு கல்லைத் தூக்கி வைத்தால் வேண்டிய வரம் கிடைப்பதாகவும், வரம் கிடைத்ததும் அடுத்தமுறை வந்து அக்கல்லுக்கு பதிலாக வேறு ஒரு கல்லைகீழே இறக்குவதும் தமிழர் மரபு.

இதை எல்லாம் தவிடுபொடியாக்கும் எண்ணத்தில் இன்று மலையிலும் ஒரு புத்தர் சிலையை வைத்தும் அதில் ஒரு சிறிய விகாரை ஒன்றைக் கட்டியும் உள்ளனர். பாணமையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற புத்தவிகாரை தமிழர்களின் காணியைச் சுவீகரித்து அதில் புத்த விகாரையும் அமைத்துள்ளனர்.

பாணமையில் சாத்திர வெளி என்னும் பகுதியை (பாணமையிலிருந்து 3 கிலோமீற்றர்) புனித பூமியாக்கி இங்கும் ஒரு புத்த விகாரை புதிதாகக் கட்டுவித்து வருவதுடன் இங்கு ஒரு சிங்களக் குடியேற்றத்திற்குரிய திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் 1000 ஏக்கர் காணியை புனித பூமியாக்கி தென்பகுதிச் சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டத்தை ஆரம்பிக்கும் முகமாக பிக்கு ஒருவரின் தனிப்பட்ட நிதி மூலாமக 10 வீடுகள் கட்டுவித்துக் கொண்டிருக்கின்றனர்.



## கூர்த்திகன்

**உல்லை** - இங்கு மூவின மக்களும் இருந்த இடம். இப்பொழுது அங்கு புதிதாக புத்த விகாரை ஒன்று கட்டுவிக்கப்பட்டு 24 மணி நேரமும் படையினர் அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது போல் புத்த பெருமானுக்கும் ஆயுதம் தரித்த படையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

**பொத்துவில்** - இங்கு ஒரு புத்த சிலை ஒன்று வைக்கப்பட்டு சிறிய ஒரு புத்த விகாரை அமைத்துள்ளார்கள். அதிலிருந்து 600 மீற்றர் தூரத்தில் பெரிய ஒரு புத்த விகாரை பொத்துவில் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

**றொட்டை**- இங்கு ஒரு வீரையடிப் பிள்ளையார் கோயில் உள்ளது. அதற்கு அருகில் ஒரு புத்தர்சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு ஒரு சிறிய விகாரையும் அமைக்கப்பட்டுள்ளது.

**ஊறணி**-இங்கும் படையினர் ஒரு புத்த விகாரையை புதிதாக கட்டியுள்ளார்கள். கோமாரியிலும் புதிதாக ஒரு புத்தர் சிலை வைத்து விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தாண்டியடியிலும் ஒரு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சங்கமன்கண்டி என்ற தமிழரின் பண்டைய பெயரை சங்கமன் கந்தை எனும் சிங்கள பேச்சு வழக்கையும் திட்டமிட் வகையில் தமிழ் மக்களிடையில் திணிக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் சிறிலங்காப் படையினர் காஞ்சிரங்குடாவில் ஒரு புத்தர் சிலை அமைத்து காஞ்சனகுடா என சிங்களப் பெயராக மாற்றம் செய்துள்ளனர்.

திருக்கோவிலில் புத்தர் சிலையைக் காணவில்லை. வெளியில் புத்த சிலை இல்லாததால் உள்ளே புத்த பெருமான் இருக்கலாம் என மக்கள் சந்தேகிக்கின்றனர். சாகாமத்திலும் தற்பொழுது ஒரு புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. புராதன முருகன் ஆலயம் அமைந்துள்ள கண்ணகிபுரத்திலுள்ள மலை உச்சியிலும் தற்பொழுது புத்த பெருமான் குடி கொண்டு விட்டார்.

அக்கரைப்பற்று வைத்தியசாலையில் இருந்த விநாயகர் ஆலயம் வீழ்ச்சியடைந்து புத்த பெருமான் புதுப் பொலிவுடன் வீற்றிருக்கிறார். காரைதீவு சந்தியில் அருள் பாலித்த விநாயகர் ஆலயம் அழிந்த நிலையில் காணப்படுகின்றது. ஆனால் புதிதாக வந்த புத்த பெருமான் புதுப் பொலிவு பெற்றதுடன். கல்முனையில் இருந்த புத்தர் சிலை உடைக்கப்பட்டு திரும்ப மீண்டும் ஒரு புத்தவிகாரை உருவாகியுள்ளது.

இப்படி அம்பாறை மாவட்டத்தைப் புத்தர் சிலைகளும், புத்த விகாரைகளும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றன. படிப் தமிழர் பிரதேசத்தை அழிப்பது போல் நில அபகரிப்புக்களை சிறிலங்காப் படை மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மாணவர் பரிசுக் குவியல்

**தமிழ் பேசும் மாணவச் செல்வங்களுக்கு!**

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு மாணவர்களின் அறிவுத்திறனை விருத்தி செய்யும் வகையில் வாரந்தோறும் பரிசுத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது . மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசுக் குவியலில் நீங்களும் அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்படுமிடத்து பெறுமதி மிக்க அறிவு நூல்கள், பாடசாலை உபகரணங்கள், பரிசுகளாக வழங்கப்படும்.

நீங்கள் செய்யவேண்டியது இவை தான்,

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதி – பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி முகவரியை வெட்டியொட்டி அனுப்புதல் வேண்டும்.

முதலாவது அதிஷ்டசாலிக்கு பரிசும், பாராட்டுப் பெறும் ஐந்து மாணவர்களின் பெயர், பாடசாலை விபரங்களும் பிரசுரிக்கப்படும்.

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி:-11.07.2005**

அனுப்பவேண்டிய முகவரி

**மாணவர் பரிசுக்குவியல்-40**
**ஈழநாதம் (மட். பதிப்பு), பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

**இவ்வார வினாக்கள்:-**

01. சுனாமிப் பொதுக் கட்டமைப்பு எப்போது கைச்சாத்திடப்பட்டது?
02. சீனாவின் துயரம் எனக் கருதப்படும் நதி எது?
03. இலங்கையில் தேசிய கல்வி நிறுவகம் அமைந்துள்ள இடம் எது?
04. சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
05. சவூதி அரேபியாவின் தலைநகரம் எது?

## பரிசுக்குவியல் 38 இற்கான சரியான விடைகள்

01. ஜூன் 9ம் திகதி 2005ஆம் ஆண்டு. 02. செப்ரம்பர் - 08.
03. ஆஜென்ரீனா 04. கறுப்புப் பெட்டி. 05. நெப்தியூன்.

## பரிசுபெறும் அதிஸ்டசாலி

**ச.சோபனா**
**தரம்-12 Bகலைப்பிரிவு**
**மட்-புனித சிசிலியா பெ.தே.பா.**
**மட்டக்களப்பு**

## பாராட்டுப்பெறுவோர்

01. க.காயத்திரி, மட்-கரடியனாறு ம.வி.
02. பி.பிரசன்னியா, தரம் – 11, மட்-செட்டிபாளையம்.ம.வித்தி.
03. ஆ.வித்தியாசினி, மட்-செங்கலடி.
04. பீ.தீபா, தரம் -08. மட்-மகிழவட்டவான் ம.வித்.
05. ஏ.லோஜினி, தரம்- 06, அரசடித்தீவு வி.ம.வித்தி.

**மட்டு நகரில் சகலவிதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் அறிவு நூல்களுக்கு :-**




**தொ.பே.இல:- 065-2222371 065-2225341**




என்னுயிர் நாதமே!
எங்கள் ஈழநாதமே.....
உணர்விலே கலந்து
உயிரிலே உறவானாய்.
நீ அகவை ஒன்றையல்ல
ஆயிரம் அகவையைக்
கடந்து விட்டதாகவே
எண்ணத் தோன்றுகிறது.
எங்களுக்கு
நீ உண்மைகளைக்
கூறுவதில் என்றுமே
உறுதியானவன்.
உன் வீர வேங்கைகளின்
வெற்றியினைப்
பிட்டுக் காட்டுவதில்
மக்களெல்லாம்
பூரிப்படைகின்றனர்.
வாராவாரம் வரும்
வாரமலரில் தான்
எத்தனை உணர்ச்சி;
எத்தனை எழுற்சி;
தீந்தமிழர்க்கெல்லாம்
தித்திக்கும்
தேனமுதமான நாதமே
உன்னில் வரும்
அனைத்து அம்சங்களும்
மிகவும் அற்புதம்
நீயென்றும் உலகநாதமே.

**ந.சுமதி**
**சேனைக்குடியிருப்பு - 01.**
**கல்முனை.**

வார இதழே நீ வாழ்க!
சிறு மொட்டாய் நீ தோன்றி
சிந்தனைக்கு விருந்தூட்டி
சிறப்பாக நாடெங்கும் சிந்தும்
என் ஈழ நாதமே
சிங்கார நடை போட்டு சிகரம் போல்
பவனி வரும் இதழே நீ வாழ்க!

உண்மையான விளக்கங்கள்
உள்ளடக்கும் உன் இதழ் தன்னில்
விண்ணவளின் முலை சுரக்க
விடுவிக்கும் உண்மை சம்பவங்கள்
விளை நிலமாய் நாற்றிடுமே
விறுவிறுக்கும் கருத்தாழம் மிக்க நீ
விழி மதி போல் வாழ்க! வாழ்க!!

விடுதலை என்னும் விருட்சத்தின்
மண்காக்கும் நற்பணியில் மனிதர்கள்
நலனேங்கும்
மடமை தனைத் தகர்த்தெறிந்து
மனதில் மழை பெய்ய வழிகாட்டும்
இதழே நீ வெள்ளி தோறும்
மலர்வாய் ஈழநாதமே
மணம் வீசும் நன் மலரே
நீ வாழ்க! வழமாக!

**நே.யசோராஜ்**
**மட்-கிரான்குளம் விநாயகர் ம.வித்.**




## முஸ்லிம்களின்..

இரண்டு நிர்வாகக் கட்டமைப்புக்கள் விரும்பியோ விரும்பாமலோ கடந்த 20 வருடங்களாக இயங்கி வருகின்றன. ஒன்று சிறிலங்கா அரச நிர்வாகக் கட்டமைப்பு மற்றையது விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு இந்த இரண்டு கட்டமைப்புக்களும் இணைந்தால் மட்டுமே வடக்குக் கிழக்கில் உள்ள அரச கட்டுபாட்டுப் பகுதியானாலும் சரி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியானாலும் சரி எந்தவொரு அபிவிருத்தித் திட்டமும்தங்கு தடைகளின்றி நிறைவேற்றமுடியும். இதன் ஒரு வெளிப்பாடுதான் இந்த பொதுக்கட்டமைப்பாகும். பொதுக்கட்டமைப்பு உடன் படிக்கையில் சிறிலங்கா அரசின் பிரதிநிதியும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதியும் மட்டுமே கையொப்பம் இட்டமைக்கான நியாயமான காரணம் இதுதான்.

போராட்ட காலத்தில் முஸ்லிம் மக்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லையென நாம் கூறவில்லை.

முஸ்லிம் மக்களை புறம்தள்ளி எந்த ஒரு தீர்வும் வடக்குக் கிழக்கில் சாத்தியப்படாது என்பது யாவரும் அறிந்த ஒன்றே.

எனினும், இந்தச் சுனாமிப் பொதுக் கட்டமைப்பில் இனப்பூர்வாங்கம், பால், நிலை, மொழி, மதம், அரசியல், பூர்வாங்கம், அந்தஸ்த்து போன்ற எந்தவொரு நபருக்கும் எதிராக பாரபட்சம் காட்டப்படமாட்டாது எனவே, முஸ்லிம்கள் வீணாக அஞ்சத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

SINGAPORE INFORMATICS
COMPUTER SCHOOL
BATTICALOA CENTER

Special Scholarships For IT Skills
I T FOR EVERY ONE -2005
சகலருக்குமான கணனி தகவல் தொழில்நுட்ப கல்வி 2005

SINGAPORE INFORMATICS மட்டக்களப்பு நிலையம் கிழக்கு வாழ் மக்களின் கணனி அறிவை விருத்தி செய்யும் பொருட்டு மாணவர்களுக்கு விசேட புலமைப் பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது. இந்த விசேட புலமைப் பரிசில்கள் General Atitude (பொது உளச்சார்பு) பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு வழங்கப்படும். அத்துடன் மாணவர்கள் தெரிவு செய்யும் கற்கை நெறியுடன் மேலதிகமாக மற்றுமொரு தொழில்சார் கற்கைநெறி இலவசமாக வழங்கப்படும்.

இப்போட்டிக்கு பங்குபற்ற தகுதியுடையவர்கள்

G.C.E.(A/L) பரீட்சை எழுதி முடித்த மாணவர்கள் பாடசாலை படிப்பு முடித்த மாணவர்கள் (School Leavers)
அலுவலக உத்தியோகத்தர்கள் (Professionals)

நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

இத்துண்டுப் பிரசுரத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிரப்பி நேரில் அல்லது எமது விசேட உத்தியோகத்தர் மூலமாக அல்லது தபால் மூலமாக எமது நிலையத்திற்கு அனுப்பி வைக்கவும்

பொது உளச்சார்வு (Genaral Atitude) பரீட்சை நடைபெறும் நேரம் என்பன மாணவர்களுக்கு அறிவிக்கப்படும் (பரீட்சை முடிவுகள் உடன் அறியத்தரப்படும்)

பரீட்சையில் சித்தியடைபவர்கள் தாங்கள் விரும்பிய கற்கை நெறிகளை புலமைப் பரிசில் மூலம் தொடர முடியும் விண்ணப்ப முடிவுத் திகதி 08.07.2005

உலகம் முழுவதும் 600இற்கு மேற்பட்ட நிலையங்களை கொண்டுள்ள SINGAPORE INFORMATICS நிறுவனம் சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனி கற்கை நெறிகளுக்கான சான்றிதழ்களை வழங்கி வருகின்றது. இலங்கையில் மட்டும் 22 நிலையங்களை கொண்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பப்படிவம்

மாணவரின் பெயர்------------------------------------------------

முகவரி: ------------------------------------------------

------------------------------------------------

திகதி

மாணவரின் கையொப்பம்

மீனாட்சி ஜுவலரி



இல.9 முனை வீதி, 1ம் குறுக்கு
மட்டக்களப்பு

Meenatchi Jewellry
No.09, Munai Street, 1st Cross
Batticaloa.
Phone. 065-2226993


# ஆலய உற்சவங்கள்

மட்/பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான்
ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும்
யூலை 8ம் திகதி ஆரம்பமாகி
15.07.2005 அன்று பிற்பகல் தேசத்து
பொங்கல் மற்றும் இரவு பொதுத்
திருவிழாவுடன் நிறைவு பெறும்.






வீரமுனை விநாயகர் ஆலய வருடாந்த
உற்சவம் எதிர்வரும் யூலை 3ம் திகதி
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
யூலை 12ம் திகதி தீர்த்தோற்சவத்துடன்
நிறைவு பெறும்.

மட்/களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய
வருடாந்த அலங்கார உற்சவம்
யூலை 4ம் திகதி ஆரம்பமாகி
யூலை 13ம் திகதி புதன்கிழமை
தீர்த்தோற்சவத்துடன்
நிறைவு பெறும்.



## மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு



மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் மட். மண்டூர் இல14 அ.த.க பாடசாலையைச் சேர்ந்த செல்வன் கிருபானந்தன்- டிலோசன் 11 வயதுக் குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தை பெற்று மாகாண மட்டப்போட்டிகளில் கலந்துகொள்கிறார்.



தேசிய, சர்வதேசிய ரீதியில் நடைபெற்ற கராத்தேச் சுற்றுப் போ ட்டிகளில் வெற்றி பெற்ற அம்பாறை மாவட்ட கனிஷ்ட கராத்தே வீரர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் நிகழ்வொன்று கிளிநொச்சியில் 22 ஆம் நாள் இடம்பெற்றுள்ளது. தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப தமிழ்ச் செல்வன் அவர்கள் கலந்து கொண்டு இளம் வீரர்களுக்கு நினைவுப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்துள்ளார்

இந்நிகழ்வில் தமிழீழ கராத்தேச் சம்மேளனத் தலைவர் சோதி மாஸ்ரர், அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ரதன் ஆகியோருடன் வெற்றியீ ட்டிய அம்பாறை மாவட்ட வீரர்களின் பிரதம பயிற்றுவிப்பாளரும் வடக்குக் கிழக்கு கராத்தே சம்மேளனத்தலைவரும் JKMOவின் அம்பாறை மாவட்ட பிரதம போதனாசிரியரு மான சென்சி T.K கேந்திரமூர்த்தி (4th Dan) அவர்களும் அவரது சிரேஸ்ட கறுப்பு பட்டி மாணவர்களும் கலந்து கொண்டனர்.




தமிழர் தாயகத்தில் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களை இணைக்கும் வெருகல் ஆற்றுக்கு பாலம் இல்லாத குறைபாடு நீண்ட காலமாக இருந்து வருகிறது.

ஆள்விழுங்கும் முதலைகளுக்கு அஞ்சியே மக்கள் பயணிக்கும் அவலநிலை. கடந்த 1976ம் ஆண்டு சிறிலங்கா அரசியின் அமைச்சர் ஒருவர் பாலம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். ஆனால் இதுவரை எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இது வரை மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிக்கு வந்து போய்விட்டார்கள். ஆனால், யார் கவனித்தார்கள்? இப்போதுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாவது இதனைக் கவனிப்பார்களா? மாமனிதர் டி.சிவராம் அவர்கள் மட்டக்களப்பு ஈழநாதத்துக்காக பிடித்த ஒளிப்படம் இது. மேலும் நமது இணையத்தளத்துக்காக படங்களை தயார் செய்து கொண்டிருந்த தருணத்தில், தமிழ் தேசியத்துக்கு எதிரானவர்களால் அவர் இல்லாமல் ஆக்கப்பட்டார்.



மட்டக்களப்பு, கல்முனை, வாழைச்சேனை, களுவாஞ்சிகுடி ஆகிய லயன்ஸ் கழகங்களின் ஆண்டு நிறைவு விழாவின் போது பிரதம அதிதிகள் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்



சுனாமிக்கு பின்னரான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வரும் கண்டி மனித அபிவிருத்தி தாபனத்திற்கு சிசிஎவ்டி நிறுவனம் நிதியுதவி வழங்குகிறது. தாபனப் பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசம், இணைப்பாளர் பி. ஶ்ரீகாந், றியால் ஆகியோர் சிசிஎவ்டி பிரமுகருடன் பேசுவதை படத்தில் காணலாம்.


இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 01– 07– 2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது



F:\Weekly COVER PAGE 01\01-07-2005.cdr